ஸஞ்சிகை 16

ஸ்ரீ வாணீ விலாஸினீ.

பராபவஹூ

ஆடிமீ

ஸ்ரீரங்கம்
ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்.
1906.

Copyright Registered.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
30 MAR 1907
MADRAS.

THE MADRAS LAW TIMES.

A Cheap, ILLUSTRATED "Multum in Parvo" Legal Periodical.

Published **Fortnightly** in Four Separate Parts.

"Well conducted" and "Ably Edited" with the co-operation of eminent Editorial and regular Reporting Committees.

Warmly welcomed by the PROFESSION.
Proudly patronized by the PUBLIC.
Eminently extolled by the PRESS.

Main Features:—

(1) Biographical sketches of the Bench and the Bar.

(2) Beautiful Portraits of Judges and Lawyers.

(3) Contributions by eminent Lawyers and Jurists.

(4) Cream of Contemporary Legal Literature.

(5) Notes and Discussions on Current Legal topics.

(6) Verbatim Reports of all Privy Council cases.

(7) Prompt publication of important decisions of all the Indian High Courts.

(8) "Well arranged" Digest of every one of the cases reported and noted in all the Indian Law Reports and Journals, official and private.

(9) Summary of all interesting English and American Cases, and notes of Privy Council Cases.

(10) Free supply of all Acts, Regulations, Rules and Circulars passed and issued by the Government of India, the Local Governments and the Indian High Courts, and Boards of Revenue.

(11) A consolidated Digest and a periodical abridgment and Current Index.

(12) High-class printing and neat get-up.

Annual Subscription:— Rupees Twelve. *(Post Free).*

A good Advertising Medium.

Address all orders and communications to,

"THE MADRAS LAW TIMES OFFICE,"

HIGH COURT BUILDINGS,

MADRAS.

WORKS BY A. GOVINDÂCHÂRYA, C. E., F. T. S.

(Veda-Griham) MYSORE.

1. **The Bhagavad-Gîtâ,** with Sri-Râmânujâ's Commentary, translated into English. 600 Pages, Demy. 8vo. Cloth Rs 6; Paper Rs 5-0-0.

Highly spoken of by Prof. Max Muller, Dr. Pascal of France and others.

2. **The Holy Lives of the Azhvars** or Drâvida Saints, with Table of the 108 Holy Shrines and the Hierarchic table, 303 Pages, Crown 8vo. in English Rs 1-8-0

Sri Yogi Pârthasarathi Aiyangàr B.A., B.L., speaks of this work as :—"My learned and pious friend A. Govindâchârya's invaluable work."

3. **The Divine wisdom of The Drâvida Saints,** 255 Pages, Demy 8vo. in English ... ... Rs 2-0-0.

*'In this, he digs into the rich mine of Southern Indian Wisdom, and brings to the surface many rare gems hitherto unknown . * * * The work is written by a Bhakta for Bhaktas, and such will find in it pleasant and helpful reading" [Central Hindu College] Magazine.*

4. **Three Lectures on Inspiration, Intuition and Ecstasy.** 214 Pages, Crown 8vo. in English

Part I; Occidental.
Part II; Oriental.
Part III; Theosophical.
Per Set: Rs 1-2-0.

For golden opinions, See the Theosophist, the Siddhânta Dîpika &c.

5. **The Rationale of Image Worship,** by Yogi S. Pârthasârathi Aiyangar in English ... Rs 0-6-0

Inaugural address on Theosophy in English Rs 0-1-0

Apply to:—

THE MANAGER,
Bookselling Department,
Sri Vani Vilas Press,
SRIRANGAM.

Our Specialities

Enlargements on permanent bromide finished in artistic styles.

Postage Stamp Portraits of the size and shape of stamps reproduced from any photograph at Rs 6-0-0 per 100 Rs 3-0-0 for 50 and Rs 1-12-0 for 25.

Engravings for printers' use in line and half-tone. Samples and prices of these forwarded on application.

Rates strictly moderate.

Correspondence solicited.

S. K. LAWTON & Co.,

PHOTOGRAPHIC ARTISTS &C.

JAFFNA, CEYLON.

Law Examination Manual Series.

By T. R. DESAI, B.A., L.L.B.,

Hgh Court Vak l, BOMBAY.

Latest editions: Case Law up to date with facts of typical cases; very cheap.

1. **Law of Contract**. To be read with and helps to revise, Cunningham and Anson .. .. .. Rs. 3—0—0.
2. **Principles of Equity,** with English and Indian Law of Mortgage, Trusts and Specific Relief Act and the Transfer of Property Act. .. .. Rs. 3—0—0.
3. **Law of Torts.** (Parekh) Companion reader to Pollock's treatise on Torts, with 125 typical problems .. Rs. 2—0—0.
4. **Law of Limitation,** with the whole text, Commentary and 100 Examination Questions and Answers; Useful to Practitioners also. .. .. Rs. 3—8—0.
5. **Law of Registration, Court fees and Stamps;** No reported cases are omitted; Impoitant ones are marked Rs. 3—0—0.
6. **The Criminal Procedure Code.** An analytical Commentary, L.L.B., Examination Questions and Answers and a brief summary of the Code; Useful both for students and practitioners. Rs. 3—8—0
7. **The Indian Penal Code Manual.** A catechetical Commentary; typical cases selected as illustrations under the different offences; Questions (with answers) set at the L.L.B., High Court and District Pleader's Examinations during the last 15 years numbering over 150 are given in the appendix. Elements of important offences distinctly given. .. .. Rs. 3—0—0.
8. **The Civil Procedure Code Manual**. The same plan as the Indian Penal Code Manual. The only manual on the subject. .. .. Rs. 3—0—0.
9. **The Indian Succession Act**. Hindu Will's Act ; Parsi Succession Act ; Registration Act ; Easements Act ; Negotiable Instruments Act : Deccan Agriculturist's Relief Act; With the University Examination Questions on each of these Acts and also on Mahomedan Law from 1891—1905. .. .. Rs.2—8—0.
10. **Hindu Law.** Second Edition. Entirely re-written. Contains 430 pages. Banerji J. "Very useful manual." Gosh J. Very useful to Students. *Advocate of India.* "The best analysis of Mayne's Hindu Law." 3—8—0.
11. **The Law of Evidence.** (Second Edition is being printed at the Sri Vani Vilas Press and will be out shortly) Students can dispense with all bulky commentaries.

For copies of the above books apply to,

The Manager,
Book-Selling Department.
Sri Vani Vilas Press,
SRIRANGAM.

WORKS BY

M. C. Satakopachariar.

SANSKRIT PANDIT,

SRIRANGAM.

1.	**Samasadipika.** A treatise on Sanskrit compounds with explanation in English, very useful to Students of the High School Department.	0 2 0
2.	**Sabdaratnamala.** A book on Sanskrit Declensions, with conjugations of certain important verbs (IV Edition, revised and enlarged) Approved by the Director of Public Instruction as a text-book for Lower Secondary classes.	0 3 0
3.	**Harshacharitasara.** (II Edition. Revised and enlarged)	0 4 0
	Niroshthyaramayanasangraha. Written in beautiful stanzas of various metres together with a Dandaka. The chief feature of this book is that none of the labials, *viz.* उ, ऊ, ओ, औ, प, फ, ब, भ, म, व and · is used anywhere in the book	0 2 0
5.	**Raghuvamsa.** (Cantos IX-XI) with an easy commentary, Translation and Notes	0 6 0
6.	do (Cantos XII-XVII) do ..	0 8 0
7.	**Kumarasambhava.** (Cantos I-V) do ..	0 8 0
8.	**Meghaduta.** (Complete) do ..	0 8 0
9.	**Nagananda** (Complete) do ..	1 0 0
10.	**Nitisataka.** (of Bhartrihari) do ..	0 8 0
11.	**Balakanda.** (of Bhojachampu) do ..	0 8 0
12.	**Malavikagnimitra.** (complete) do ..	0 12 0
13.	**Aryasataka.**	0 1 0
14.	காதம்பரீஸாரஸங்கிரகம். (A beautiful story in Tamil)	0 2 0

Apply to:—

THE MANAGER,

Bookselling Department

SRI VANI VILAS PRESS,

Srirangam.

விஷயங்கள்.

1. ஸ்ரீ ராமாநுஜசரிதம்.
   ஸ்ரீ ச்யாமதேசிக திருமலைதாதாசாரியார். 313
2. இந்திரா. எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு. 324
3. கடவுள் நிச்சயம். ம. வீ. மீனாக்ஷிசுந்தர முதலியார் பி.எ. 359
4. கிறிஸ்துபோன்ற ஒழுக்கமுறை நூல். ஆத்மநாதன். 370
5. பட்ருடீன் டயாப்ஜீ. (படத்துடன் கூடியது.)
   பி. ஆர். கிருஷ்ணமாசாரியர். 379
6. பழிக்குப்பழி. சருக்கை இராமசாமி ஐயங்கார் பீ.எ. 392
7. சென்ற மாதம். 399
8. பெண்மணி. தி. வெங்கடராமையங்கார். 405
9. சிறுவர்க்கான பக்கங்கள். 409

Action Songs, Songs on Object Lessons

AND

Kindergarden Stories.

(IN TAMIL)

BY

C. K. NARAYANASWAMI AIYAR, *Head Master Government Girls, School, Madura.*

SECOND EDITION REVISED AND ENLARGED.

Price Annas 6 Postage Exclusive.

Apply to THE MANAGER,

Bookselling Department,

SRI VANI VILAS PRESS, ***Srirangam.***

READY FOR SALE.

University of Madras.

First in Arts Examination.

QUESTION PAPERS

ON

The English Language.

For the past 35 years

1871—1905,

Price Annas 4 only per copy.

Apply sharp, as only a limited No. of Copies are printed.

BEAUTIFULLY GLAZED

Fancy Pictorial . . Post Cards.

Hundreds of Designs to choose from.

Rs. 2-4-0 only, per 1000.

Special concessions are allowed on large orders.

Apply to:—

THE MANAGER,

Bookselling Department,

SRI VANI VILAS PRESS,

Srirangam.

ஸ்ரீவாணீ விலாஸினீ

வா 3. பராபவஹூ ஆடிமீ ந. 16.

ஸ்ரீ ராமாநுஜ சரிதம்.

இது நிற்க; பெரிய திருமலைநம்பியின் இரண்டாவது உடன் பிறந்தாளான பெரியபிராட்டியாரை மதுரைமங்கலம் வட்டமாரி கமலநயனபட்டருக்கு விவாஹம் செய்து கொடுத்திருந்ததல்லவா? அவருக்குச்சாலிவாஹந சகம் 948-க்கு கலி 4127 ஆவதான குரோதனஹூ தைமீ பூர்ணிமை ஸோமவாரம் கூடிய புநர்வஸு நக்ஷத்திரத்தில் ஓர் குமாரர் பிறந்தார். முறைப்படி ஜாதகர்மம் நடந்தது. பன்னிரண்டாவது

நாள் இராமானுஜாசாரியருக் கெவ்விதம் நடந்ததோ அவ்விதமே இவர் மாமாவாகிய பெரியதிருமலைநம்பி யிவருக்குத் தப்த முத்ராங்கனம் செய்து கோவிந்தபட்ட ரென்று நாமகரணம் செய்தார். அன்னப்ராசனம், செளளம், உபநயனம், இவைகள் காலத்தில் நடந்தன. தக்க குலத்தில் விவாஹம் நடந்தேறியது.*

இராமானுஜாசாரியரும், கோவிந்தபட்டரும், மாமாவாகிய பெரிய திருமலைநம்பியிடத்தில் ஸ்ரீ வைஷ்ணவ ஸமயாசார தீக்ஷையாகிய பஞ்சஸம்ஸ்காரம் பெற்று ஸாங்கமாக வால்மீக ராமாயணபாராயணம் செய்தவர்களாகையால் விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தின் ஸாரார்த்தங்களை முற்றும் உணர்ந்தவர்களா யிருந்தார்கள்.

இராமானுஜாசாரியர் வேதாந்த பூர்வபக்ஷம் வாசிக்கும் வ்ருத்தாந்தத்தைக் கேட்ட கோவிந்தபட்டரும் காஞ்சீபுரம் வந்து யாதவப்ரகாச ஸ்வாமிகளிடத்திலே வேதாந்தம் வாசிக்கத் தொடங்கினர். வேதாந்தம் வாசித்த ஒழிவு காலங்களில் இராமானுஜாசாரியர் கோவிந்தபட்டருக்கு நியாயம், வியாகரணம், மீமாம்ஸை முதலிய சாஸ்த்ரங்கள் பாடம் சொல்லி வந்தார். இதையறிந்து யாதவப்ரகாச ஸ்வாமிகள் மனத்தில் சிறிது அஸூயை கொண்டனராம். இக்காலத்திய பண்டிதர்களின் சீலம் முற்காலத்தும் உண்டு போலும். ஆயினும் யாதவப்ரகாசர் தீர்க்கயோசனை யுடையவராகையால் அதை வெளிக்காட்டினரல்லர்.

---

* குறிப்பு:—இந்தகோவிந்தப்பட்டர் இராமானுஜாசாரியர் அவதரித்த பிங்களவர்ஷம் தைமாதமே பிறந்தாரென்று ஸ்ரீராமானுஜ திவ்விய சரிதம் என்னும் நூலில் கூறப்பட்டிருக்கிறது. ஸாமாந்ய சாஸ்த்ரங்கள் வாசித்து முடிந்தபின் வேதாந்த பூர்வபக்ஷம் வாசிக்க வந்தாரென்றும் இராமானுஜாசாரியரிடத்தில் அதைத்தான் சிந்தனைசெய்து வந்தாரென்றும் அந்நூலாசிரியர் கூறுகிறார்.

உபநிஷத்து பாடம் நடந்து வருகையில் ஒருநாள் தைத்திரீயோபநிஷத்து ஆநந்தவல்லியில் ' सत्यंज्ञानमनन्तंब्रह्म ' என்னும் வாக்கியம் பாடமாய் வந்தது. அப்போது யாதவப்ரகாச யதிகள் அந்த வாக்கியத்தைத் தம்மதக்கோட்பாட்டுக்கிணங்க வ்யாக்கியானம் செய்தார்கள்.

இதைக் கேட்ட இராமானுஜாசாரியர் மனத்தில் ஒருவிதமான அதிருப்தியை யடைந்தார். மகா மதியூகியாகிய யாதவப்ரகாசர் இதைக் குறிப்பாலறிந்து இவரைச் சுட்டி 'உமக்கு நாம் கூறிய பொருள் பொருந்தியதாகத் தோன்றவில்லை போலும்' என்றார். அவர் ஆம் என்றதன் பின்னர் 'இவ்வாக்கியத்துக்கு நீர் பொருள் கூறும் பார்ப்போம்' என்ற யாதவப்ரகாசர் உத்திரவின்படி இராமானுஜாசாரியர் பொருள் கூறினர்.

இதைக்கேட்ட யாதவப்ரகாச ஸ்வாமிகளுக்கு மனத்தில் உண்டான கோபத்திற்கும் வருத்தத்திற்கும் அஸூயைக்கும் அளவேயில்லை. ஆனாலும் அவர் வெகு புத்திசாலியாகையால் அதையெல்லா மொருவருமறியாமல் மறைத்துக்கொண்டு இராமானுஜாசாரியரைக் கொண்டாடி நீர் உபந்யாஸம் செய்வது கம்பீரமாயிருக்கிறது. இதுதான் விசிஷ்டாத்வைத மதத்தின் கோட்பாட்டுக்கிசைந்த அர்த்தம், என்று புகழ்ந்து மேலே பாடத்தை நடத்திவந்தார்.

மற்றொரு நாள் யாதவப்ரகாச ஸ்வாமிகளுக்கு இராமானுஜாசாரியர் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருக்கையில் யதீசுவரர் சாந்தோக்கியோபநிஷத்து பாடம் சொல்லிக்கொண்டிருந்தார். அதில் அந்தராதித்ய வித்யாப்ரகரணத்தில் ' तस्य यथा कप्यासं पुण्डरीक मेवमक्षिणी ' என்னும் வாக்கியத்துக்கு 'கபி' என்பது குரங்கு, அதின் 'ஆஸம்' ப்ருஷ்டம், குரங்கின் பிருஷ்டம் போலும் தாமரைபோலும்

உள்ளது பரப்ருஹ்மத்தின் சண்கள் என்று யதீசுவரர் பொருள் கூறினார்கள். சிஷ்யர்கள் அனைவரும் ஆனந்தமாய்க் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இராமானுஜாசாரியர் இதைக்கேட்ச ஸஹிக்கவில்லை. மனவருத்தமுண்டாய்க் கண்களில்நீர் ததும்பியதிகள்தொடையில் விழுந்தது. அது வெந்நீர்போல் மிகச் சுடுகையாயிருந்ததால் யாதவப்ரகாசர் திடுக்கிட்டுத் தலைநிமிர்ந்து ராமானுஜாசாரியரைப் பார்த்தார். அவர் கண்களில் ஜலம் தாரையாய்ப் பெருகுவதைக் கண்டார். திடுக்கிட்டு 'இராமானுஜாசாரியரே! ஏன் அழுகிறீர்' என்று கேட்டார். இப்போது தாங்கள் கூறிய அர்த்தத்தைக் கேட்டதும் தன்னடையே எனக்குத் துயரம் வந்ததென்றார் இராமானுஜாசாரியர்.

'நீர் வேறுவகையாய்ப் பொருள் கூறுவீரா' என்று யதிகள் கேட்க, 'கம் என்பது ஜலமாகையால் அதை ஆகர்ஷிக்கும சக்தியுடைய ஸூர்யனுக்குக் கபி யென்றுபெயராய் அவனால் விகஸிப்பிக்கப்பட்ட தாமரைபோன்ற கண்களென்று கூறலாமே' என்று இராமானுஜாசாரியர் சொன்னார்.

இதைக் கேட்ட உடனே யதிவரருக்கு அடங்காக் கோபம் பிறந்தது. அடக்கமும் மரியாதையுமின்றி நாம் கூறியதை யிகழ்ந்து வேறு கூறுவது மாணுக்கனுக் குரியதோ என்று உதாவஸித்த யதீசுவரரைத் தங்கள் உத்திரவுப்படிக்குத்தானே நான்கூறத்தொடங்கினேன். அப்படி உத்திரவு செய்யாதிருந்தால், என் மனத்தோடிருக்குமே என்று பணிவாய்த் தெரிவித்துக் கோபத்தையாற்றி வைத்தார் இராமானுஜாசாரிய ஸ்வாமிகள். பிறகு கிரமப்படி பாடம் நடந்து வந்தது.

அந்தக் காலத்தில் அத்தேசத்தை மநுநீதிவழுவாமல் ஓரரசன் பரிபாலனம் செய்து வந்தான்.

[ஸ்ரீ ராமானுஜாசாரிய ஸ்வாமிகளின் சரித்திரத்தை யெழுதிய நம்முன்னோர்கள் கேவலம் வேதாந்திகளாகை யால் இவ்வரசன் இன்னானென்பதையும் இந்த இடத்தி லிருந்து அரசு புரிந்தானென்பதையும் விவரித்துக் காட்ட வில்லை. காஞ்சிபுரத்தில் பல்லவ ராஜாக்கள் பலநாள் அரசு புரிந்திருக்கிறார்கள். தேவராஜஸ்வாமி தேவஸ்தா னம் கோபுரவாசலில் சிலாசாஸநம் செய்யப் பட்டிருக் கிற

“ सजननी सपिता समहानिधि स्सतनयस्सगुरुस्ससखाचमे ।
भजतियो वरदस्यपरद्वयं मतमिदं ननुतिक्क महीपतेः ॥ ”

என்கிற ச்லோகத்தால் திக்கராஜா என்னும் ஓர் அரசன் வரதனிடத்தில் மஹா பக்தனாயிருந்ததாய் ஏற் படுகிறது. அதேயிடத்தில் மற்றோர் புறத்தில் சிலாசாஸ நம் செய்திருக்கிற

जित्वाकेरळमुद्रमग्यमगथन्निर्जित्यवंकाधिपं
भित्वाक्षेममुदस्य होय्सळपतिं विद्राव्यचोळेश्वरम् ।
भङ्क्त्वाकाठकदुर्गमान्ध्रनृपतिं हत्वाधिरुढस्तुलां
काञ्च्यां सुन्दरपाण्डयभूमृदशिषत्पट्टाभिषिक्तोमहीम् ॥

என்கிற மற்றொரு சுலோகத்தால் மஹா வீரனாகிய ஸுந்தரபாண்டியனென்பவனொருவன் காஞ்சிபுரத்தில் அரசு புரிந்ததாக ஏற்படுகிறது. இந்த இரண்டு சாஸநத் திலும் வருஷம் குறிப்பிடப் பட்டிருக்கவில்லை. அவ்வி ரண்டு சுலோகங்கள் எழுதியிருக்கும் எழுத்துக்கள் பழ மையாயிருக்கின்றன. கவர்ண்மெண்டார் வெகு பிரயா ஸப்பட்டு கல்வெட்டுக்களையும் செப்பேடுகளையும் பரி சோதனை செய்து ஒருவாறு காலநிர்ணயம் செய்கிறார்க ளென்றாலும் நமக்கு நம்பத்தக்க முகாந்தரம் கிடைக்கும் வரையில் முடிவாய் எதுவும் சொல்ல நமக்குத் துணிவு

பிறக்கவில்லை. அன்றியும் சோழ அரசர் சிலரும் காஞ்சீபுரியில் ஆண்டதாகச் சரித்திரத்தால் ஏற்படுகிறது. இதன் நிச்சயம் தெரியாமையால் நாமும் பொதுவாய்க் கூறிவிட்டோம். தக்க முகாந்தரம் கிடைத்தால் பின்னர்த் தெரிவிப்போம்.]

அவ்வரசனுக்குப் பட்டத்துக் குரிய மகனொருவனேயிருந்தான். அவனை ஒரு பிருஹ்மரக்ஷஸ் பிடித்துக் கொண்டிருந்தது. அதை ஓட்ட அரசன் பலவித முயற்சி செய்தும் சித்திபெறாமல் துயரப் பட்டுக்கொண்டிருக்கையில் அருகே யிருந்த சிலர் யாதவப்ரகாச ஸ்வாமிகளின் மாந்திரிக பலத்தைப் புகழ்ந்து அவர்கள் இங்கே விஜயம் செய்தால் இது நீங்கிவிடுமென்று கூறினார்கள். அரசனிதைக்கேட்டு மந்திரி பிரதானி முதலியவர்களுடன் யதீசுவரரிடம்வந் தடிபணிந்து தன் குறையைக் கூறித் தன் துயரத்தைப் போக்கித் தன்னை இரக்ஷிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து நின்றான்.

யதீசுவரரும் அரசன் வேண்டுகோளுக் கிணங்கித் தாம் அதை ஓட்டி விடுவதாக பிரதிஜ்ஞை செய்துவிட்டுத் தம் அந்தரங்க சிஷ்யரொருவரை அரசன் மாளிகைக்கு அனுப்பி 'உன்னை உடனே இவ்விடம் விட்டுத் தூர ஓடிப் போம்படியாக யாதவப்ரகாச ஸ்வாமிகள் உத்திரவு செய்கிறார்கள்' என்று சொல்லும்படி செய்தார்கள். இந்த வாக்கியத்தைக் கேட்ட பிருஹ்மரக்ஷஸ் பெருநகை நகைத்துக் காஞ்சீபுரத்தை விட்டுக் காசிக்கு ஓடிப்போம்படி யாதவப்ரகாசனுக்கு நான் உத்திரவு செய்கிறேனென்று பதில் சொல்லியனுப்பியது.

இதை யறிந்து யதீசுவரர் மிக்க கோபத்துடனே சிஷ்யர்களனைவரையுங் கூட்டிக்கொண்டு மஹா பயங்கர

மாக இராஜ கிருஹத்தில் பிரவேசித்தார்கள். அதுவரையில் காலை முடக்கி வைத்துக்கொண்டிருந்த அந்த பிருஹ்மராக்ஷஸ் இவருக்கு நேராக இரண்டு காலையும் நீட்டிக் கைதட்டிச் சிரித்துக் கொக்கரித்து எளனம் செய்யத் தொடங்கியது. யதிகள் அடங்காக் கோபம் கொண்டவராய் 'உன் கொட்டத்தை ஒரே நொடியில் அடக்கி விடுகிறேன்பார்' என்று கூறி மந்திர ஜபம்செய்ய வாரம்பித்தார்கள். பிருஹ்மராக்ஷஸ் தலையை யசைத்து 'யாதவா! என் வீணுக்கு வருத்தம், நீ இப்போது ஜபம் செய்யத்தொடங்கியது கௌமார மந்திரமல்லவா, அதைச் சொல்லுகிறேன் கேட்கிறுயா; (சொல்லிவிட்டு) இதினால் யாதும் பயனில்லை. இதுவல்ல; பாசுபதம், ஸௌதர்சனம், நாரஸிஹ்மம், சாபம், கண்டபேருண்டம் எந்த மந்திரத்துக்கும் நான்போகிறவனல்லன், உன் பிறப்பும் என் பிறப்பும் நீ அறிவாயா; அறிவாயானல் சொல்; அதை யறியவல்லமையில்லாத நீ யென்னைப் போகச் சொல்ல வந்தாயே' என்றது.

யாதவர் இதைக் கேட்டு ஆச்சரியப் பட்டார். முன் பிறப்பு அறிவதென்றால் எல்லோருக்கும் அதில் குதூஹலமுண்டாவது ஸஹஜமே. யதிகளுக்கும் அதில் ஆவலுண்டாயிற்று. 'என் பிறப்பும் உன் பிறப்பும் நீ அறிவாயோ' என்று யதிகள் கேட்டார்கள். 'ஆம், அறிவேன், கூறட்டுமா' என்று பிருஹ்மராக்ஷஸ் சொல்லியது. யதிகள் சொல்லும்படி சொன்னார்கள்.

ஸ்ரீரங்கத்திலிருந்து திருப்பதிக்கு யாத்திரையாய்ப் போகிற சில ஸ்ரீ வைஷ்ணவர்கள் மதுராந்தகத்தேரியில் ஸ்நாநம் செய்து போஜனத்தை முடித்துக் கொண்டு போனார்கள். அங்கோர் புதரில் ஓர் உடும்பிருந்தது. அஃது அந்த ஸ்ரீ வைஷ்ணவர்களின் போஜன சேஷமா யிலையில் கிடந்தவைகளைத் தின்று. அவர்கள் அருந்தி மிகுந்து

தொன்னேயிலிருந்த ஜலத்தைக் குடித்தது. அந்த மஹிமையால் நல்ல ஞானமும் பிரஸித்தியும் பெற்று ப்ராஹ்மணனுகப் பிறந்தது. அந்த உடம்பே நீபாம். யாளுெரு ப்ராஹ்மணன்; புத்திபூர்வகமாகச்செய்த வேததூஷணம், விஷ்ணுத்வேஷம், அபஸ்வரமாய் வேதமோதல், நாஸ்திக புத்தியோடே முறைபிறழ யாகஞ்செய்தல் முதலியவைகளால் இந்த நீச ஜன்மத்தைப் பெற்றேன் என்று அந்த பிருஹ்மரக்ஷஸ் கூறியது.

இதைக் கேட்ட யாதவப்ரகாசர் நீ சொல்வது மெய்யாயிருக்கலாம்; 'நல்லது நீ கூறியபடி யிப்போது நான் உன்னைவிடப் பலவகையும் மேம்பாடுடையவனுகையால் நீ இவ்வரசன் மகளை விட்டோடிப் போகவேண்டும்' என்று கூற அந்த ரக்ஷஸ் 'நான் போவதில் தடையில்லை; நீ போகச்சொன்னல் நான் போகமாட்டேன்' என்றது. பின்னர் யார் போகச் சொன்னல் போவாய் என்று யதிகள் கேட்டார்கள். அதற்கு

"கமலநற் கண்ணுங் கோலங் கண்டதோ ரகல மார்பும்
விமலமா முழந்தாள் தாழும் வீறுடைத் தோளு மாகி
யமலமாய் விழிக்கு நோக்கா லடியவ ரருள வந்த
வமரர்கள் தலைவன் சொன்ன லகலுவேன் புகலு வேனே."

என்று கூறிச் சிஷ்யக் கூட்டத்திலோர் மூலையில் நிற்கும் இராமானுஜாசாரியரைக் காட்டியது பிருஹ்மரக்ஷஸ். அதைக்கேட்ட அரசன் வேண்டுகோளினுல் யாதவப்ரகாசர் இராமானுஜாசாரியரைத் தம்மருகேயழைத்து அதை நீ போகச்சொல் என்றூர்கள். அதைப் போகச் சொல்ல யான் மந்திரம் ஒன்றும் அறியேனே யென்றூர் அவர்.

அந்த ப்ருஹ்மரக்ஷஸ் பயபக்திகளோடு எழுந்து நின்று பலமுறை யவரைத். தண்டனிட்டுக் கைகூப்பி

வாய்பொத்திக்கொண்டு நின்றது. உன்னைப் போகச் சொல்லத் தமக்கு யாதொரு மந்திரமும் தெரியாதென்கிறாரே இவர் என்று யாதவர் கேட்டார். மந்திரமெதற்கு மாயமெதற்கு, அவர் இரண்டுபாத கமலங்களையும் என் சிரஸில் அமர்த்தி விடைகொடுத்தால் சென்று விடுகிறேன் என்று ரக்ஷஸ் கூறித் தரையில் விழுந்துவிட்டது. அரசன் வேண்டுகோளினாலும் யதீசுவரர் ஆஜ்ஞையாலும் இராமானுஜாசாரிய ஸ்வாமிகள் அவ்வரச குமாரன் சிரஸில் இரண்டு பதகமலங்களையும் சூட்டினர். அந்த பிருஹ்மரக்ஷஸ் ஸந்தோஷத்தோடு அரசன் முதலானோர் குறித்தபடி ஓரரசமரத்தை முறித்துக் குறிகாட்டிவிட்டு நான் இவ்வரசன் மகனைப் பிடித்ததினால் இம்மஹாபுருஷனது அநுக்கிரஹம் பெற்றேன். பாவமனைத்தும் போய் நற்கதிபெறுவேனேனென்று கூறிவிட்டுப்போய் விட்டது.

அரசன் யதீசுவரர்களுக்கும் இராமானுஜாசாரியருக்கும் பெரும் பொருள்கள் வெகுமதியாகக் கொடுத்தான். இராமானுஜாசாரியர் தமக்குக் கிடைத்த வெகுமதிகளையும் யதீசுவரர்களுக்கே அர்ப்பணம் செய்து விட்டார்கள். அப்பொருள் முழுமையும் ப்ராஹ்மண போஜனத்துக்கு விநியோகிக்கப்பட்டது.

கிரமப்படி வேதாந்த பாடம் நடந்துவருகிறதென்றாலும் யதீசுவரரும் பெரிய சிஷ்யர்களும் இராமானுஜாசாரியர் விஷயத்தில் இருக்கும் நிலை முன்போலன்றி வேறுபாடடைந்துவிட்டது. ஓரிடத்திலும் மரியாதைக் குறைவென்பதே நேராது பெரிய கௌரவத்தோடு காலம் கழித்து வந்த யாதவப்ரகாச ஸ்வாமிகளுக்கு ப்ருஹ்மரக்ஷஸ்ஸால் நேர்ந்த அவமானம் ஸஹிக்க முடியாததாயிருந்தது. ஸஹபாடிகளில் ஒருவன் கௌரவம் பெற்றால்

அது மற்றோர்களுக்குப் பெரிய அஸூயையையுண்டாக்குவது ஸஹஜமேயாகையால் கூட வாசிப்போ ரெல்லோரும் இராமானுஜாசாரியரிடத்தில் மிகவும் அஸூயையை வஹித்தார்கள். ஸமயத்தில் யதீச்வரரிடத்தில் இவர் பேரில் பலகோள்கள் கூறலானார்கள்.

ஒருமுறைக் கிருமுறை தாம் கூறிய பொருளை மறுத்துப் பொருள் கூறினமைபற்றி யதிகள் தாமாகவே இராமானுஜாசாரியரிடத்தில் கோபம் கொண்டவர்களாகையால் தமது அன்பிற்குரிய அந்தரங்க சிஷ்யர்கள் ஸமயமறிந்து செவிக் கேற்றிய கோள்கள் யதிகள் மனத்தில் உறுதியாய்த்தங்கி யவர்மனநிலையை மாற்றிவிட்டன.

இராமானுஜாசாரியர் படித்துத்தேறி முன்வந்தால் நம் மதத்தையே துலைத்து விடுவார். ஆகையால் இவரை இப்போதே நாசம் செய்து விடவேண்டியது அவசியமென்கிற ஒரு தீர்மானம் முடிவாக வேற்பட்டது. யதீசுவரர் முதலில் ஸம்மதியாமலிந்தாலும் வெகு காலம் சர்ச்சையானபின் முடிவில் ஸம்மதித்து விட்டார்கள். எவ்வாறு அவரை முடிப்ப தென்பதைப்பற்றி சிஷ்யர்கள் கூடி யாலோசனை செய்ததில் ஒன்றும் முடிவாகாமையால் அவரவரது அபிப்பிராயங்கள் குருவுக்கு அறிவிக்கப்பட்டன.

இதையெல்லாம் கேட்ட யதிகள் அபவாதத்திற்கும் நரகத்திற்கும் பயந்தவர்களாய் அவர்களின் உபாயங்கள் அனைத்தையுந் தள்ளிவிட்டுத் தீர்க்காலோசனையின் பேரில் நாம் கங்காஸ்நாநம் புறப்படுவோம், மாக ஸ்நாநத்திற்கென்று இராமானுஜாசாரியரையும் கூட்டிச் செல்வோம், அங்கே அவரை கங்கையில் தள்ளிவிட்டால் நம் இஷ்டம் நிறைவேறும், பழியும் பாவமும் வராது, அவரும் கங்கா மரணத்தால் நற்கதி பெறுவர் என்று கூற சிஷ்யர்களெல்

லாரும் 'ஸாது ஸாது' என்று அங்கீகாரம் செய்தார்கள். இவ்விருத்தாந்தம் இராமானுஜாசாரியருக்கும் கோவிந்த பட்டருக்கும் தெரியாமல் மறைவாய்க் காக்கப்பட்டது. கங்காயாத்திரையில் பாடம் விரைவாய் நடக்குமென்று உற்சாகப்படுத்தப்பட்டதால் இராமானுஜாசாரியர் தாயார் அநுமதி பெற்றுக் கோவிந்தபட்டரோடு யாத்திரை புறப்படச் சித்தமாயிருந்தார். உள் அடங்காத ஆனந்தத்தோடே எல்லோரும் யாத்திரைக்குரிய ஸம்விதானம் செய்து கொண்டார்கள்.

(இன்னும் வரும்.)

ஸ்ரீச்யாமதேசிக திருமலைதாதாசாரியர்.

இந்திரா.

கல்யாணம் நடந்த வெகு நாளைக்குப்பின், நான் எனது புருஷன் வீட்டுக்குப் போய்க்கொண்டிருந்தேன். எனக்குப் பத்தொன்பது பிராயமாகியும் இதுவரையில் புருஷன் வீட்டுக்குப் போய்க் குடித்தனம் பண்ணினதில்லை. ஏனெனில் என்னுடைய தகப்பனார் பெரும் பணம் படைத்தவர். மாமனாரோ ஏழை. விவாகமான இரண்டொரு ஸம்வத்ஸரங்களுக்குள்ளாக எனது மாமனார் என்னை அழைத்துப் போவதற்கு அவருடைய பந்துக்களிற் சிலரை யனுப்பினார். ஆனால் என்னுடைய தந்தை என்னை யனுப்பாமல் வந்தவர்களுடன் "மருமகன் பணம் சம்பாதிக்கட்டும், அதின்பின் அழைத்துப்போகலாம்; இதற்கு மத்தியில் பெண்ணை யழைத்துப் போய் அவன்தான் என்ன சுகப்படப் போகிறான் என்று சம்பந்திகளிடத்தில் சொல்லுங்கள்" எனச் சொல்லி யனுப்பிவிட்டார். இதைக் கேட்டதும் என்னுடைய கணவர் மனத்தில் ஒரு வெறுப்பும் கோபமும் உண்டாயிற்று. அப்போது என்னுடைய நாதனுக்கு வயது இருபது. அவர், "வருந்தி நானே பணத்தைத் தேடி உறவினரைக் காப்பாற்றுவேன்" என்று சபதம் செய்துகொண்டு மேற்குத்திக்கை நோக்கிப் பிரயாணம் போய்விட்டார். அக்காலத்தில் புகைவண்டி என்ப

தில்லை. அந்தத் திக்கில் இருக்கும் நாடுகளுக்குப் போகும் மார்க்கங்களைக் கடப்பது மிகவும் அரிது. காலால் நடந்து மழையால் நனைந்து வெயிலால் உலர்ந்து பசியால் வருந்திக் கையில் ஒரு காசுமில்லாமல் வேறு உதவியும் அற்றவராய் அவ்வழிகளைக் கடந்து இறுதியில் பாஞ்சால தேசத்தை யடைந்தார். இவ்வளவு சாகஸங்களைச் செய்தவருக்குப் பணம் சம்பாதிக்கமுடியாமல் போய்விடுமா? என்னுடைய பர்த்தா பணம் சம்பாதிக்கத் தொடங்கினார். வீட்டிற்கு ரூபாய்களை அனுப்பவும் ஆரம்பித்தார். ஆனால் ஆறு ஏழு வருடங்கள் வரையில் ஊருக்கு வரவேயில்லை. என்னுடைய சுகதுக்கங்களைப் பற்றிக் கேட்கவுமில்லை. நான் என்னைப் பற்றிய கதையை எழுதத் தொடங்கிய காலத்திற்குச் சில நாளைக்கு முன் அவர் தம் ஊர் வந்து சேர்ந்தார்.

ஜனங்கள் சொல்லிக்கொண்டதில் அவர் ஆங்கிலேய சேனைக்கு ஊண் உடையளிக்கும் 'இலாகா' வேலையிலமர்ந்து, அளவற்ற திரவியத்தைச் சம்பாதித்துக்கொண்டு வந்திருக்கிறாரென்பதை மாத்திரம் கேள்விப்பட்டேன். என்னுடைய மாமனார் எனது தந்தைக்குத்

> தங்களுடைய மங்களாசீர்வாதத்தால் *உபேந்திரன் தன் மனைவியையும் மற்றெல்லாரையும் பரிபாலிக்கும்படியான சக்தியை யுடையவனாயிருக்கிறான். பல்லக்கு, ஸேவகிகள், போகிகள் மற்றும் வேண்டுவன வெல்லாம் அனுப்பியிருக்கிறேன். சௌபாக்கியவதியைத் தயவு செய்து அனுப்பக் கோருகிறேன். அப்படியில்லாவிட்டால் உத்தரவாயின் குமாரனுக்கு வேறே விவாகம் செய்யவேண்டும்.

எனக் கடிதம் வரைந்து ஏவலாளருடன் அனுப்பினார். என்னுடைய தந்தையானவர் திருபத்தை வாசித்ததும் தலையெடுத்துப் பார்த்து "இவர் புதிதாய்ப் பெரிய மனிதரானவர்" என்று தனக்குள்

---

*எனது பதியின் பெயர் உபேந்திரன்—பேரைச் சொல்லிவிட்டேன். பெரியவர்களான சுமங்கலிகள் நான் செய்த அபராதத்தை க்ஷமிக்க வேண்டும். ஆனால் இக்காலவழக்கப்படி "என்னுடைய உபேந்திரா" வென்று அழைக்கவேண்டு மெனத் தோன்றுகிறது.

சொல்லிக்கொண்டார். பல்லக்கின் உட்புறம் ஸுவர்ண நிர்மித மான பட்டாடையினல் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மேற்புறம் கொம்பின் இருமுனைகளிலும் ஸிம்ஹத்தினுடைய முகங்கள் வெள் ளியினல் செய்து அமைக்கப்பட்டிருந்தன. அதனுடன் வந்திருந்த தாதி தன் கழுத்தில் மிகவும் விலையுயர்ந்த ஸ்வர்ணபரணங்களை யணிந்திருந்தாள். இன்னும் இவளுடன் நான்கு புருடர்கள் வேண் டும் பணிவிடைகளைச் செய்வதற்காக வந்திருந்தார்கள்.

என்னுடைய பிதாவான "ஹரமோகனதத்" என்பவர் பரம் பரையாக மகோன்னத நிலைமையில் இருந்த வமிசத்திற்பிறந்தவர். ஆகையால் இவைகளையெல்லாம் பார்த்துப் புன்னகை கொண்டு "அம்மா இந்திரை! இனிமேல் நீ இங்கிருப்பது சரியன்று. இப் போது போய் வா அம்மா; மறுபடியும் கூடிய விரைவில் நான் உன்னை உனது புருஷன் வீட்டினின்றும் அழைத்து வருவேன். தெரியாதவர் சொல்லும் பேச்சைக் கேட்டுச் சிரிக்காதே; மாமி யார், மாமனர் இவர்களைக் கண்டதும் நமஸ்கரித்து அவர்களிடம் வணக்கமாயிரு; கணவனுக்குச் செய்யவேண்டிய பணிவிடைகளில் கவனமாயிரு. அண்டை அயல் வீடுகளுக்குப் போகாதே" என்று வேண்டிய புத்திமதி கூறி ஆசீர்வாதம் பண்ணிப் பிரயாணம் செய்து கொடுத்த விதம், இக்கதாரம்பத்தில் சொல்லியபடி நான் புருஷன் வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்தேன். என்னுடைய புருஷன் வீடு மனேகரபுரம். பிதாவின் கிருகமோ மகேசபுரம். இவை ஒன்றுக்கொன்று தூரம் மூன்று காதவழி. ஆனதால் பிராதக்காலத் திலேயே சாப்பிட்டுவிட்டுப் பிரயாணமானேன். குறித்த இடம் சேருவதற்கு இரவு ஏழு அல்லது எட்டுமணியாகும் எனத்தெரியும். மத்யமார்க்கத்தில் நீலஸரோவரம் என்ற பெரிய ஏரி ஒன்றுண்டு. அதன் ஜலம் சுமார் இரண்டு மைல் தூரம் விஸ்தாரமாய்ப் பரந்தி ருக்கும். அதன் சமீபத்தில் பெரிய பர்வத பந்தி யொன்றுண்டு. அதன் கணவாய் வழியாகவே போகவேண்டும். அதன் நான்கு புறத்திலும் வானளாவிய விருக்ஷங்கள் நிறைந்து இன்பமான குளிர் ந்த நிழலைக் கொடுக்கும். அவ்வேரியின் நிர்மலோதகம் தூரத்தி னின்றும் பார்ப்பவர்கட்கு நீலநிற மேகம்போல் தோன்றும். அப் பிரதேசத்தில் காண்பதற்கு இவைகளெல்லாம் அதிக மனேகரமா யிருக்கும். அங்கு மனித சஞ்சாரம் மிகக்குறைவு. அக்கணவா

யின் மேற்புறத்தில் ஒரு கடைமாத்திரம் உண்டு. அருகில் ஒரு நாட்டுப்புறம். அதற்கும் நீலஸரோவரம் என்றே பெயர். இக்கணவாயின் வழியில் ஜனங்கள் தனிமையாய்ப் போவதில்லை. திருடர் பயத்திற்காக ஜனங்கள் கூட்டமின்றி அவ்வழியாய்ப் பிரயாணம் செய்வதற்கு யாரும் அஞ்சுவார்கள். இதற்காகவே அதற்குச் சோர நீலஸரோவரமென்று பெயரிட்டு வந்ததுமன்றி, அவ்விடத்திலிருந்த கடைக்காரன் கள்வர்களின் உள்ளாளென்றும் சொல்வார்கள். எனக்கு அவ்வித பயமொன்றுமில்லை. என்னுடன் அநேக மனிதர்கள் வந்தனர். பதினாறு போகிகள், நான்கு ஆட்கள்—இவர்களன்றி வேறு ஜனங்களு மிருந்தார்கள்.

நான் இந்த இடத்திற்கு வரும்போது பகல் மூன்று மணியாயிற்று. போகிகள் தாங்கள் சிறிது ஆகாரமுண்டு சிரமபரிகாரம் செய்து கொண்டாலன்றி மேல் நடக்கமுடியாதென்று சொன்னார்கள். காவற்காரர் "கூடாது, வாஸயோக்ய மற்ற பிரதேசம், அபாயகரமான இடமென்று" தடுத்தார்கள். என்னுடன் வந்திருந்தவர்களில் எவரும் அதுவரையில் உணவின்றி யிருந்ததால் முடிவில் எல்லோரும் போகிகளைப் போலவே எண்ண முடையவர்களானார்கள். கடைசியாகக் கணவாயிலிருந்த ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ்ப் பல்லக்கை யிறக்கினர். சிறிது நாழிகையானதும் கூடவந்திருந்தவர்கள் நதிக்குப்போய் விட்டார்களென்று தெரிந்து, தைரியம் செய்துகொண்டு பல்லக்கின் கதவைச் சற்றுத்திறந்து ஸரோவரத்தின் பக்கமாய்ப் பார்த்தேன். போகிகள் எல்லாம் கடையின் முன்புறத்தில் இருந்த ஒரு விருக்ஷத்தின் நிழலில் உட்கார்ந்து கட்டுச்சோற்றை யவிழ்த்துப் புசித்துக் கொண்டிருந்தனர். நான் இறங்கிய இடத்திற்கும் கடைக்கும் சற்றேக்குறையக் கால்மைலிருக்கும். ஸரோவரம் அதிக உன்னதமாய் மேகத்தை யளாவியதாய்ப் பரந்து பார்ப்பதற்கு மிகவும் ஆச்சர்யகரமாய்த் தோன்றிற்று. நான்கு பக்கங்களிலும் தொடர்ச்சியான மலைச்சாரல்கள் மேக வர்ணம்போல் கறுத்து, செழுத்த பசுமையும் கலந்து, நேத்திரங்களுக்குக் குளிர்ச்சியைத் தரும். மலைகளின்மீதும் அகன்ற நிலத்தின்மீதும் அங்கங்கு ஜலத்திலும் உயர்ந்தோங்கி வளர்ந்துள்ள விருக்ஷபந்திகள் மந்த மாருதத்துடன் ஸல்லாபம் செய்வது நேத்திரானந்தகரமாயிருக்கும். பர்வதங்களின்மீது ஆடுமாடுகள் மேய்

ந்துகொண்டிருக்கும். ஜலத்தின்மீது நீர்ப்பறவைகள் கிரீடித்துக் கொண்டிருக்கும். குளிர்ந்து வீசும் மாருதத்தினுல் உண்டாகும் மிகமேன்மையான அலைகள் ஒன்றின்மீதொன்று படுங்காட்சியானது பளிங்குத்துண்டுகளை மேலே எறியும் பாவனைபோலிருக்கும். சிறிய அலைகளின் ஸ்பர்சத்தினுல் இடையிடையே யுள்ள புஷ்ப ராசிகளும் பூங்கொடிகளின் இலைகளும் துண்டு துண்டாய்க் கிழிந்து நீர்ப்பாசியுடன் ஊஞ்சலாடுவதுபோல் தோற்றத்தை யுண்டு பண்ணும். என்னுடைய ஜனங்கள் ஸ்நானத்திற்காக ஜலத்திலிறங்கினர். அவர்களின் அங்கங்களால் மோதப்படுவதினுல் தோன்றும் வெண்மையான அலை நுரைகளோடுங் கூடிய நீலநிறமான நீரானது வெண்மையான முத்தாரங்களைத் தன்னிடம் போடப்படுவதுபோல் தோற்றும். போகிகள் தவிர என்னுடன் வந்திருந்தவர்கள் அனைவரும் ஒரே காலத்தில் குளிப்பதற்கு நீரில் இறங்கினார்கள். உடன் வந்திருந்த இரு பரிசாரிகைகளில் ஒருத்தி புருஷன் வீட்டையும், மற்றொருத்தி என்பிதாவின் வீட்டையும் சேர்ந்தவள். இருவரும் ஜலத்தில் செய்வதென்ன? எனக்கு மனத்தில் கொஞ்சம் பயமுண்டாயிற்று. எனது அருகில் யாருமில்லை, இடமோ கெட்ட இடம். என்னவோ எனக்கும் ஒன்றும் சரியாகத் தோன்றவில்லை. யான் என்னதான் செய்யக்கூடும்? நானோ குல ஸ்திரீ. நாணமின்றி வாயை விட்டு எவரைத்தான் கூப்பிடலாம்?

இச்சமயத்தில் பல்லக்கின் மற்றொரு பக்கத்தில் என்னவோ சப்தம் ஆயிற்று. மேலிருந்த மரத்தின் கிளையினின்றும் ஏதோ பாரமான ஒரு பதார்த்தம் கீழே விழுந்ததுபோல் கேட்டது. இதென்னவென்று கதவைத் திறந்து அந்தப் பக்கம் பார்க்கையில் கறுப்பு நிறமுள்ள தீக்ஷண்யமான பார்வையையுடைய ஒருவன் காணப்பட்டான்.

பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இன்னொருவன் மரத்தின் கிளையிலிருந்து குதித்தான். மற்றொருவன், மறுபடியும் இன்னொருதரம் வேறொருவன்—இப்படியாக நான்கு பேர்கள் ஒருவர் பின் ஒருவராக மரக்கிளைகளினின்றும் குதித்து வந்து பல்லக்கைத் தூக்கிக்கொண்டு நெடுமூச்சுடன் ஓடவாரம்பித்தார்கள். என்னுடைய ஆட்களில் ஒருவன் இதைப் பார்த்து 'யார் அது யார் அது' என்று சொல்லிக்கொண்டு நீரினின்றும் கிளம்பி ஓடி வந்தான்.

அப்போது நான் கள்வர்கையில் சிக்கிக்கொண்டதாகத் தெரிந்தது. நாணத்தினால்—இப்போதாவது என்ன? பல்லக்கின் இரு பக்கங்களிலுமுள்ள கதவையும் திறந்துவிட்டேன். என்னுடன் வந்தவர்களெல்லாம் ஆரவாரம் செய்துகொண்டு பல்லக்கின் பின் ஓடிவருவதைப் பார்த்ததும் மனத்தில் கொஞ்சம் தைரியம் அடைந்தேன். ஆனால் உடனே அத்தைரியம் போய்விட்டது. அப்போது சமீபத்திலிருந்த வேறு மரங்களிலிருந்தும் அநேக திருடர்கள் குதித்துக்குதித்து—வந்து சேர்ந்துகொண்டார்கள். ஏற்கனவே ஏரிக்கரையில் விருக்ஷசோலைகளிருந்தனவென்று சொல்லியிருந்தேனல்லவா? அந்நிழலிலேயே திருடர்கள் பல்லக்கை எடுத்துப்போனார்கள். சிவிகையை எடுத்துச்சென்ற மார்க்கங்களிலெல்லாம் தொடர்ச்சியாயுள்ள விருக்ஷங்களிலிருந்தும் திருடர்கள் குதிப்பதும் ஒருவரோடொருவர் சேருவதுமா யிருந்தார்கள். அவர்களிற் சிலர் மூங்கில்தடிகளையும் வேறு சிலர் மரக்கொம்புகளையும் பிடித்துக் கொண்டிருந்தார்கள். திருடர்களுடைய கணக்கு அதிகரிக்கவே என்னுடன் வந்திருந்தவர்கள் அச்சமடைந்து பின்வாங்கினர். இதைப்பார்த்த நான் திடமற்றவளாய்ப் பல்லக்கினின்றும் குதித்து ஓடிப்போகலாமென்றும் எண்ணினேன். ஆனால் என்னைத் தூக்கிச் செல்வோர் மிகவும் விரைவாக ஓடியபடியினால் நான் குதிப்பின் கீழே விழுந்து அபாயத்திற்காளாவதுமன்றி அத்திருடர்களில் ஒருவன்காட்டின தடிக்கிரையாயுமிருப்பேன். இப்படிப்பட்ட சமயத்தில் என்னுடைய ஆட்களில் ஒருவன் விரைந்தோடிவந்து பல்லக்கைப்பிடித்துக்கொண்டான். அப்போது திருடர்களில் ஒருவன் தடியினால் அவனைவலிய அடித்ததினால் அவன் அலறிக்கொண்டு நிலத்தில் விழுந்தான். மறுபடியும் அவன் மேலெழுந்ததை நான் பார்க்கவில்லை. எழுந்திரான் என்றே தோன்றுகிறது.

இதைக்கண்டதும் மற்றவர்கள் பின்தொடராமல் நின்றுவிட்டார்கள். இரவு சுமார் எட்டுமணியவரையில் என்னை யெடுத்துப் போய்க் கடைசியாகப் பல்லக்கை யிறக்கினார்கள். எங்கே பார்ப்பினும் விருக்ஷங்களடர்ந்த பெருங்காடு. அதிக இருளாயுமிருந்தது. திருடர்கள் ஒரு தீவட்டியைக்கொளுத்தி வெளிச்சம் உண்டுபண்ணிக் கொண்டனர். பிறகு என்னை நோக்கி "உன்னிடம் இருப்பதெல்லாம் கொடுத்துவிடு, இல்லாவிடில் உயிருடன் விடோம்" என்று

சொன்னார்கள். தக்ஷணமே நான் அணிந்திருந்த விலையுயர்ந்த ஆடையாபரணாதிகளையெல்லாம் கொடுத்துவிட்டேன். கொடுத்த தும் திருடர்கள் ஒரு பழைய கிழிந்த துணியை நான் கட்டிக்கொள் ளக் கொடுத்தார்கள். அதனை யுடுத்துக்கொண்டு நான் தரித்திருந்த பீதாம்பரத்தையும் தந்துவிட்டேன்.—கள்வர்கள் இங்ஙனமாக என் னிடமிருந்தவைகளையெல்லாம் வலியப் பறித்துக்கொண்டு சிவிகை யை யுடைத்துப் பொடிப்பொடியாக்கி, அதிலிருந்த வெள்ளிச்சாமா ன்களையும் கைப்பற்றி உடைந்த பல்லக்கை நெருப்பிட்டெரித்துத் திருட்டடையாளம் ஒன்றுமின்றிச் செய்துவிட்டு அப்புறம்போகப் புறப்பட்டனர்.

அப்பயங்காரரண்யத்தில் காடாந்தகாரமான அவ்விரவில் என்னை வனவிலங்குகட்கு இரையாக்கி அவர்கள் செல்வதைக் கண்ட நான் மிகுந்த அச்சத்துடன் அழத்தொடங்கி அக்கள்வரை நோக்கி "உங்கள் காலில் விழுகிறேன், என்னை இங்கே தனியாய் விடாமல் உங்களோடு அழைத்துக்கொண்டு செல்லுங்கள்" என வேண்டிக்கொண்டேன். திருடர்களுடன்கூட இருப்பது எனக்கு அத்தருணத்தில் அக்கானகத்தி லிருப்பதிலும் மேலாயிருந்தது.

ஒரு கிழத்திருடன் கருணையுடன் என்னைப்பார்த்து "பெண் ணே! இப்பேர்ப்பட்ட ரூபலாவண்யவதியை நாங்கள் எங்கே அழைத்துப்போவது? இத்திருட்டுத் தாமதமின்றித் தெரியவரும். உன்னைப்போன்ற சௌந்தர்யவதியை எங்களுடன் யாராவது கண் டால் எம்மைத் திருடர்களென்று உடனே பிடித்துக்கொண்டுவிடு வார்கள்" என்றான்.

வாலிபனான மற்றொருவன் "தான் இவளைக்கைப்பற்றியதினால் காராக்கிருகத்திற்காவது செல்வேனேயன்றி இவளை விட்டக லேன்" என்றான்.—அவன் இன்னும் என்னென்னவோ பிதற்றினான். ஆனால் அவற்றை இங்கே சொல்வது அழகல்ல; உலகத்திலுமில்லை. மேலே கூறிய கிழக்கள்வன் இவர்களுக்கெல்லாம் தலைவனானது பற்றி இச்சிறுவனுக்குத் தடியைக் காண்பித்து இதனால் உன்னைத் த்வம்சம்செய்துவிடுவேன்—வீணே மடிந்துபோகவேண்டாம்—இப் பேர்ப்பட்ட கெட்ட செய்கையைச் செய்வது சரியன்று—என்று சொல்லி எல்லாத் திருடர்களையும் கூட்டிக்கொண்டு காட்டில் மறைந்துபோனான். அவர்களின் த்வனி கேட்குமளவும் எனக்கு

உணர்ச்சியிருந்தது. பிறகு அவ்விடத்திலேயே சித்தஸ்வாதீனமற்றவளாய் மூர்ச்சித்து விழுந்துவிட்டேன்.

அத்யாயம் 2.

என் மூர்ச்சை தெளிந்து கண்விழித்துப்பார்க்கையில் காக்கைகள் கூவிக்கொண்டிருந்தன. அடர்ந்த மூங்கில்களின் இடையிடையேயுள்ள சந்துகளின் மார்க்கமாகப் பாலபாஸ்கரனுடைய இளங்கிரகணங்கள் பூமியின்மேல் விழுந்திருந்தன. நான் அவ்விடத்தினின்றுங் கிளம்பிப் பக்கத்தில் ஏதாவது ஊர் உண்டோ எனத் தேடிச் சென்றேன். சிறிதுதூரம் செல்வதற்குள் ஓர் கிராமம் கிட்டிற்று. அங்கே போய் என் புருஷன்வீடிருக்கும் ஊரும், என்னுடைய ஊரும் எங்குளதென்று விசாரித்தேன். அனைவரும் அவற்றைப்பற்றிய செய்தியொன்றும் தெரியாதென்று சொல்லிவிட்டார்கள். அப்போது நான் மனத்தில் இதைக்காட்டிலும் அரண்யத்திலிருப்பது நல்லதென்று நினைத்தேன். வெட்கத்தினால் புருஷர்களுடன் பேசமுடியாமலிருந்தேன். அப்படித்தான் பேசினாலும் "சுந்தரி" என்று ஆசையோடு கடைக்கண் அளிப்பார்கள். சிலர் சிலேடையாய்ப் பேசுவார்கள். சிலர் சொல்லத்தகாத சொற்களைச் சொல்வார்கள். நான் அங்கேயே யிருந்தாலும் சரி; அந்நியருடன் வார்த்தை சொல்லக்கூடாது என்று இருந்தேன். ஸ்திரீகள்கூட ஒரு வர்த்தமானமும் சொல்லவில்லை. சொல்லவும் அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களெல்லாம் என்னுடைய ரூபலாவண்யத்தைக்கண்டு பிரமிக்கலாயினர். ஏனென்றால் அவர்கள் என்னை ஒரு அற்புதமான ஜெந்துவைப் பார்ப்பதுபோல் பார்க்கலாயினர். ஸதவையான ஒரு கிழவி "அம்மா! நீ யார்? இப்பேர்ப்பட்ட அழகு வாய்த்த நீ துணையெவருமின்றி தனிமையாய் வழியிலும் கணவாய்களிலும் திரிகிறாய்—ஆ! ஆ!! நான் என்னென்று சொல்வேன்! எப்பேர்ப்பட்ட சுந்தரி நீ! என் வீட்டிற்கு வா அம்மா" என்றாள். அவள் வீட்டிற்குப் போனேன். அவள் நான் பசித்திருப்பதையறிந்து வருந்தி உணவளித்தாள். அவள் மகேசபுரத்தைப் பார்த்திருக்கின்றாளாம். நான் "விரும்பிய பணத்தைக் கொடுக்கிறேன் நீ என்னுடன் துணைவந்து என்னை ஊரில் விட்டுவா" என்று அவளை வேண்டியழைத்தேன். அதற்கவள் "நான் என் கிருக கிருத்யங்

கலை விட்டுவிட்டு எங்ஙனம் வருவது ? என்னால் சாத்யப்படாது" என்றாள். பிறகு அவள் என் ஊருக்குப் போகும் வழியைக் காண்பித்தாள். அவ்வழியையே பிடித்துக்கொண்டு புறப்பட்டேன். சிறிது தூரம் நடந்ததும் தளர்ச்சியுண்டாயிற்று. மார்க்காயாசம் அதிகரித்தது. அங்கே வழிப்போக்கன் ஒருவனைக்கண்டு "அப்பா! மகேசபுரம் இவ்விடத்திற்கு எவ்வளவு தூரத்திலிருப்பது என்று கேட்டேன். அவன் என்னைப்பார்த்ததும் அசைவற்றவனாய் நின்று வெகுநாழிகையானபிறகு "நீ எவ்விடத்திலிருந்து வருகிறாய் ?" என்று வினவினான். வழி காண்பித்த கிழவி யிருக்கும் ஊரைச் சொன்னேன். அதற்கு வழிப்போக்கன்—"நீ வழிகடந்து வந்தாய், வந்தவழியே பின் திரும்பி வேறு மார்க்கம் போகவேண்டும். மகேசபுரம் இவ்விடத்திலிருந்து இரண்டுநாள் பிரயாணமாகிறது." என்று சொன்னான். எனக்கு மனஞ்சுழன்றது. "நீங்கள் எங்கே போகிறீர்கள்" என்று கேட்டேன்.

வழிப்போக்கன்:—இங்குச் சமீபத்திலிருக்கும் கௌரீபுரத்திற்குப் போகிறேன் என்றான்.

எனக்கு வேறு உபாயம் ஒன்றும் தோற்றாமல் அவன்பின் தொடர்ந்தேன் ஊரின் மத்தியில் வந்தபிறகு வழிப்போக்கன் "நீ இவ்வூரில் யார்வீட்டுக்குப் போவாய்" என்றான். நான் "இவ்விடத்தில் எனக்கு ஒருவரும் தெரியாது. ஒரு மரத்தின்கீழாவது தங்குவேன்" என்றேன்.

வழி:—நீ என்ன ஜாதியைச் சேர்ந்தவள்?

நான்:—காயஸ் ஜாதியைச் சேர்ந்தவள்.

வழி:—நான் பிராமணன். நீ என்னுடன் வா. பழைய கிழிந்த துணியைக் கட்டிக்கொண்டிருந்தபோதிலும் நீ பெரிய வீட்டைச்சேர்ந்தவள்போல் தோற்றுகின்றது. ஏழைகள் வீட்டில் இவ்வித அழகுள்ளவர்கள் பிறப்பதில்லை.

நான்:—பாழான ரூபலாவண்யமே! எங்கே போனாலும் என் அழகைக் கேட்கக்கேட்கச் சரீரமெல்லாம் எரிகிறது—ஆனால் அப்பிராமணன் விருத்தனாக இருந்ததினால் அவன்பின் சென்றேன்.

அன்றிரவு அப்பிராமணன் வீட்டில் தங்கினேன். நடக்கமுடியாதவளாய்ப் பிறகும் இரண்டு தினங்கள்வரையும் அங்குத்தாமதித்

தேன். மூன்றும் நாட்காலையில் எழுந்ததும் உடம்பெல்லாம் வலித்தன. இரண்டு கால்களிலும் இரத்தம் கட்டிக்கொண்டு அடிவைக்க முடியாமற்போயிற்று; உட்காரவும் ஸாத்யப்படவில்லை. இனிச் செய்வது யாது? உட்கார்ந்து எழுந்திருக்கச்சக்தி வருமளவும் அப்பிராமணன் கிருகத்திலிருந்தேன். அவனும் அவனுடைய மனைவியும் மிகுந்த அன்புடன் என்னை ஆதரித்தார்கள். ஆனால் மகேசபுரத்திற்குப் போகும் மார்க்கம் ஒருவருக்கும் தெரியாது. யாருக்காவது தெரிந்திருந்தாலும் அவர்கள் உடன்வரச் சம்மதிக்கவில்லை. புருஷர்களிற்சிலர் அழைத்துக்கொண்டுபோய்விட ஒப்பினார்கள். ஆனால் அவர்களுடன் தனிமையாய்ப்போக எனக்கு மிகவும் அச்சமாயிருந்தது. பிராமணன் "வேண்டாம்" என்று தடுத்து "அவர்களுடன் போகக்கூடாதம்மா, அவர்கள் நடத்தை எப்படிப் பட்டதோ, அவர்கள் எண்ணம் என்னவோ, யாருக்குத்தெரியும்—நானே பெரிய ஸம்ஸாரி. உன்னைப்போன்ற ரூபவதிகளை எனக்கு நம்பிக்கையில்லாத புருடர்களுடன் கூட்டி எவ்விடத்திற்கும் அனுப்பசம்மதமில்லை" என்றான். நான் செய்வதென்ன? பதில் ஒன்றும் சொல்லாமல் இருந்துவிட்டேன்.

அக்கிராமத்தில் கிருஷ்ணதாஸவஸு என்னும் ஒரு பெரிய மனிதன் பத்னி பரிவார சமேதனாய்க் கல்கத்தாவுக்குப் போவதை ஒரு தினம் கேட்டு இது நல்ல சமயம் என்று யோசித்தேன். என் கணவனகம் கல்கத்தாவுக்குத் தூரமேயாம். ஆனாலும் கல்கத்தாவில் என்னுடைய சிறியதந்தை யாதோ ஒரு காரியமாக வந்து வாசம்பண்ணுவதாகக் கேள்விப்பட்டேன். கல்கத்தாவுக்குப்போய்ச் சிறிய தந்தையைக்கேட்டால் அவர் ஒருவேளை புருஷன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போவார், இல்லாவிட்டால் நடந்த விஷயங்களையாவது என் தகப்பனாருக்குத் தெரிவிப்பார் ; என்று மனத்தில் எண்ணினேன். இந்த யோசனையைப் பிராமணனுக்கும் தெரிவித்தேன். பிராமணன்:—இது சரியான யோசனை. கிருஷ்ணதாஸ பாபு எனக்குத் தெரிந்தவன். உன்னை அழைத்துக்கொண்டு போகும்படி நான் அவனைக் கேட்கிறேன். அவன் வயதானவன். பெரிய ஸம்ஸாரி. சன்மார்க்கப் பிரவர்த்தகன்.

இது சொன்னதும் பிராமணன் என்னை உடனழைத்துக்கொண்டு கிருஷ்ணதாஸ பாபுவினிடம் போய், அவனுக்கு "இவள் ஐசு

வர்ய சம்பன்னனுன ஒரு பெரிய கனவானின் புத்திரி. எதோ துரதிர்ஷ்டத்திஞல் வழிதப்பி இவ்வூருக்கு வந்திருக்கிருள். நீர் இவளைக் கல்கத்தாவிற்கு அழைத்துக்கொண்டு போய்விட்டால் ஆதரவற்ற இப்பெண் எங்ஙனமாவது தந்தையின் வீட்டை அடைவாள்'' என்று சொன்னுன்.

நான், அவன் அந்தப்புரத்தைச்சேர்ந்தவளாகி மறுநாள் அவன் வீட்டு ஸ்திரீகளுடன் கல்கத்தாவுக்குப் புறப்பட்டேன். முதல் நாள் 15-மைல்கள் கடந்து மறுதினம் கங்கையை யடைந்து அங்கு படகேறிக் கல்கத்தாவைச் சேர்ந்தோம். கிருஷ்ணதாஸ பாபு காளி கட்டத்தில் தேவி தரிசனத்திற்கு வந்தவஞனதிஞலே பவானிபுரத்தில் இறங்கினதும் என்னைப்பார்த்து "உன்னுடைய சிறிய தந்தை எங்கிருக்கிருன்? பவானிபுரத்திலா, கல்கத்தாவிலா?" வென்று கேட்டான். நான் அவனிருக்கும் இடம் தெரியாதென்று சொன்னேன். கல்கத்தாபட்டணம் நம்முடைய மகேசபுரத்தைப்போல் ஒரு சிறிய கிராமம்;ஒரு பெரிய மனிதனுடைய பெயரைச்சொன்ன மாத்திரமே, அவனிருக்கும் இடம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் என்று எண்ணினேன். இங்கே பார்த்தாலோ கல்கத்தாவானது அரண்மனைமயமாய்ச் சுவர்க்கலோகம்போலத் தோற்றுகிறது. ஆதலால் என்னுடைய சிறிய தந்தை இருக்குமிடத்தைக் கண்டு பிடிக்கும் உபாயம் இன்னதென்று தெரியவில்லை.

கிருஷ்ணதாஸ பாபு எனக்காக அவனிருக்குமிடத்தை விசாரித்தான். ஆயினும் கல்கத்தாவில் நாட்டுப்புறத்திலிருந்து வந்திருக்கும் ஒரு எளியவனைக் கண்டுபிடிப்பதற்கு இந்த விசாரணையால் என்ன பிரயோஜனம்?

கிருஷ்ணதாஸ பாபு தேவிதர்சனம் செய்துகொண்டு காசிக்குப்போகவேண்டுமென்று யோசித்திருந்தபடியேபிரயாணப்பட்டான். நான் என்னுடைய கதியை நினைத்து அழத்தொடங்கினேன். அதைப்பார்த்துக்கிருஷ்ணதாஸ பாபு "என் பேச்சைக் கேள், எனக்கு அறிமுகமான நண்பனெருவன் இங்கு இருக்கிருன். அவன் பெயர் இராமதாஸன். உன்னைப்பற்றி அவனிடம் பேசியிருக்கிறேன். அவனுக்குச்சமையல் செய்ய யாருமின்றிக் கஷ்டப்படுகிருன். நம்பக்கத்திலிருந்து நல்ல நடத்தையுள்ளவர்கள் யா

ராவது இருந்தால் அவரை யேற்பாடு பண்ணித்தரவேண்டுமென்று கேட்டான். நான் விசாரித்துத் தெரிவிக்கிறேன் என்று சொன்னேன். நீ இவ்வேலைக்கு ஒப்புக்கொள். இதுவன்றி வேறு உபாயம் ஒன்றும் தோன்றவில்லை. உனக்காகச் செலவிட்டுக்கொண்டு காசிக்குப்போக எனக்குச் சக்தியில்லை. காசிக்கு வந்தால் நீ அங்கே தான் என்ன செய்வாய்? இங்கேயாவது இருந்தால் உன் சிறிய தகப்பனுருடைய செய்தியாவது தெரிந்துகொள்ளலாம்" என்று சொன்னுன்.

நான் இனிச் செய்வதென்ன? ஒப்பித் தீரவேண்டியதாயிற்று. ஆனுல் இரவும் பகலும் "ரூபம்! ரூபம்! லாவண்யம்! அழகு!"—இதைக் கேட்கக்கேட்க எனக்குக்கொஞ்சம் அச்சம் உண்டாயிற்று. எப்படித் தெரியாதவர் வீட்டிலிருப்பது?

நான்:—இராமபாபுவுக்கு வயதென்ன?

கிருஷ்ணதாஸ்:—இராமபாபுவுக்கு என் வயதாயிற்று.

நான்:—அவனுக்கு மனைவியுண்டா இல்லையா?

கிரு:—இரண்டு மனைவிகளுண்டு.

நான்:—அவன் வீட்டில் மற்றும் யாராயினும் புருஷர்களுண்டோ?

கிரு:—அவன் சிறிய மனைவியின் பிள்ளை அவிநாசபாபு என்பவன்—வயது பத்துவருஷம்—மற்ருருவன் அவன் சகோதரியின் குமாரன்—அவன் பிறவிக் குருடன்.

நான் பரிசாரகி வேலைக்கு ஒப்பினேன். மறுநாட்காலையில் கிருஷ்ணதாஸ பாபு என்னை அழைத்துக்கொண்டுபோய் இராமபாபு வீட்டில் விட்டான். கடைசியாக நான் சமையல் செய்யும் வேலைக்கு ஒப்பும்படியாகவும் ஆயிற்று. கண்டவர் வீட்டில் வேலை செய்து காலங்கழிக்கவும் என் தலையில் எழுதியிருந்தது. பிரமன் எழுதிவைத்ததை யாரால்தான் தீர்க்கமுடியும். கர்மம் எவரையும்விட்டதன்று.

அத்யாயம் 3.

எனக்கு வரும் சம்பளத்தை யெல்லாம் செலவழியாது சேர்த்து வைத்து மாமனுர் வீட்டிற்கு எப்படியாவது போய்ச்சேர

வேண்டுமென்று தீர்மானித்தேன். ஆனால் மகேசபுரமென்னும் கிராமமொன்றிருக்கிறதென்பதே யாருக்கும் தெரியாது. யாரைக் கேட்டாலும் இருக்குமிடத்தைச் சொல்லமுடியாதவர்களாய் இருந்தனர். நானோ குலஸ்திரீ. அந்தக் கிராமம் எந்த ஜில்லாவைச் சேர்ந்தது; எந்தத்திக்கில் இருப்பது என்றும் தெரியாதவளாய் இருந்தேன். அவைகளைச் சொன்னாலல்லாமல் மகேசபுரம் எங்குளது என்று யார்தான் சொல்லமுடியும். இப்படியாக ஒரு வருடம் வரையில் இராமபாபு வீட்டில் காலங்கழித்தேன். ஆண்டொன்றானதும் மூடிய கண்ணைத் திறந்தது போலாயிற்று. அந்தகாரமான ஆரண்யத்தில் ஏதோ தொலைதூரத்தில் சிறிது வெளிச்சத்தைப் பார்த்ததுபோலிருந்தது. ஆவணிமாதத்து இரவில் நக்ஷத்திரக்கூட்டத்தையும், கார்த்திகைமாதத்து மூன்றாம் பிறையையும் கண்டதுபோலாயிற்று.

ஒருதினம் இராமபாபு என்னை அழைத்து "இன்றையதினம் பெரிய மனிதர் ஒருவரை விருந்திற் கழைத்திருக்கிறேன். அவர் எனக்கு எஜமானர். நான் அவருக்குக் கடன்காரன். இன்றைய தினம் சமையல் வகைகளெல்லாம் நன்றாயிருக்கவேண்டும். இல்லாவிடில் பெருங்கஷ்டத்திற் கிடமாகும்" என்றார்.

நான் மிகவும் பயத்துடன் என்னாலான மட்டும் நன்றாய்ச் சமைத்தேன். போஜனசாலையும் பாகசாலையும் ஒரே இடமாக இருந்ததினால் நானே அவர்களுக்குப் பரிமாறும்படி நேர்ந்தது. இராமபாபுவும் விருந்தாளியும் ஆக இந்த இருவருமே சாப்பிட உட்கார்ந்தார்கள். முன்னர் அன்னம், காய்கறி முதலானவைகளைப் பரிமாறினேன். பிறகு சிற்றுண்டிகளை எடுத்துப்போனேன். நானோ அன்னிய திருஷ்டிக்குப் புலப்படாதிருக்கத் தக்கவள். ஆனால் முகத்தை மூடுவதினாலேயே மாதர்களுக்குள்ள ஸ்வபாவ குணம் மாறுவதில்லை. மூடின மூகத்துடனேயே விருந்திற்கு வந்திருப்பவர் முகத்தைப் பார்த்தேன். அவருக்கு வயது முப்பது வருஷம் இருக்குமென்று தோன்றிற்று. சிவந்த நிறமும், பரந்த மார்பும், மலர்ந்த முகமும், அகன்ற கண்களும், பருத்த தோளும், நீண்ட கைகளும், மன்மதனை நிகர்த்த அழகும் வாய்ந்தவராய் இருந்தார். பெண் பாலோர் அவரைப் பார்த்தால் இச்சை கொள்

ளார் என்று சொல்வதற்கில்லை—அடிக்கடி வர்ணிப்பதில் என்ன பிரயோஜனம்? போஜனத்தட்டுடனே அப்போதைக் கப்போது அவரைப் பார்ப்பேன். மூடிய முகத்துடன் திருட்டுப் பார்வையாய் அவரை இடைவிடாது பார்த்தேன். அவரும் முகத்தை எடுத்து நோக்கி நான் அவரை உற்று நோக்குவதைத் தெரிந்துகொண்டார். இருட்டில் விளக்கு வெளிச்சம் எவ்வளவு பிரகாசத்தைத் தருமோ அப்படியே மூடிய முகத்தை யுடையவள் பார்வையானது மிகவும் தீவிரமான தென்பார்கள். அவரும் அதே எண்ண முடையவர் என்றிருந்தேன். அவர் என் மனத்தையறிந்ததும் கொஞ்சம் புன்னகை யுடனே தலைவணங்கினர். நான் பலகாரங்களை யெல்லாம் அவர் இலையில் பரிமாறி வந்துவிட்டேன்.

நான் வரும்போது சற்று நாணமும், சந்தோஷமுமுடைய வளாய் வந்தேன். கொஞ்சம் சிரித்த முகத்துடன் வந்தேன். இப் பெண் ஜன்மம் எடுத்ததற்கு அப்போதுதான் நான் சிரித்தது. இது வரையில் ஒருவரும் என்னைப் பார்த்து இனிமையான சிரிப்போடு கூடிய முகத்தையுடையவர்களா யிருக்கவில்லை. மற்றவர்கள் சிரித்த சிரிப்பெல்லாம் எனக்கு விஷமாயிருந்தது.

இவ்வளவு கேட்டதும் போதும்போதுமென்று கற்புள்ள காரிகையர் என் மேல் கோபங்கொண்டு—"பாவி! இப்படியும் உண்டா? அயலானிடத்து ஆசையும் பிறந்ததோ?"—என்று வாய்க்கு வந்தபடி என்னைத் திட்டுவார்களென்றே நினைக்கிறேன். அம் மகாபுருஷனிடத்து ஆசையுண்டானது உண்மைதானென்று ஒப்புக்கொள்ளுகிறேன். என்ன செய்பலாம். நான் கணவனை யுடையவளா யிருந்தும் கைம்பெண் பிறப்பு எடுத்தவள்போ லானேன். என்னுடைய விவாக காலத்தில் மாத்திரம் என் கணவனை யொருதரம் பார்த்தவளே யன்றிப் பிறகு கண்டு களிப்பதற்குக் கொடுத்துவைக்கவில்லை. என்னுடைய யௌவந சம்பத்தெல்லாம் பயனற்றதாய்ப் போயின. கம்பீரமான ஸாகர ஜலத்தில் படகைத் தள்ளிச் செலுத்தும் துடுப்பே யுடைந்துபோமானல் அலைகள் மிகவும் மும்முரமாய் அடிக்கும்போது சிறு பலகைகளால் கூட்டப்பட்ட படகு உடைந்து போவதும் ஒரு அதிசயமோ!

நானென்னவோ குற்றமுள்ளவளே. காரணமிருக்கட்டும். அல்லது இல்லாமலிருக்கட்டும். பாபமென்பது என்றும் பாபமே

யாம். பாபத்திற்கு நிமித்தம் என்பதுண்டோ? நான் பிறந்தது முதல் செய்த பாபம் முதலும் கடைசியும் இதுவே.

சமையல் இடத்திற்கு வந்து உட்கார்ந்ததும் இந்தாமணீமனோகரனை எங்கேயோ பார்த்ததாக ஞாபகம் பிறந்தது. என்னுடைய சந்தேகத்தைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு மறுபடியும் மறைந்து அவரைப் பார்க்கலாமென்றெண்ணிப் போய்க் குறிப்பாக அவரைப் பார்த்தேன். மனத்திற்குள் நிச்சயம் பிறந்தது. முன் எண்ணிய எண்ணமே திண்ணமாயிற்று.

அப்போது இராமபாபு இன்னும் பக்ஷணங்களைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார். அவ்விதமே செய்திருந்த விதம் விதமான சிற்றுண்டிகளைப் பரிமாறச் சென்றேன்—பார்த்தேன்—என்னுடைய பார்வையானது விருந்தாளியினுடைய மனத்தில் விழுந்ததென்று தோன்றிற்று. அவர் இராமபாபுவைப் பார்த்து "பாபூ! சமையல் மிகவும் நன்றாயிருக்கிறதென்று உம்முடைய சமையல் காரிக்குச்சொல்லுங்கள்" என்றார்.

இராமபாபு அவருடைய உள்ளெண்ணத்தை யறியாமல் "ஆமாம் சமையல் நன்றாய்ப் பண்ணுகிறாள்" என்றார். நான் "உங்கள் சமையல் பாழாயிற்று" என்று மனத்திற்குள் வேடிக்கையாய்ச் சொல்லிக்கொண்டேன்.

விருந்தாளி:—'இதில் ஒரு விசேஷம். என்னவென்றால் உங்களுடைய வீட்டுச் சமையலில் இரண்டொரு பதார்த்த வகைகள் எங்கள் நாட்டிற் செய்வனபோல் இருக்கின்றன' என்றார்.

நான் 'தெரிந்தது' என்று மனத்திற்குள் சொல்லிக்கொண்டேன். உண்மையாகவே நான் செய்திருந்த இரண்டொரு சமையல்வகைகள் எங்கள் ஊர்ப்பக்கத்திற் செய்கிறபடியே செய்திருந்தேன்.

இராமபாபு:—'அப்படியே யிருக்கலாம்; அவளும் இத்தேசத்தைச் சேர்ந்தவளல்லள்' என்றார்.

இதைக் கேட்டதும் என் முகத்தை ஏறெடுத்துப் பார்த்து "என்ன அம்மா, உங்கள் ஊரெது" என்று கேட்டார்.

எனக்கு இருபக்கத்திலும் கஷ்டம் நேர்ந்தது. பொய் சொல்வதா, அல்லது மெய் சொல்வதா? பொய்யே பேசவேண்டுமென்று நிஷ்கர்ஷித்தேன். எப்படி நிஷ்கர்ஷை செய்தேனோ அதை, ஸ்திரீ

களின் ஹிருதயத்தைச் சாதுர்யத்தோடு கூடியதாயும், க்ஷாத்திரவழியில்செல்லத்தக்கதாயும் சிருஷ்டித்த பரமனே அறிவான். நியாயமாக மெய்தான் சொல்லவேண்டுமென்று என் மனத்தில் பட்டது. ஆனால் இந்தத்தடவை ஒரு பொய் சொல்லிப்பார்க்கலாமென்றெண்ணி— "என்னுடைய ஊர் நீலஸரோவரம்" என்றேன். அவர் கொஞ்சம் திடுக்கிட்டுச் சற்று நாழிகை மௌனமாயிருந்து அதின்பின் மெதுவான தொனியோடு "எந்த நீலஸரோவரம், திருட்டு நீலஸரோவரமோ" என்றார். "ஆமாம்" என விடை பகர்ந்தேன். அவர் மீண்டும் பேசவில்லை.

நான் பக்ஷியம் கொண்டுவந்த தட்டைக் கையில் பிடித்துக் கொண்டு அப்படியே நின்றேன். அங்ஙனம் நின்றது சரியல்ல; என்னவோ மறந்து நின்றுவிட்டேன். அவர் நான் சொன்னதைக் கேட்டதற்கப்புறம் நன்றாய்ச் சாப்பிடவில்லை. அதைக்கண்ட இராமபாபு "உபேந்திரா! இதென்ன, எதையும் எடுத்துண்ணவில்லையே! எதற்காக?" என்றார். எனக்குக் குறைவாயிருந்தது இவ்வார்த்தையைக் கேட்பது ஒன்றுதான். உபேந்திரபாபு! உபேந்திரபாபு!! உபேந்திரபாபு!!! இப்பெயரைக் கேட்பதற்குமுன்னமே இவர் என் ஸ்வாமி என்று தெரிந்துகொண்டிருந்தேன். பிறகு நான் சமையலறைக்குப்போய்ப்பாத்திரத்தை விட்டெறிந்து இத்தனை ஸம்வத்ஸரங்களுக்குப் பிறகு இப்போது தான் ஒரு தடவை ஸந்தோஷமனமுடையவளாய் உட்கார்ந்துகொண்டேன். நான் பாத்திரத்தை விட்டெறிந்த ஓசையைக் கேட்டு இராமபாபு "அதென்ன விழுந்தது" என்று கூப்பிட்டார். நான் சும்மா இருந்துவிட்டேன்.

அத்யாயம் 4.

இவ்விடத்தினின்றும் இந்த என் சரித்திரத்தை முடிப்பதற்கு முன்னர் நூறுயிரம் தடவை என்னுடைய கணவனைக் குறித்துப் பேசவேண்டியிருக்கும். ரஸிகரான நீங்கள் ஐந்து ஸௌமங்கலிகளை ஸபை சேர்த்து, நான் எந்தப் பதங்களால் அவரைக்குறித்துப் பேசலாமென்பதைத் தீர்மானம் செய்து சொல்லுங்கள். நூறுதடவை "ஸ்வாமி, ஸ்வாமி" என்று சொல்லி உங்களுக்கு அருவருப்பையுண்டாக்கட்டுமோ? இல்லையேல் "பிராணநாதா! புவனவல்லபா! ரமணீ மனோஹரா! பிராணகாந்தா!"—என்று இப்படிப்பட்ட பதங்

களை உபயோகித்து அவரைப் பேசட்டுமோ? கிராமாந்தரங்களில் இருப்பவர்கள் கூறுவதுபோல் "எங்கள் அகத்துக்காரர்" என்று சொல்லட்டுமோ? நான் பிரியத்துடன் கூப்பிடப்பட்டவர்யாரோ—யாரை நிமிஷத்திற்கு ஒருதரம் அழைக்கவேண்டுமென இஷ்டப்பட்டிருககிறேனோ—அவரை என்னவென்று அழைக்கலாம்? இந்த நம் பாஷையிலேயே சரியான பதங்கள் அகப்படுவது அரிதாயிருக்கிறது. என்ன செய்யலாம். என்னுடைய ஸ்நேகிதி ஒருத்தி (அவள் நகரவாசம் செய்பவள்) தன் கணவனை எஜமானர் என்று அழைப்பது வழக்கம். அதில் பிரியத்தைக் காண்பிப்பது ஒன்றுமில்லாததினால் நம்முடைய எஜமானர் என்று கூப்பிடுவாள். எனக்கும் ஒன்றும் தோன்றாதபடியால் நானும் அவவிதமே சொல்லத் துணிகிறேன். பிழையிருப்பின் என்னை மன்னிப்பீர்களாக. பாத்திரத்தை விட்டெறிந்து உட்கார்ந்துகொண்ட நான், கைவிட்டுப் போன தனத்தைக் கடவுள் கைக்குக் கொண்டுவந்து கொடுத்திருப்பதினால் அதை மறுபடியும் விட்டுவிடக் கூடாது; சிறிய குழந்தைகளைப்போல் நாணப்பட்டு எல்லாவற்றையும் இழக்கவும் கூடாது என்று மனத்தில் உறுதிபண்ணிக்கொண்டேன்.

இப்படித்துணிந்ததும் என் எஜமானர் சமையலறையிலிருந்து வெளியே போகும்போது இருபக்கமும் பார்த்துக்கொண்டு போகிறாரா, இல்லையா, இதைத் தெரிந்துகொள்ளலாமென்றெண்ணி அவர் வரும் வழியில் ஒரு பக்கமாய் நின்றுகொண்டேன். இவர் போகும்போது அங்குமிங்கும் பார்க்காமல் போகமாட்டார் என்று நன்றாயறிவேன். அவ்வளவாயினும் தெரிந்திராமற்போனால் பத்தொன்பது பிராயமுள்ளவளாகியும், "புருஷர்களுடைய நடத்தையைத் தெரியாதவளென்ற சொல்லும்படியா யிருக்கும். நான் மனத்திலிருப்பதைச் சொல்லுவேன். நீங்களெல்லோரும் என்னை மன்னிக்கவேண்டும்: நான் என்ன செய்தேனென்றால் முகத்தில் போட்டிருக்கும் துணியை யெடுத்துவிட்டு நின்றுகொண்டேன். இன்னும் சிலமாதிரியாய் நின்றுகொண்டேன். ஆனால் அதை இப்போது சொல்வதற்கு வெட்கமாயிருக்கிறது. நீங்களே யோசித்துப்பாருங்கள். நான் அந்தச் சமயத்தில் என்ன செய்திருக்கலாம்?

முன்பாக இராமபாபு புறப்பட்டுப் போனார். அவர் ஒருபக்கமும் திரும்பிப் பாராமல் குனிந்த தலையுடன் நேரே சென்றார். அவர்பின் என்னுடைய எஜமானர் வந்தார். அவர் கண்களால் நான்கு பக்கத்திலு மிருப்பதை உன்னிப் பார்த்துக்கொண்டு போனார். நான் அவர் கண்களுக்கு எதிர்ப்பட்டேன். அவருடைய கண்கள் என்னையே தேடிக்கொண்டிருந்தனவென்று நன்றாய் விளங்கிற்று. அவர் என்னைப்பார்த்ததும், நான் சம்பூர்ணமாய்—என்ன சொல்லலாம்—கூறுவதற்கு வெட்கமாயிருக்கிறது. பாம்பிற்குப் படம்எடுப்பது எப்படி ஸ்வபாவமோ அப்படியே ரமணீமணிகளுக்குக் கடைக்கண்ணால் பார்ப்பது இயற்கையாம். நான் யாரை என்னுடைய எஜமானர் எனத் தெரிந்திருந்தேனோ, அப்படிப்பட்டவரை எதற்காக நான் மற்றவர்களைக்காட்டிலும் உன்னிப்பாய்ப் பார்க்கக் கூடாது. என்னுடைய பிராணேசுவரர் நான் பார்த்த கடைக்கண் பார்வையினால் அடிபட்டவராகிப் புறம்போய்விட்டார். என்னையன்றி இராமபாபு வீட்டில் இன்னொரு பரிசாரகி யிருந்தாள். அவள் என்னிடத்தில் மிகுந்த வாத்ஸல்யம் வைத்திருந்தனள். அவளும் என்னைப்போன்ற வேலைக்காரியே. நான் அவளைப்பார்த்து 'அடி தங்காய்' நீ எனக்கு ஒரு உபகாரம் செய்யவேண்டும், என்னவெனில் வந்திருக்கும் பாபு எப்போது புறப்பட்டுப் போகிறார் என்பதையறிந்துவந்து சீக்கிரம் எனக்குச்சொல்லவேண்டும்" என்றேன்.

ரமை:—புன்சிரிப்புடன், 'சீ! அக்கா! உனக்கென்ன இந்த நோய் — —? இப்படிப்பட்ட வியாதிக்கு நீ உட்பட்டவளென்று நான் தெரிந்திருக்கவில்லை' என்றாள்.

நான்:—சிரித்துக்கொண்டே, 'மனிதர்களுக்கு எல்லாச் சமயமும் ஒரே விதமாய் இருக்காது. இப்போது நீ ஜகத்குருவா யிரு. எனக்கு இந்த உதவியைச் செய்வாயா இல்லையா? சொல்' என்றேன்.

ரமை:—உனக்காக இப்போது என்னவோ இவ்வேலையைச் செய்வேன். மற்றவர் யாருக்கும் இவ்வித காரியத்தை இனியென்றும் பண்ணமாட்டேன்.

ரமையினுடைய ரமணீயமான நீதி உறுத்தும் வழியானது மிகவும் சிலாகிக்கத்தக்கதாகவே இருந்தது. ஆயினும் ரமை நான்

சொன்னதைச் செய்வதற்கு ஒப்பினுள். திரும்பிவர அதிக நேரம் சென்றது. அவ்வளவு நேரம் வரையில் சகோரபக்ஷிபோலக் காத் திருந்தேன். மணி நான்காயிற்று. ரமையும் பின் திரும்பிவந்து நகைத்து—நகைத்து—"பாபுக்கு யாதுகாரணத்தாலோ உடம்பு சரியாயில்லையாம். ஆனதால் இன்று போவதற்கு முடியாதென்று சொன்னுர். நான் அவருடைய படுக்கையை எடுத்துப்போவதற் காக வந்தேன்." என்ருள்.

"யாருக்குத் தெரியும்—ஒருவேளை மத்தியானத்திற்குப்பிறகு போகவும் கூடும். நீ யாரும் இல்லாத சமயம்பார்த்து அவரிடத் துக்குப்போய், உங்களுக்குப் போஜனம் சரியாக இல்லை; இரவு இருந்து நன்ருய்ச் சாப்பிட்டுவிட்டுப் போகவேண்டும். இது பரிசா ரகியினுடைய விருந்து; உண்மையையொருவருக்கும் உரைக்காமல் யாதாயினும் வேறே யொரு உபாயஞ்சொல்லிவிட்டு இன்றிரவு மட் டும் தயவு செய்து தங்கும்படியாக என்னுடைய ஸகி வேண்டிக் கொண்டாள் என்று சொல்" என்று கூறியனுப்பினேன்.

ரமை:—சிரித்து—சீ! சீ! என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள்.

பிறகு சில நிமிஷங்கள் கழித்து என்னிடம் திரும்பிவந்து "நீ' சொன்னதையும் சொன்னேன். பாபுவும் உன்னைப்போன்ற வரெனத் தோன்றுகிறது. சரியென ஒத்துக்கொண்டார்' என்ருள்.

இதைக் கேட்டதும் நான் மிகவும் ஆனந்திதையானேன். ஆனுல் மனத்தில் கொஞ்சம் அவரை நிந்திக்கலானேன். எனக் கெப்படியும் அவர் என்னுடைய கணவர் என்பது தெரியும். ஆன தால் நான் செய்ததெல்லாம் குற்றமாகத் தோன்றவில்லை. அவர் மட்டும் என்னை இன்னுளென்று அறிந்துகொண்டதாகப் புலப்பட வில்லை. என்னுடைய பதினென்ருவது பிராயத்தில் அவர் என் னைக் கண்டதேயன்றிப் பின் ஒருபோதும் பார்த்ததில்லை. ஆகை யால் அவரென்னை இன்னுள் என்று தெரிந்துகொண்டாரென்பது சந்தேகம். அவர் என்னை அயலாள் என்று அறிந்தும் என்னிடத்து ஆசைகொண்டதற்குத்தான் நான் அவ்விதம் வெறுக்கலானேன்.

ஆனுல் அவர் எப்படியும் என்னுடைய நாதன். நான் அவரு டைய அடியாள். அவர்மீது குற்றங் கண்டுபிடிப்பது பதியின்பாத

சேவகிகட்கு அழகல்லவென்று அவ்வெண்ணத்தை மறந்துவிட்டேன். சமயம் வாய்த்தால் அவர் செய்தது அடாதது என்று அவருக்கு அறிவுறுத்தலாமென்றும் மனத்தில் எண்ணினேன்.

பிரயாணத்தை நிறுத்துவதற்கு அவருக்குக் காரணம் என்பது சிறிதும் வேண்டுவதில்லை. அவருக்குக் கல்கத்தாவில் கொடுக்கல் வாங்கல் இருந்தது. அப்போதைக்கப்போது வருவதுண்டாம். இராமபாபுவுக்கும் கொடுக்கல் வாங்கலுண்டாம். ஆகையால் தான் அவர்கள் இருவருக்கும் ஸ்நேகம். மத்தியானத்திற்குமேல் ரமையின் பேச்சுக்கொப்பி இராமபாபுவைப் பார்த்து "இந்தத் தடவை வந்திருக்கும்போதே கணக்கை முடித்துக்கொண்டுபோனால் நலமாயிருக்குமென்று தோற்றுகிறது" என்றார். இராமபாபு "அதற்கென்ன தடை? இஷ்டப்படியே செய்யலாம். கணக்குப்பத்திரம் வகையறுக்கள் கடையில் இருக்கின்றன. சொல்லித் தருவிக்க வேண்டும், வந்துசேருவதற்கு இரவாகும். தாங்கள் தயவுசெய்து காலை வந்தாலும் சரி, அல்லது இரவு இங்கே தங்கிக் காலையில் கணக்குகளைப் பார்த்துக்கொண்டு போனாலும் சரியே" என்றார். அதற்கு அவர் "அப்படியே செய்யலாம். இப்போது நான் ஸ்வந்த வீட்டிலிருப்பது போலவேயாம். நாளையதினம் எல்லாம் தீர்த்துக்கொண்டே போகிறேன்" என்றார்.

அத்யாயம் 5.

போஜனமான பின்னர் அனைவரும் சயனிக்கச் சென்றனர். நான் நல்ல நிசிவேளையில் ஒருவருக்கும் தெரியாமல் இராமபாபுவின் சயன அறைக்குச் சென்றேன். அவ்விடத்தில் என்னுடைய எஜமானர் ஒருவரே சயனித்திருந்தார். பெரியவளானதின் பிறகு இதுதான் முதல் தடவை என் நாதனுடன் பேசப்போனது. அச்சுகம் எப்படிப்பட்டதோ? எங்ஙனம் சொல்வது—நான் ஒன்றும் அறியாத பேதை. இப்போதுதான் முதல்தடவையாக அவருடன் பேசவாரம்பித்தேன். பேச்சே வரவில்லை. தொண்டையும் கட்டிக்கொண்டது. நடுக்கமுண்டாயிற்று. மார்பும் படபடவென்று துடித்தன. நாவுமுலர்ந்தது. வார்த்தையொன்றும் சொல்வதற்கு முடியாமல் அழுதுவிட்டேன். அவர் "எதற்காக அழுகிறாய்? நான் உன்னைக் கூப்பிடவில்லை. நீயாகவே வந்தாய். அப்படியிரு

க்க அழுவதேன் " என்றார். இக்கடினமான வார்த்தையினால் அவருடைய இரகஸ்யமெல்லாம் தெரிந்துகொண்டேன். அவர் என்னைக் கற்பழிந்தவளென எண்ணிவிட்டாரே என்று கண்ணீர் இன்னும் அதிகமாகப் பெருக வாரம்பித்தது. இந்த வேதனையைப் பொறுக்க முடியாமல் மனத்திலிருப்பதைச் சொல்லிவிடலாமென்றும் எண்ணினேன். அப்போது நான் இன்னாரென்பதைச் சொன்னால் அவர் என்னை நம்பாமல் "இவள் நீலஸரோவரத்தவள். என்னுடைய மனைவி கள்வர்களால் அபகரிக்கப்பட்டதை யறிந்தாவது அல்லது கேட்டாவது இருக்கவேண்டும். என்னுடைய ஐசுவர்யத்திற்கு ஆசைகொண்டல்லவா என்னுடைய மனைவிஎன்று பொய் சொல்லுகிறாள்" என வெண்ணிவிட்டால் பிறகு அவருக்கு நம்பிக்கையுண்டாகும்படி செய்வதெப்படி என்று மனத்தில் நினைத்தேன்.

ஆகையால் நான் யாரென்பதைத் தெரிவிக்கவில்லை. பெருமூச்செறிந்து கண்ணீரைத் தடைத்துக்கொண்டு அவருடன் பேசத்தொடங்கினேன்—இங்ஙனமாகக் கண்டதையெல்லாம் பேசிவருகையில், அவர் கடைசியாக "நீ உன்னுடைய ஜென்ன பூமி நீலஸரோவரமென்று சொன்னாய், நீலஸரோவரத்தில் இவ்வித சௌந்தர்யவதி யுண்டென்று கனவிலும் கேட்டதில்லை" என்றார். நான் முந்தாணியைச் (முன் தானை) சரியாகப் போட்டுக்கொண்டு "சுந்தரியோ மந்தரியோ, என்னுடைய தேசத்தில் அவரவர் மனைவிகளே எல்லாரிலும் மேம்பட்ட அழகுடையவர்களென்று எண்ணுவார்கள்" என்றேன். வேணுமென்றே அவருடைய மனைவியின் சமாசாரத்தை யெடுத்து, அவளுடைய செய்தி ஏதாவது அவருக்குத் தெரியுமாவென்றுங் கேட்டேன்.

அவர்:—இல்லை—நீ—உன்னூரைவிட்டு எத்தனை வருஷமாயிற்று?

நான்:—களவு நடந்த மறுதினமே எங்கள் ஊரை விட்டு வந்தேன். எப்படியும் உங்களுக்கு மறு விவாகம் ஆயிருக்கிறதாகத் தோன்றுகிறதென்றேன்.

அவர்:—இல்லை.

சக்களத்தி ஒருத்தி இல்லையென்பதையறிந்து மிகவும் சந்தோஷித்தேன்.

நான்:—தாங்கள் பெரிய மனிதர்; பின் வருவதை யோசித்துக் கல்

யாணம் செய்துகொள்ளவில்லையென்று தெரியவருகிறது. அங்ஙனம் செய்துகொண்டிருந்தால் பிறகு தங்களுடைய முதல் மனைவி ஒருகால் அகப்படுவாளாயின் "இரண்டு பெண்டாட்டிக்காரன் திண்டாட்டப்பட்டான்" என்பதற்கிணங்க இரு மனைவிகளையும் திருப்தி செய்யமுடியாமல் கஷ்டத்திற்குட்படுவீர்களன்றோ?

அவர்:—புன்சிரிப்புடனே—அந்த பயம் ஒன்றுமில்லை. அகப்பட்டாலும் மறுபடியும் அவளைச் சேர்த்துக்கொள்வேனெனத் தோன்றவில்லை. இன்னும் ஜாதிக்கட்டில் இராள்.

இதைக் கேட்டதும் தலைமேல் இடி விழுந்ததுபோலாயிற்று. என்னுடைய ஆசையும் தைரியமும் தூர விலகின. நான் அவருடைய மனைவியெனத் தெரிவித்து அவருக்கு ஆசையைக் காண்பித்தாலும், என்னைச் சேர்த்துக்கொள்ளப் போகிறதில்லை யென்று எண்ணினேன். என்னுடைய பெண் ஜன்மம் வீணாயிற்று.

என்னாலானமட்டும் மனத்தை ஒருவாறு ஸமாதானப்படுத்திக்கொண்டு "தாங்கள் அவளை இப்போது பார்த்தால் என்ன செய்வீர்கள்" என்று கேட்டேன்.

அவர்:—"அவளைத் தள்ளிவிடுவேன்" என்றார்.

என்ன நிர்த்தயவு! நான் ஆசையற்றவளானேன். என்னுடைய கண்களுக்குப் பூலோகம் தலைகிழாச் சுழன்றது. அன்றிரவு நான் என்னுடைய கணவன் படுக்கையின்மீது உட்கார்ந்துகொண்டு ஆனந்தகரமான ஆசையை விளைவிக்கத்தக்க அவருடைய அழகிய மேனியைக் கண்டு "இவர் என்னைத் தம்முடைய பத்நியாகச் சேர்த்துக்கொள்ளாமற்போனால் உயிரை விட்டுவிடுவதாக" நிச்சயித்துக்கொண்டேன்.

அத்யாயம் 6.

அதற்குமேல் நான் வியஸனமடைந்தவளாகியிருந்ததை விட்டுவிட்டேன். எனது புன்னகை, கடைக்கணித்தல் முதலியவைகளுக்கு அவர் வசப்பட்டிருக்கிறாரென்பதை ஏற்கனவே தெரிந்துகொண்டிருந்தேன். காண்டாமிருகமானது தன் சரீரத்தைக் காப்பாற்றும்பொருட்டுக்கத்திபோன்ற கூர்மையுள்ள தன்னுடைய துதிக்கையை யுபயோகித்தல் எப்படிப் பாபமில்லையோ, யானை தன்

தந்தங்களைப் பிரயோகிப்பதினால் எப்படிப் பாவம் செய்கிறதில்லை யோ, புலியானது தன்னுடைய நகங்களாற் பீறிக் கொல்வதினால் எப்படிப் பாவத்தை யடைகிறதில்லையோ, வனத்தில் சஞ்சாரம் செய்கின்ற காட்டெருமையானது தன்னுடைய கொம்பினாற் குத்தி வதை செய்வதால் எப்படிப்பாபியாகாதோ—அப்படியே நான் செய் யும் ஸாகஸங்களால் பாபத்திற்குப் பாத்திரனாகேனென்று மனத் தில் எண்ணினேன். ஸர்வலோக சரண்யராகிய ஜகதீசன் நமக் கென்று கற்பித்திருக்கும் ஆயுதங்களையெல்லாம் நம்முடைய மங் களத்திற்காகவே உபயோகிக்கவேண்டுமென நிஷ்கரிஷித்தேன். நான் அவருடைய ஸமீபத்திலிருப்பதைவிட்டுத் தூர வந்து உட் கார்ந்து புன்சிரிப்போடு அவருடன் வசனிக்கத் தொடங்கினேன். அவர் எனது அருகில் வந்தார். அப்போது நான் "என்னிடம் வருவது யுக்தமன்று, தங்களுக்கு என்னவோ பிரமையுண்டானாற் போல் தோன்றுகிறது" எனச் சிரித்துச்சிரித்துச் சொல்லிக்கொ ண்டே என்னுடைய கூந்தல் முடிப்பை யவிழ்த்து * மறுபடியும் முடிச்சுப்போட்டுக்கொண்டு "தங்களுக்கு என்னவோ என்மீது ஆசையுண்டானதுபோல் தோற்றுகிறது, நான் வேச்யாங்கனை யல்ல; எங்களுடைய தேசத்து வர்த்தமானங்களைத் தங்களிடத்தி னின்றும் தெரிந்துபோகலாமென்று வந்தேன். தாங்கள் என்னை ப்பற்றி எண்ணியிருக்கும் அபிப்பிராயத்தைத் தயவு செய்து விட்டு விடுங்கள்" என்றேன்.

அவர் நான் சொன்னதை நம்பவில்லைபோல் காணப்படுகிறது. என்னுடைய வார்த்தைகளுக்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் என் முன்பு வந்து உட்கார்ந்துகொண்டார். நான் சிரித்த முகத்துடன் "நீங்கள் நான் சொல்லும் வாசகங்களைச் செவியில் ஏற்றுக்கொள்வ தில்லைபோலும். தங்களை இவ்வளவு நேரம் பார்த்ததும் சம்பாஷித் ததுமே போதுமானது" என்று சொல்லிக்கொண்டே எழுந்தேன்.

நான் நிஜமாய் எழுந்ததைப் பார்த்து அவர் என்னுடைய கை யைப் பிடித்துக்கொண்டார். நான் கோபித்துக் கையை விடுவித் துக்கொண்டு புன்னகை மலிந்த முகத்துடன் "நீர் சரியான நடத்

*உண்மையாய் நடந்ததைச் சொல்லாமல் யார்தாம் இக்கதையை நம்பு வார்கள்.

தையுள்ளவரெனத் தோற்றவில்லை" என்று சொல்லி "என்னைத் தொடவேண்டாம். அன்றியும் என்னை வியபிசாரி என்று எண்ணியிருப்பீர்களாகில் அது மிகவும் பிசகான விஷயம்" என்று சொன்னேன். இதைச் சொன்னதும் வாசலின்புறத்துத் திரும்பினேன். என்னுடைய ஸ்வாமி (இப்போது அவ்வசனங்களை நினைத்தால் மனத்திற்கு வியஸனமுண்டாகிறது.) இரு கரங்களையும் குவித்து "என்னைக் காப்பாற்று! காப்பாற்று!! போகாதே!!! உன்னுடைய ரூபலாவண்ய சோபிதத்தைக் கண்டு பிரமைகொண்டவனாய் இருக்கின்றேன். என்னை யறியாமலே உன்மீது எனக்கு எப்படியோ பிரியம் ஜனித்துவிட்டது. காதலின் மகிமையை நீ அறியாய்போலும். இப்பேர்ப்பட்ட ரூபவதியான ஸுந்தராங்கனையை நான் எங்கும் கண்டதில்லை" என்றுசொல்லி என்னைப் பின்திரும்பி வரும்படியாக வேண்டிக்கொண்டார். நானும் பின் திரும்பினேன். ஆனால் உட்காரவில்லை. அப்படியே நின்றுகொண்டு "ரமணீமனோகரா! என்னுடைய அழகு அவ்வளவு உயர்ந்ததா? என் ரூபத்தையென்ன கொண்டாடுகிறீர்களே? நான் உங்களைப்போன்ற மாணிக்கத்தைவிட்டுப் போகவேண்டியிருக்கின்றதே என்று வியஸனிக்கின்றேன். இது ஒன்றே எனக்குப் பெருங்கஷ்டத்தை விளைக்கின்றது—அவ்வளவு தெரிந்துகொள்ளுங்கள்—ஆனால் என்ன செய்யலாம். தருமம் என்பது ஒன்றே எனக்கு முக்கியமானது. அதுவே எனக்கு எல்லாம்—ஒரு நாள் இன்பத்திற்காக நான் தருமத்தை விடேன். இதோ புறப்பட்டுப் போகிறேன்" என்றேன்.

அவர்:—ஏன் ஒருதினம் மாத்திரம் என்கிறாய். என்றும் உன்னையே என் மனோரஞ்சிதமாகப் பாவித்திருப்பேன்.

நான்:—புன்னகைகொண்டு "புருஷர்களின் பிரமாணம்—சத்யம்-முதலியவைகளை என்றும் நம்பக்கூடாது" என்று சொல்லிப் புறப்பட்டு வாசல்வரைக்கும் வந்தேன்.

அவர் இதைக்கண்டதும் ஸஹிக்க முடியாதவராய் ஓடிவந்து என் இரு கால்களையும் தன்னிரு ஹஸ்தங்களால் பிடித்துக்கொண்டு என்னைப் போகாதபடி தடுத்தார்.

அவருடைய நிலைமையைப் பார்த்து எனக்குத் துக்கமதிரிகத்தது. "ஆனால் தங்கள் வீட்டிற்கு என்னை யழைத்துப்போங்கள்,

இங்கேயே நாம் இருவரும் இருந்தால் ஒருவரையொருவர் விட்டுப் பிரியவேண்டியிருக்கும்" என்றேன்.

அவர் அந்த நிமிஷத்திலேயே நான் சொன்னதற்கு உடன்பட்டார். 'சிம்லா' என்னும் பெயரையுடைய வீதியில் அவர் இறங்கியிருந்தார். அத்தெருவு நாங்கள் இருந்த கிருகத்திற்கு மிகவும் சமீபத்தில் உள்ளது. அன்றிரவே அவர் வீட்டிற்கு என்னை அழைத்துச் சென்றார்.

அங்குப்போய்ப் பார்த்ததும், அது ஒரு பெரியவீடாயிருந்தது. நான் முன்பாக வீட்டில் நுழைந்து ஒரு அறைக்குள் புகுந்து வாசற் கதவை மூடிப் பின் தாழிட்டுக்கொண்டேன். என்னுடைய எஜமானர் வெளியே நின்றுவிடும்படியாயிற்று.

அவர் வெளியில் நின்றபடியே மிகவும் வேண்டிக்கொண்டார். நான் சிரித்துக்கொண்டே "எப்படியும் நான் தங்களுடைய தாஸியாய்விட்டேன். ஆனால் நம்முடைய நேசம் பிராதக்காலம் வரையிலும் பிழைத்திருக்கிறதோ இல்லையோ பார்க்கலாம். இப்படியே நாளைவரையில் இதே நேசமும் அன்பும் இருக்குமேயானால் அப்போது உங்களுடன் இருக்கச் சம்மதிப்பேன்" என்றேன்.

நான் கதவைத் திறக்காதபடியால் அவர் வேறு இடத்திற்குச் சென்று நித்தரித்தார். பொழுது விடிந்து வெகு நாழிகையானது. கதவைத் திறந்து பார்த்தேன். பார்க்கும்போது வாசலில் என் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தார். நான் என்னுடைய கையால் அவருடைய ஹஸ்தங்களைப் பிடித்துக்கொண்டு "ஸ்வாமீ! என்னை இராமபாபு வீட்டிற்கு மறுபடியும் அழைத்துக்கொண்டு போய் விடவேண்டும். அப்படிச் செய்யாமற் போவீர்களானால், ஒரு வாரம் வரையில் என்னுடன் பேசக்கூடாது. இவ்வொரு வாரமும் தங்களைப் பரீக்ஷிப்பேன்" என்றேன். அவர் அப்பரீக்ஷைக்கு ஒத்துக்கொண்டார்.

அத்யாயம் 7.

பிரமன் மாதர்களைக்கொண்டு புருடர்களையடக்கிஆளுவதற்கு என்னென்ன உபாயங்களைக்கற்பித்திருக்கிறானோ.அவ்வுபாயங்களையெல்லாம் சேர்த்து மனத்தில் வைத்துக்கொண்டு அவற்றால் என் நாதனை அல்லாடச்செய்து ஏழிக்குக் கொண்டுவந்துவிட்டேன்.

நானோ கேவலம் ஒரு ஸ்திரீ. நான் அவருடன் செய்ததையெல்லாம் என்னென்று சொல்லலாம்.

நேசமென்னும் நெருப்பை நான் இதுவரையில் மூட்டமுடியாதவளாய் இருந்தும் என்னுடைய நாதன்மனத்தில் அன்றிரவு அதையெல்லாம் சேர்த்து மூட்டினேன். எவ்விதம் மூட்டினேன்—எப்படி எரிந்தது—எங்ஙனம் என்னுடைய நாதன் மனத்தைக் கொளுத்தியது—இவற்றையெல்லாம் சொல்வதற்கு வெட்கமாயிருக்கிறது. இதைப் படிப்பவர்கள் யாராவது என்னிலைமையிலிருந்து கஷ்டப்பட்டுப் பின்பு அதிருஷ்டவசத்தால் அவர்களுடைய நாயகரைக் காமத்தீக்கு இரையாக்கி இருப்பார்களேயானால்—அப்பேர்ப்பட்டவர்களே நான் செய்தது இன்னதென்பதை யறிவார்கள். அதிகம் சொல்வதிற் பயனென்ன? மாதர்களே நன்மை யென்பதற்கு ஒரு பெரும் தடையாயிருக்கிறார்கள். இப்பூவுலகில் பெண்களால் உண்டாகும் நஷ்டத்தைப்போல் புமான்களால் அவ்வளவு உண்டாவதில்லை.

"ஆலகால விடத்தையும் நம்பலாம்,
ஆற்றையும்பெருங் காற்றையு நம்பலாங்
கோல மாமத யானையை நம்பலாம்,
கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்
கால னார்விடு தூதரை நம்பலாம்,
கள்ளர் வேடர் மறவரை நம்பலாம்
சேலை கட்டிய மாதரை நம்பினாற்
றெருவி னின்று தியங்கித் தவிப்பரே".

என்பதைக் கேட்டதில்லையோ?

ஆனால் இதில் சந்தோஷப்படவேண்டிய தென்னவென்றால் இப்படியாகத் தத்தம் நாயகர்களை யாட்கொள்ளும் (வித்யா) சாதுர்ய விசேஷங்கள்-பெண்பாலார் எல்லாருக்கும் தெரியாது. அப்படித் தெரிந்திருந்தால் பூலோகத்தின் கொடுமைகளெல்லாம் இத்தனை தினங்கள் வரையில் நிலைத்திரா. அப்பொழுதே எரிந்து சாம்பலாயிருக்கும்.

நான் இவ்வாரமெல்லாம் என்னுடைய கணவருடன் விட்டுப் பிரியாமல் இருந்தேன். அவருடன் வெகு ஆதாரவாய்ப் பேசிவரு

வேன். இன்பமில்லாத வாசகங்களை யுபயோகிப்பதேயில்லை. பரிகாசம்—மினுக்குதல்—சமத்காரமாய் வார்த்தையாடுவது — மெய்யழகை அவருக்குப் புலப்படும்படி அடிக்கடி செய்வது—ஆகிய இவைகள் ஆண்பாலரை அடிமையாக்கிக்கொள்வதற்கு ரமணீமணிகள் உபயோகிக்கின்ற ஆயுதங்களிற் சிலவாம்.

நான் முதல்நாள் மிகுந்த அன்புடன் பேசினேன். இரண்டாம் நாள் அவரை நேசிப்பதாகக்காண்பிக்கவேண்டிய அடையாளங்களையெல்லாம் காண்பித்தேன். மூன்றும் நாள் வீட்டுவேலையைப் பார்க்கலானேன். அவர் உண்ணும்போதும், உறங்கும்போதும் நீராடும்போதும், அவர் சுகமாய்ச்சந்தோஷிப்பதற்கு என்னென்ன வேண்டுமோ அவைகளையெல்லாம் ஏற்பாடு பண்ணினேன். நானே சமையல் செய்தேன். வீட்டைப் பெருக்குதல், மெழுகுதல், கோலமிடல்—இவை முதலான வேலைகளை மற்றவரைக்கொண்டு செய்யாமல் நானே செய்து வந்தேன். சொல்வதற்கு வெட்கக்கேடு—என்ன செய்யலாம்! ஒரு தினம் வேண்டுமென்று அழுது கண்ணீரையும் பெருக்கினேன். எதற்காக அழுதேனே அது எனக்கே தெரியாது. அவரும் கேட்காமலிருக்கவில்லை. கேட்டதற்கு நான் "இவ்வாரம் ஆனதும் தங்கள் ஆசையும் அன்பும்—குறைந்தால் செய்வது இன்னதென்று தெரியவில்லையே என்று எண்ணி அழுதேன்" என்றேன். ஒரு தினம் அவருக்கு உடம்பு ஆலஸ்யமாயிருந்தது; இரவெல்லாம் கண்விழித்து அவருக்குச்செய்யவேண்டிய உபசாரங்களையெல்லாம் செய்தேன். நான் முன் செய்த பாப கிருத்தியத்திற்குக் காரணமான இவற்றையெம்லாம் பதிவிரதா ரமணிகள் கேட்டு என்னை நிந்தனைசெய்யாதிருப்பார்களாக. நான் இடம்பத்திற்காக இவைகளையெல்லாம் பண்ணவில்லை. இங்ஙனமெல்லாம் நான் செய்யாவிடில் யான் நாதனற்றவளாவேன்.

அவரை நான் கணவரென்று பாவித்ததினுலேயே செய்யவேண்டிய சுசரூஷைகளையெல்லாம் ஹிருதய பூர்வமாய்ச் செய்தேன். அவர் என்னிடம் எவ்வளவு பிரேமையை வைத்திருந்தாரோ— அதற்கு நூறு மடங்கு அதிகமாக அவரிடத்தில் நான் வாத்ஸல்யம் வைத்தேன். அதிகம் சொல்வதினுலென்ன—அவர் ஒருவாரமான

தம் என்னை வீட்டைவிட்டுத் துரத்தினலும் நான் அவரைவிட்டு இருக்கவே மாட்டேன்.

அவருக்கு என்பால் அளவற்ற காதல் உண்டாகும்படி செய்து கொண்டிருந்தேனென்பதைச் சொல்ல வேண்டியதில்லை. அவர் என்னிடத்தில் மிகுந்த காதல் கொண்டிருந்தார். நான் கிருக கிருத்யங்களைப் பார்த்துக்கொண்டிருக்கையில் அவர்குழந்தையைப் போல் என் பக்கத்திலேயே உலாவிக்கொண்டு இருப்பார். ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும்போதெல்லாம் அவருக்கு என்னைப் பற்றிய எண்ணம் மாறி மாறி, அவர் "உன்னுடைய இஷ்டப்பிரகாரம் இவ்வாரம் முடியும்வரையில் சும்மா இருப்பேன். பிறகுஎன்னை விட்டுவிடாதே" என்பார். முக்கியமாய் அவர் நிலைமையைப் பார்த்ததில் நான் அவரைவிட்டுப்போனல் பைத்தியம்பிடித்துத்திரிவார் என்றே நினைக்கவேண்டியதாயிருந்தது.

பரிசோதனை முடியும் கடைசித் தினத்தன்று நான் அவரிடம் அழுது "பிராணநாதா! நான் உங்களிடத்தில் நல்ல வேலையைச் செய்வதாகத் தோற்றவில்லை. தங்களுக்கு இதுவரையும் வீண் கஷ்டத்தையே கொடுத்தேன். இப்போது பார்த்தால் பரீக்ஷையென்பது பிரேமை யென்பதேயன்றி வேறல்லவென்பதை யறியலாம். தாங்கள் சொல்லும் வார்த்தைகளில் நான் எப்படி நம்பிக்கை கொள்வேன். சில புருஷர்கள் தங்கள் அபீஷ்டம் நிறைவேறும் பரியந்தம் இன்பமான வார்த்தைகளைச் சொல்லித் தங்கள் காரியம் முடிந்ததும் ஸ்திரீகளை நடுத்தெருவில் தள்ளிவிட்டுப்போவது உலக வழக்கம். புருஷராகிய உங்களில் ஒருவன் ஒரு காரியத்தைச் செய்ய நினைப்பானகில் என்ன நடந்தபோதிலும் அதை முழுவதும் சாதிக்கவே யெண்ணுவானென்று எனக்குத் தெரியும். அங்ஙனம் இருந்தபோதிலும், மனுஷியர்களுடைய மனமானது என்றும் ஒரே நிலைமையுடையதன்று. நீங்கள் என்மீது ப்ரீதி வைத்திருந்தாலும் எப்பொழுதும் தாங்கள் இத்தகைய அபிமானத்தை வைத்திருப்பீர்களோ-மாட்டீர்களோ-என்பதை உங்களாலேயே சொல்லமுடியாது. என்னை நீங்கள் விட்டகன்ருல் ஏழையான என் கதி என்னவாகும் என்றேன்.

அவர் சிரித்துக்கொண்டு "பெண்ணே! உன்னுடைய ரூபத்துக்குமட்டும் நான் விக்கிரயமாகவில்லை. உன்னுடைய அன்பான

பேச்சுக்கே விக்கிரயமா யிருக்கிறேன். அவ்வித அனுமானம் உனக்கு யாதாயினும் உண்டானல், இப்போது என்னுடைய ஆயுள்பரியந்தமும் நீ சுக ஸ்திதியில் இருக்கும்படியான ஏற்பாடுகளைப் பண்ணுவேன். ஏற்கனவே நான் இந்த யோசனையைச் செய்திருக்கிறேன்" என்ருர். நாஞகவே இதை அவர் வாயினின்றும் வருவிக்கவேண்டுமென்று இருந்தேன். அதைப்பற்றி அவராகவே சொன்னது நல்லதாயிற்று.

நான் "ஐயோ தாங்கள் என்னை விட்டுவிட்டால் ரூபாய்களை முடிந்துவைத்துக்கொண்டு என்ன செய்வேன். பிச்சையெடுத்தாலும் உயிருடன் பிழைக்கலாம். ஆனல் தாங்கள் என்னைத் தள்ளிவிட்டால் உயிருடன் இருந்தும் என்ன பிரயோஜனம்? மற்ற எவ்வகையிலும் என்னைத் தள்ளிவிடுவதில்லையென்று தாங்களிப்போது சத்தியம் செய்து கொடுக்கவேண்டும். இது பரீக்ஷையின் கடைசித் தினமல்லவா?" என்றேன்.

அவர்:—உனக்கு என்ன செய்யவேண்டும்? நீ எதைச் சொன்னலும் அதைச் செய்வேன்.

நான்:—"நானே பெண்பிள்ளை—என்ன சொல்வேன். தாங்களே தெரிந்து செய்யவேண்டும்." என்று சொல்லி வேறு பேச்சையெடுத்துப் பேசுகையில், 'ஒருவன் தன்னுடைய உபபத்தினிக்காகத் தனது எல்லா ஆஸ்தியையும் கொடுத்தான்' என்னும் கிளைக் கதையைச் சொல்லிமுடித்தேன்.

அவர் வண்டியைச் சித்தம் செய்துகொண்டு வரச்சொல்லி, அதில் ஏறி எங்கேயோ புறப்பட்டார். இந்த எட்டுத் தினத்திற்கு மேல் இப்போதுதான் அவர் என்னை விட்டகன்றது. சற்று நேரத்திற்கெல்லாம் திரும்பி வந்தார். எங்கேபோய் வந்தாரோ அதை எனக்குச் சொல்லவில்லை. நானும் கேட்கவில்லை. மத்தியானமானதும் மறுபடியும் ஒரு தடவை போய்த் திரும்பிவந்து, ஏதோ ஒரு காகிதத்தை என்னிடம் கொடுத்து "இதை யெடுத்துவைத்துக்கொள்; என்னுடைய ஐசுவர்யங்களையெல்லாம் உனக்கு எழுதிக்கொடுத்திருக்கிறேன். வக்கீலிடத்திலிருந்து இந்த தான பத்திரத்தைக் கொண்டுவந்தேன். நான் எப்போதாவது உன்னை வேண்டாமென்று நிராகரித்துவிட்டால் நான் பாத்திரத்தை யெடுத்துக்கொண்டு பிச்சைக்குத்தான் போகவேண்டும்" என்ருர்.

இதைக் கேட்டதும் என் கண்களினின்றும் மனப்பூர்வமாய்க் கண்ணீர் பெருகிற்று. அவர் என்னிடத்து இவ்வளவு நேசம் வைத்திருந்தார். நான் அவருடைய பாதகமலங்களை வணங்கி "இன்று முதல் தங்களைவிடாது என்றும் வாழ்வேன். பரீக்ஷையும்முடிந்தது" என்றேன்.

அத்யாயம் 8.

என்னுடைய கண்மணியே! இனிமேல் என்னைவிட்டு எங்கே போவீர்? என்னைக் கிரகணம் பண்ணுவதில்லையோ? நான் என்ன அபிப்பிராயம் கொண்டு இந்த ஜாலத்தையெல்லாம் செய்தேனோ அது நிறைவேறிற்று. இப்போது அவருடைய மனைவியென்று தெரிவிக்க அவர் அதைக் கேட்டதும் சினந்து என்னைத் தள்ளிவிட்டால் அவர் ஒன்றுமில்லாத ஏழையாக மாறிவிடுவார் என்றும் மனத்தில் எண்ணினேன்.

என்னுடைய தகப்பனார் என்னை "இந்திரை" யென்றும், தாயார் "குமுதினி" யென்றும் பெயரிட்டுக் கூப்பிடுவது வழக்கம். புருஷன்வீட்டில் என்னை "இந்திரா" வென்றே யழைப்பார்கள். இராமபாபு வீட்டில், நான் அவர்கட்குச் சொல்லியிருந்த குமுதினி யென்னும் பெயராலேயே யழைப்பார்கள்.

கல்கத்தாவில் சுகமாகக் காலம் கழிந்தது. பிறகு ஒரு தடவை மகேசபுரத்திற்குப் போய்வரவேண்டுமென்று ஆசையுண்டாயிற்று. ஏதேதோ பேச்சைப் பேசிவருகையில் அவ்விடத்தில் உள்ளவர்களெல்லாம் சுகமாகவே இருக்கிறார்களென்று தெரிந்தது. ஆனால் அவர்களைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசைமட்டும் நீங்கவில்லை.

ஒருநாள் பிராணபதியைப்பார்த்து "நானொருதரம்நீலஸரோவரத்திற்குப் போய்ப் பெற்றோரைப் பார்த்துவரவேண்டுமென்று மிகவும் விருப்பமாயிருக்கிறது. கிருபைகூர்ந்து அநுக்கிரகம் செய்யவேண்டும்" என்றேன்.

என்னுடைய நாதனுக்கு என்னவோ என்னையனுப்புவதில் விருப்பம் என்பது கிஞ்சித்தும் கிடையாது. ஆயினும் என்னுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றாதவிடவும் அவருக்கு இஷ்டமில்லை. என்ன செய்வார். கடைசியாக அவர் "நீலஸரோவரத்திற்குப் போய்வரப் பதினைந்து தினங்களாகும். இத்தனைநாள்வரையும்

உன்னைப் பாராது இருந்தால் நான் பிழைப்பதே அரிது. எனவே நானும் உன்னுடன் வருவேன்" என்றார்.

நான்:—"என்னுடைய கோரிக்கையும் அதுதான். அவ்விடத்திற்கு வந்து எங்கு இறங்குவீர்கள்?"

அவர்:—சற்று யோசித்து, "நீலஸரோவரத்தில் நீ எத்தனை நாள் தாமதிப்பாய்?"

நான்:—"தங்களைப்பாராமல் மூன்று தினங்களுக்குமேல் இரேன்".

அவர்:—"அப்படியானால் அம்மூன்று தினமும் இங்கேயே இருப்பேன். அதற்குமேல் உன்னை மறுபடியும்அழைத்துவருவேன்."

இந்த சம்பாஷணை நடந்து சில தினங்களானதும் நாங்கள் இருவரும்பல்லக்கில் ஏறிக்கல்கத்தாவினின்றும் பிரயாணமானோம். அவர்கள் என் கஷ்டத்திற்கெல்லாம் காரணபூதமான நீலஸரோவரம் என்னும் தடாகம் கடந்து, என்னை ஊருக்கருகில்விட்டுப்பின் திரும்பிக் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுப் போனார்.

அவர் போனதும் நான் போகிகளைப் பார்த்து "முதலில் மகேசபுரத்திற்குப்போய்ப் பிறகு நீலஸரோவரத்திற்கு வருவேன். நீங்கள் முன்பாக மகேசபுரத்திற்குப் போங்கள்" என்று கட்டளையிட்டேன்.

மகேசபுரத்தை யடைந்ததும் போகிகளையும் ஆட்களையும் ஊருக்கு வெளியேவிட்டுவிட்டு நடந்து கிராமத்திற்குட்சென்றேன். தகப்பனாரின் வீட்டிற்கு எதிர் வந்ததும் ஜனங்கள் இல்லாத இடத்தில் நின்றுகொண்டு மிகவும் அழுது பிறகு வீட்டிற்குள்ளே போனேன். பெற்றோரைப் பார்த்ததும் அவர்கள் காலில் விழுந்து நமஸ்கரித்தேன். அவர்கள் என்னைக் கண்டதும் பிரமித்து அத்யானந்த பரிதரானார்கள். அங்கு நடந்ததெல்லாம் இப்போது சொல்வதற்குச் சமயமில்லை.

அதுவரையில் "எங்கிருந்தேன், எப்படிவந்தேன்" முதலிய வர்த்தமானங்களை நானும் அவர்களுக்குச் சொல்லவில்லை. அவர்கள் கேட்டால் பிறகு சொல்லிக்கொள்ளலாம் என்றிருந்தேன். மறுதினமே என்னுடைய தந்தை லிகிதமொன்று எழுதி ஒருவனிடம் கொடுத்து "மருமகப்பிள்ளை ஊரிலிருந்தாலுஞ் சரி, இல்லாவிட்டாலுஞ்சரி, அவர் இருக்கும் இடத்திற்குக் கொண்டுபோய்க் கொடு என்று சொல்லியனுப்பினார்.

என்னுடைய மாதாவுடன் "நான் வந்திருக்கும் செய்தியை அவருக்குத் தெரியப்படுத்தக் கூடாது. இத்தனை நாளாக நான் ஊரில் இருக்கவில்லை. அவர் என்னைக் கிரகணம் பண்ணுவாரோ இல்லையோ? அவர் இஷ்டம் எப்படியோ? வராதிருந்தால் செய்வ தென்ன? இன்னும் யாதாவது காரணம் கற்பித்து அவரை இங்கு அழைக்கவேண்டும். ஊருக்குமட்டும் அவர் வந்துவிடும்பக்ஷத்தில் என்ன சந்தேகம் என்மீது இருந்தாலும் அதை நான் போக்கிவிடு வேன்" என்றேன்.

தாயார் இதைப் பிதாவுக்குத் தெரிவிக்க, அவர் முன்பு எழுதிய லிகிதத்தைக் கிழித்துவிட்டு "நான் உயில் (Will) எழுதவேண்டி யிருக்கிறது; நீர் எனக்கு மருமகன், உம்முடன் யோசித்து ஏற்பாடு செய்யவேண்டும். அதுவுமன்றி நீர் மிகுந்த புத்தி தீக்ஷணமுள்ள வர். ஆனதால் நிருபங்கண்டதும் புறப்பட்டுவரவேண்டும்" என்று வேறொரு கடிதம் வரைந்தனுப்பினார்.

என்னுடைய பர்த்தா நிருபத்தைப் பார்த்ததும் பிரயாணமாகி வந்தார். அவர் வந்ததும் என் பிதா நடந்த உண்மையான விஷய ங்களையெல்லாம் சொன்னார்.

எனது கணவர் ஒன்றும் பேசாமல் நெடுநேரமானதும் தந் தையைப் பார்த்து "தாங்கள் பெரியவர், இவ்விடத்துக்கு வந்ததில் தங்களுடைய தரிசனம் கிடைத்தது. தரிசனமாத்திரத்தால் கிரு தார்த்தனானேன். அவ்வளவே போதும். தங்களுடைய புத்திரி விஷயத்தில், அவள் இதுகாறும் இவ்விடத்தில் இருக்கவில்லை; எந்த ஊரில் யார்வீட்டில் என்ன நடத்தையுடன் இருந்தாளோ, அது ஒருவருக்கும் தெரியாது. ஆனதால் அவளை நான் கிரகணம் செய்யேன்" என்றார்.

என்னுடைய பிதாவானவர் இதைக்கேட்டதும் உயிரிழந்தவர் போலாகி மருமகன் சொல்லியதைத் தாயாருக்கு அறிவித்தார். அவள் அதை எனக்குத் தெரிவித்தாள். நான் என்னுடைய வயது ள்ள சிறுபெண்களை வரவழைத்து "நீங்கள் போய் யோசனை ஒன் றும் செய்யவேண்டாம் என்று தந்தைக்குச் சொல்லுங்கள். என் பிராணேசுவரனை எப்படியாவது அந்தப்புரத்திற்கு அழைத்துக்

கொண்டு வந்தால் நான் எவ்விதத்தாலாயினும் என்னைச்சேர்த்துக் கொள்ளும்படி செய்வேன்" என்றேன்.

என்னுடைய நாதன் என்னதான் அழைத்தாலும் அந்தப்புரத்திற்கு வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். என்னை வந்து பார்த்துப் பேசுவதற்கும் ஒப்பவில்லை.

என் தாயார் அழுது தொந்தரவு செய்ததாலும், அவருடைய சிநேகிதர்கள் பரிஹாஸம் பண்ணினதாலும் மிகுந்த வெறுப்புடன் சாப்பிடுவதற்குமட்டும் உள்ளே வருவதாக ஒப்பினர்.

புசிப்பதற்காக மணையின்மீது உட்கார்ந்தார். அவர் பக்கத்தில் யாரும் இருக்கவில்லை. எல்லோரும் அவரைவிட் டகன்றார்கள். அவர் ஏதோ எண்ணமுடையவராய்த் தலைவணக்கத்துடன்புசித்துக் கொண்டிருந்தார். நான் சந்தடி செய்யாமல் போய் அவர்பின் நின்றுகொண்டு என்னுடைய கைகளால் அவர் கண்களை மூடினேன். அவர் மிகவும் சிரித்துக்கொண்டு "நீ காமினீ! என்பதை அறிவேன். எனக்குத் தெரியாமல் நீ எப்படி வந்தாய்?" என்றார்.

"காமினீ என்பது எனது தங்கையின் பெயர். நான் காமினீயல்ல. யாரென்று சொன்னால்தான் விடுவேன்" என்றேன். என்னுடைய பேச்சொலியைக் கேட்டுத் திடுக்கிட்டு "இதென்னவிது" என்றார்.

நான் கையை யெடுத்துக்கொண்டு அவர் முன் வந்து நின்று "என்னுடைய மனோரஞ்சிதமே! என் பெயர் இந்திரா! நான் ஹரமோகனதத்தருடைய குமாரி! நானிருப்பது இந்தக் கிருகம்! தங்களுக்கு என் மனப்பூர்வமான வந்தனம் ஸமர்ப்பிக்கின்றேன். தங்களுடைய குமுதினி க்ஷேமமா?" என்றேன்.

இதைக் கேட்டதும் அப்படியே பிரமித்து நின்றுபோனார். பேச்சொன்றும் வரவேயில்லை. என்னைப் பார்த்த வளவிலேயே ஆனந்திதரானரென்று நன்றாய்த் தெரிந்துகொண்டேன்.

என்னைப்பார்த்துக் "குமுதினீ! திரும்பியும் நீ இங்கே என்ன கொண்டுவந்தாய்? இங்கே எப்படி வந்துசேர்ந்தாய்?" என்றார்.

நான்:—"என்னுடைய மற்றொரு பெயர் குமுதினி. தாங்கள்

இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க எவ்வளவோ பிரயத்னங்கள் செய்தும் பிரயோஜனப்படவில்லை. பிறகு விதிபோல் நடக்கிறது, நம்மாலாவது ஒன்றுமில்லை யென்று மனந்தேறி இராமபாபு வீட்டில் பரிசாரகைத் தொழிலுக்கு ஒப்பி அதனால் என் காலத்தைக் கழித்துக்கொண்டு வந்தேன். தாங்கள் இராமபாபு வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே, தங்களைப்பார்த்து, நான் தாங்கள் யாரென்பதைத் தெரிந்து கொண்டேன். அப்படியில்லாதிருந்தால் அன்றிரவு தங்களுடன் பேசியிருக்கமாட்டேன். பிராணநாத! நான் வியபிசாரியல்ல." என்று நடந்த சங்கதிகளையெல்லாம் தெரிவித்தேன்.

அவர்:—மிகவும் வியப்படைந்தவராய்ப் புளகாங்கிதங்கொண்டு—"அப்படியானால் இத்தனைநாளாக ஏன் என்னை இவ்வளவு கஷ்டத்திற்கு உட்படுத்தினாய்?"

நான்:—"பார்த்தவன்றே நீங்கள் மனைவியைச் சேர்த்துக்கொள்வதில்லை யென்றீர்கள். சேர்த்துக்கொள்ளாவிடில் பிராணத்தியாகம் செய்வதாய்த் தீர்மானித்தேன். அப்படியில்லாமல் இருந்தால் அன்றே நான் இன்னாரென்பதைச் சொல்லியிருப்பேன். தானபத்திரத்தை யென்னுடன் வைத்துக்கொண்டிருக்கின்றேன். (எடுத்து) இதுவன்றோ நீங்கள் எனக்குத் தந்தது. என்னுடைய பிரதிக்ஞையைக் காப்பாற்றும் பொருட்டே இக் காகித பத்திரத்தைத் தங்களைக்கொண்டு எழுத வைத்தேன். ஆனால் இது நான் செய்யும் வேலையன்று. இப்போதும் தங்களுக்கு இஷ்டமிருந்தால் என்னைச் சேர்த்துக் கொள்ளலாம். இல்லாவிடில், தங்கள் தரிசனம் அப்போதைக்கப்போது அடியாளுக்குக் கிடைக்குமேயானால், தங்கள் வீட்டைப் பெருக்குதல், மெழுகுதல், முதலிய பரிசாரகங்கள் புரிந்தாவது காலங்கழித்து வருவேன். அவற்றாலேயே என் ஜன்மமும் ஸார்த்தகமாகும். எடுத்த இந்தப் பிறவியும் பயன் பெற்றதாகும். உங்களுடைய தானபத்திரம் எனக்கு இனி வேண்டுவதில்லை; இதோ கிழித்துவிடுகிறேன்" என்று கிழித்தெறிந்துவிட்டேன்.

அவர் உடனே எழுந்து என்னைத் தழுவிக்கொண்டு "எனதன்

பிற்குரிய நேசவிசுவாஸ நாயகியேயாவாய். உன்னைப்பிரிந்து இம்மூன்று தினங்களும் நான் பட்டபாடு போதும். என் பிராணப்பிரியை இவ்வளவு சீக்கிரத்தில் காணக்கிடைத்ததும் எனது பாக்கியவசமேயாம். உன்னைப்பிரிந்து யான் உயிர் தரிப்பது மிகவும் அரிது. நீ என்னுடைய கிருகத்தின் தலைவியாக இருப்பாய் வா" வென்று சொல்லிச், சில தினங்கள்வரை அங்குத் தாமதித்துப்பிறகு என் தாய்தந்தையரிடம் விடைபெற்றுக்கொண்டு, ஆனந்தபரவசராய் என்னை மாமியார் வீட்டிற்கு அழைத்துச் சென்றார்.

நான் எனது பிராணேசுவரரின் கிருகத்தையடைந்து மாமியார் மாமனார் முதலியவர்களை நமஸ்கரித்து அவர்களுடைய மங்களாசாசனத்தினாலும், உங்களுடைய ஆசீர்வாத மகிமையினாலும் இகபர ஸுக ஸாதகமான அநேக தர்மகாரியங்களைச் செய்துகொண்டு, ஸதாகாலமும் பதிபக்தி பாராயணையாய் ஸுபுத்திரர்களைப் பெற்று ஈசுவர கிருபையால் ஸுகத்தோடு வாழ்ந்துவருகின்றேன். சுபம்.

எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.

THE GRAMOPHONE.

கிராமோபோன்.

பேசும் பாடும் யந்திரங்கள் பல மாதிரி உண்டு, ஆனல்

"கிராமோபோன்" என்னும் பேர்கொண்ட ஒரு யந்திரமட்டுமே—மற்றைவைகளைப் பார்க்கிலும் மிகவும் சிறந்தது மட்டுமல்லாமல்; தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் சமஸ்கிருதம் முதலிய அநேக இனிமையான இராகங்களுள்ள பலகைகள், தென் இந்தியாவிலுள்ள பேர்போன பாகவதர்களாலும், தாசிகளாலும்பாடப்பட்டு, அடியிற்கண்ட மேல்விலாசத்திற்கு வந்திருக்கிறது.

கிராமோபோன் யந்திரம், யாவரும் வாங்கிபாடக் கேட்டு சந்தோஷமடையக்கூடியதாய், பல விலைகளிலும் இவ்விடத்தில் அகப்படும்.

No. 5 கிராமோபோன் புதியமாதிரி ரூபா 89—4—0

☞ காட்லாக்குகளுக்கும், விவரங்களுக்கும் அடியிற்கண்ட மேல்விலாசத்துக்கு எழுதவும்.

ஜே. எச். பார்க்கர்,

199. மௌண்டுரோட்,

மதராஸ்.

கிராமொபோன்.

பாட்டுப்பலகைகள்,

அநேகம் உண்டு. எல்லாவற்றையும்
இங்கே சொல்லமுடியாது.

அவற்றில் சிலது:—

சேலம் கோதாவரி.

அருமருந்தோரு

இது நான்வர யின்னும்

வஞ்சியுன் மேல்

அறியானே—தேவாரம்

எப்போதுலேயும்

சேலம் பாப்பா.

கண்மணியே என்சாமி

இதைவிட இன்னும்

காஞ்சிபுரம் தனக்கோடி

மோகப்பகட்டுக்காரி

இன்னமுதுகனிபாகு

கற்கண்டு

சேலம் அம்மாக்கண்ணு

என்னடிமெத்த

அப்பனே பழனியப்பனே

விகடகவி.

ரெயில்வண்டி

பட்டணத்துஜட்காவண்டி

கீகாரன் சண்டை

இன்னும் அநேகம். கேட்லாக்குகளுக்கு அடியிற் கண்ட மேல்விலாசத்துக்கு எழுதவும்.

ஜெ. எச். பார்க்கர்,
199 மௌண்ட் ரோட்,
மதராஸ்.

கடவுள் நிச்சயம்.

தர்க்கரீதியாக ஒரு விஷயத்தைப்பற்றித் தீர்மானிக்கவேண்டுமானால், அதற்கு மூன்று விதமான பிரமாணங்கள் உள்ளன. அவை காட்சி, அநுமானம், ஆகமம் என்பன. காட்சியாவது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளுள் ஒன்றற்கு விஷயமான தொன்றை அவ்வவற்றானறிதல். ஸ்பரிசத்தாலாவது, சுவையாலாவது, ஒளியாலாவது, கந்தத்தாலாவது, சப்தத்தாலாவது ஒன்றை நேரே அநுபவித்தறிந்தால் அது காட்சியென்று சொல்லப்படும். உதாரணம்:—பூவின் வாசனையை முகந்து அறிதல். அநுமானமாவது அறிந்ததொரு விஷயத்திலிருந்து அதற்குச் சம்பந்தப்பட்டதான நாம் அறியாததாகிய விஷயமொன்றைத் தீர்மானித்தல். ஓர் பூ இருந்தவிடத்தெல்லாம் ஓர்வித வாசனை இருப்பதனாலும், அவ்வித வாசனை யிருக்குமிடமெங்கும் அப் பூ விருப்பதனாலும் இவ்விரண்டும் காரண காரியங்களாகச் சம்பந்தப்பட்டிருக்கின்றன என்றறிந்த யாம் ஓர் பெட்டியினிடத்தே அந்த மணமிருத்தலை யறிந்தவுடனே, அதற்கு நம்மால் அறியப்பட்ட காரணமாகிய பூவை யங்குக் காணாதிருந்தும் அது அங்கு இருப்பதாக ஊகித்தலே அநுமானம் என்று சொல்லப்படுகிறது. ஐம்பொறிகட்கு விஷயமாவனமட்டுமே உண்மையெனக்கொள்ளுதல் சரி

யானவையல்லவாதலாலும், மனிதவியற்கையானது அவ்வைம்பொறிக்கட்குமேற்செல்லும் தன்மையதென்று அறியப்படுமாதலாலும் இவ்வனுமானப் பிரமாணம் அவசியமாயிற்று. இதனுட்சாட்சியும் அதற்குமேல் ஒரு படியும் அடங்கி யிருத்தலால், இது அதன்பின் வைக்கப்பட்டது. இவ்வனுமானப் பிரமாணத்திற்கு நான்கு அங்கங்கள் உள்ளன. பிரதிஞ்ஞை, ஏது, திருஷ்டாந்தம், நிகமனம் என்பனவே. பிரதிஞ்ஞையாவது நாம் எதனைத் தீர்மானித்தல்வேண்டுமோ அதனை முதற்கட் சொல்லிக்கொள்ளல். 'மலையினிடத்தே நெருப்பு இருக்கிறது' என்பதுபோன்ற வாக்கியங்கள் பிரதிஞ்ஞையை நன்கு விளக்குகின்றன. (இது Euclid-ல் ஒவ்வொரு Proposition-க்கும் General Enunciation போல). ஏது என்பது அப் பிரதிஞ்ஞை செய்வதற்குக் காரணமாயிருப்பது. இதனால் அதைச் சொன்னதென்பது. மலையினிடத்தே நெருப்பு இருக்கின்றது எதனால்? புகையிருத்தலால். திருஷ்டாந்தம் என்பது உதாரணம். அடுப்பினிற்போல என்கின்றோம். கீழ் அடுப்பிருப்பதான வீட்டின்மேற் புகையைக் கண்டவுடன் அவ்வீட்டினுட்சென்று பார்த்தால் நெருப்பிருப்பதனாலே இம்மலையிடத்தும் புகையிருப்பதாலே நெருப்புள்ளதென்று நினைக்கிறோம். இதற்கு அடுக்களையானது திருஷ்டாந்தம். இவற்றுற் கடைசியிற் றுணியப்படுவதே நிகமனம் எனப்படுவது. (இது ஆங்கில பாஷையில் Conclusion என்று சொல்லப்படுகின்றது.) இந்த நான்கு அங்கங்களும் அனுமானத்திற் குரியன. மேல் ஆகமமாவது,-காட்சியாலாவது, அனுமானத்தாலாவது, நாம் அறியக்கூடாத விஷயங்களை, அறிவால் நிறைந்த ஆன்றோர் வாக்கியங்களின் ஆதாரத்தால் அறிவது. நாமே எவ்வாற்றானும் அறிந்துகொள்ளக்கூடாத விஷயங்கள் பல உலகத்

தினுள்ளவென்பது யாவரும் நன்கறிந்ததே. ஆகவே அவ ற்றை யறியவேண்டுமானால், அதைப்பற்றிய பெரியோர் சொல்லைப் பின்தொடர்ந்துபோவதே கருமம். இப்போது ஒரு பூவைத்தேடிச் செல்வானொருவன் எங்ஙனம் அதி னிருக்குமிடத்தின் வழி வினவி மற்றவர் சொல்லை நம்பிச் செல்கின்றானோ அதுபோல்வன ஆகம அளவையாம். ஒரு பொருளின் உண்மையை அறிதற்கு இம் மூன்றுதார ங்களுள் ஒன்று இன்றியமையாமல்வேண்டும். எடுத் துக்கொண்ட விஷயமாகிய கடவுள் நிச்சயத்தை எதனால் நாட்டலாம், என்றாலோசிப்போம். கடவுளானவர் நமது ஐம்பொறிகளின் அறிவிற் கதீதமானவர். ஆதலால் அவ ருண்மைக்கு அநுமானமும் ஆகமுமாகிய இரண்டுமே ஆதாரமாவன. ஆகையால் இவ்விரண்டுமே நமது விசா ரணைக்குட்பட்டன. முதலில் அநுமானத்தை எடுத்துக் கொண் டாராய்ந்து பார்ப்போம்.

பயன்குறித்துச் செய்யப்படும் ஒவ்வொரு காரியத் திற்கும் அதனை அங்ஙனம் கருதிச் செய்தானாகிய கருத்த னொருவ னிருத்தல்வேண்டும். மனிதர்கள் காணப்படாத ஓர் தீவினிடத்தே ஒரு வீட்டை நாம் பார்ப்பதாக வைத் துக்கொள்வோம். அப்படிப் பார்த்தவுடனே அதைக் கட்டினவராகிய தச்சன் முதலினோரை யங்கு நாம் காணா திருந்தும் அது அவரைப்போன்றவர்களாற் கட்டப்பட்ட தெனத் தீர்மானிக்கின்றோம். அதுபோலவே பயன் குறி த்துச் செய்யப்பட்டுள்ள இவ்வுலகத்தை (இங்கு உலக மென்றது இந்தப் பூமி முதலியவற்றையும் அவற்றிலுள்ள சீவவர்க்கங்களையும் குறிக்கின்றது.) இயற்றினாராகிய கர் த்தர் ஒருவர் உண்டென ஊகித்தறிதல் நமது அறிவின் பயனும். இங்ஙனமறியும் அநுமானத்தைக் கீழ்வருமாறு சிலர் மறுக்கத் தொடங்குவர். தீவினிடத்தே இருக்கக்

கண்ட வீடானது, நாம் முன் நம்முடைய ஊரின்கண் தச்சர் முதலினோரால் கட்டப்படக்கண்ட வீடுபோலிருத்தலால் அந்த வீட்டினையும் கட்டினோர் உளர் என்றூகிக்கிறோம். அங்ஙனமாகவே இதுபோன்ற உலகம் பலவற்றைச் சிருட்டிக்கக்கண்ட பின்னரே யாம் இவ்வுலகத்தையும் ஒருவர் உண்டாக்கினர் என்றூகிக்கலாம். அஃதன்றி அப்படிப் பார்க்காதிருக்கவே அவ்வித மூகித்தல் பொருந்தாது. மேலும் இவ்வுலகம் ஒருவரால் உண்டாக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதற்கென்ன வாதாரம்? ஏன் அது தானாக இயல்பிலேயே உண்டாகியிருப்பதாக நினைக்கக்கூடாது? இவ்வினாக்களை முறையே ஒவ்வொன்றாக ஆராய்வோம். முதலிலே நாம் இவ்வுலகம்போன்ற அண்டங்களை ஒருவர் உண்டாக்கக் கண்டதில்லையென்பதுண்மையே. ஆயினு மிவ்வுலகத்தை யுற்றுநோக்குமிடத்து அது பயன் குறித்துச் செய்யப்பட்டதொரு காரியமென்றேதோன்றுகின்றது. இவ்வுலகத்தில் பயன் குறித்தனவாகிய காரியங்களெல்லாம், அப்பயன் குறித்துச் செய்தவனாகிய கர்த்தாவை உடைத்தாயிருக்கின்றன. அதுபோலவே பயன் குறித்ததாகத் தோன்றுகிற இவ்வுலகமும் ஒரு கர்த்தாவையுடையது. இவ்வுலகமானது பயன்குறித்துச் செய்யப்பட்ட காரியமென்பதெங்ஙனம்? அது என்ன பயனைக் குறித்தது? சாதாரணமாக நாம் வீதியில் ஒரு மரத்துண்டைக் கண்டால் அம்மரத்துண்டை ஓர் பயன் கருதி அங்ஙனங் கிடத்தினாரொருவர் உண்டென நினைக்கின்றதில்லை. அதே மரத் துண்டானது ஆற்றிற் குறையின் நிழலிலே நடப்பட்டிருத்தலைக் கண்டால், அதன்மேற் பசுக்கள் உராய்ந்து தங்கள் உடம்பின் தினவைத் தீர்த்துக்கொள்ளலாகிய அரிய பயன்கருதி அக்காரியத்தைச் செய்தாரொருவர் உண்டென நினைக்கின்றோம். அம்

மாதிரியே மரங்களுட்சில உயர வளர்ந்தும், சில குறுக வளர்ந்தும், சில பருத்தும், சில சிறுத்தும், சில வீழ் விடுத்தும், சில விடாமலும், சில மிக்க இலைகளோடு கூடியும் சில அங்ஙன மில்லாமலு மாக இன்னும் பல வெவ்வேறு திறத்தனவையாய் இருக்கக் காண்கின்றோம். அவையும் பலபயன்குறித்துச்செய்யப்பட்டனவென்பது தெளிவாய் விளங்குகின்றது. ஆனால் அவை மனிதர் அறிவிற்கு அதீதமாய் அதற்கு மேற்பட்ட ஓரறிவின் காரியமேயாவன. வீதியில் ஒரு கல் கிடக்கப் பார்த்தால் அதை அங்குக்கொணர்ந்திட்டார் ஒருவர் உண்டென்று நினைப்பதில்லை; அது யாதொரு பயனையும் குறித்திராததினால். நம் வீட்டு வாயிற்படியில் கல் போடப்பட்டுள்ளது. அது நாம் வெளியேபோய்வந்தவுடனே நாம் கால்களைத் தேய்த்துக்கொள்ளவும் பாரமான வஸ்துக்கள் பல எப்போதும் அதன்வழியாகச் செல்லுதலால் அது தகர்ந்துவிடாமலிருக்கவும் ஆகிய பயன்கருதி அதை யங்கிட்டார் ஒருவர் உண்டென நினைக்கின்றோம். இம்மாதிரியே பெருங்கல்லாகிய மலையைப்பார்க்கும்போதும், அது காடுமுதலியவற்றிற்கிருப்பிடமாய் மேகங்கள் வந்து தங்குதற்கிடமாய், அவ்வாறு தங்குதலினால் அடுத்திருக்கும் மருதம் முதலிய நிலங்கட்கு வளம் விளைப்பதாய் நிற்பதாகிய இன்னும் வெவ்வேறு பல பிரயோசனங் கருதியிருப்பதாய்த் தெளியத்தெரிகின்றது. ஆதலின் அப்பயனைக் குறித்ததாகிய ஓரறிவு மவ்வறிவினையுடையா ரொருவரும் இருத்தலையனுமானித்தல் அவசியம். இதுபோலவே யாறுமுதலிய இயற்கைப் பொருள்கள் பலவும் இறைவ னுண்மையை நன்கு விளக்குகின்றன. இனி மனிதர் முதலிய சீவ சரீரங்களை நோக்குமிடத்தும், அவை பயன்குறித்துச் செய்யப்பட்டனவாகி ஓரிறைவனுடைய காரியங்களெனப் புலப்

படும். உதாரணமாக மனித அங்கங்களின் செயல்களுட் சில மனிதனால் உணரப்பட்டும் சில உணரப்படாமலும் இருக்கின்றன.

நம் தேகத்தின்மேற்படும்காற்றும், வாயினிடத்திட்ட ஓர் பதார்த்தத்தின் உருசியும் நம்மால் உணரப்படுகின்றன. இரத்த ஓட்டம், நாம் உட்கொண்ட உணவு ஜீர்ணித்து இரத்தத்துட்புகல் ஆகிய இவை போல்வன உணரப்படுவதில்லை. இவைகளும் கண்ணாலொளியும் காதால் ஒலியும் போல உணரப்படுவனவாயின் நினைத்தற்கும் அருமைபாகிய அவ்வளவு துயரத்தை எப்போதும் விளைவிக்குமல்லவா? ஏனெனின் நமதுடம்பினுள் எப்போதும் இயலுவனவாகிய மேற்சொன்ன செயல்கள் நம்மால் அவ்வப்போது உணரப்படுமாயின் நம் புத்தியை வேறொன்றிற் செலுத்துவதற்குப் பெருத்த இடையூறாக இருக்கும் என்பதிற் சந்தேகமில்லை. இப்பயன் நோக்கியே இறைவன் அவ்வங்கங்களுள் (அதாவது வயிறு, இருதயம் முதலிய இடங்களில் பரிசேந்திரியம் நம் உணவிற்கு விஷயமாவதில்லை.) உணர்வு வைத்திலர் என்பது அறியலாம். மிருக சாதிகளைப்பார்த்தாலும் இது நன்கு விளங்கும். அவற்றுட் சிலவற்றின் தோல் மந்தமாயும் சில அப்படியல்லாமலும், சிலவற்றிற்கு மயிர் மிக மூடியும், சிலவற்றிற்கு அங்ஙனம் மூடாமலும், சில கொம்புள்ளனவும் சில அஃதில்லனவும் ஆகப் பலவிதமாக விருக்கின்றன. இவை யொவ்வொன்றும் ஒவ்வோர் விதமாயிருத்தல் ஓர் நிமித்தங்கருதி—ஓர் காரணத்தை முன்னிட்டு—நிற்கின்றனவென்பது, இதனை உய்த்துணரும் ஒவ்வொருவருக்கும் எளிதில் விளங்கும்.

ஓர் வீட்டினிடத்தே ஓர் அறையில் கற்கள் நன்றாய்ப் பாவப்பட்டுத் தண்ணீர்க்குழாயும் நீர் செல்வழியும் அமைக்கப்பட்டுள்ளன. மற்றோரிடத்தில் ஓர் மூலையில் அடுக்

களை யமைக்கப்பட்டு மேல் ஒரு பலகணி வைக்கப்பட்டிருக்கிறது. பின்னும் வேறோரிடத்தில் ஓர் அறையானது சித்திரப்படங்கள் முதலியவற்றால் அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. இவையெல்லாவற்றையும் பார்த்தவுடனே முதலறை ஸ்நானத்திற்கும் இரண்டாவது சமையலுக்கும் மூன்றாவது சயனத்திற்குமாகக் கருதப்பட்டு ஒருவனால் அமைக்கப்பட்டதென்பது மலையிலக்கே. அதுபோலவே நம்சரீரத்திலும்நுட்ப இந்திரியமாகிய கண்ணைக் காக்கும் இமைகளையும், காதிற் சப்தத்தைச் செலுத்துவனவாகிய மேலமைப்புக்களையும், கை கால்களிலுள்ள பெரும் எலும்புகள் ஒன்றோடொன்று சேர்க்கப்பட்டிருக்கும் அமைப்பையும், விரல்களில் சிறு எலும்புகள் அமைந்திருக்கும் தோற்றத்தையும், இன்னபல அறிதற்கருமையாகிய அமைப்புக்கள் பலவற்றையும் ஆராயப் புகுங்கால் இவை யொவ்வொன்றும்பலபிரயோசனங்கருதி யமைக்கப்பட்டிருக்கின்றனவென்பது எவரும் மறுக்கற்பாலதன்று. ஆகவே, இவற்றை இங்ஙனம் கருதிச் செய்தாராகிய அளவிறந்த அறிவினையுடையா ரொருவர் இருத்தல்வேண்டுமென்பது அங்கை நெல்லிக்கனிபோற் றுணியப்படுமன்றோ? இதுகாறும் கூறியவற்றால் இவ்வுலகம் பயன்குறித்துச் செய்யப்பட்டதொரு காரியமென்பதும், அதனையங்ஙனம் கருதிச்செய்தார் ஒருவர் உண்டென்பதும், அது தானாக அமைதல் அசாத்தியம் என்பதுமாயிற்று. இப்படிப் பயன்குறித்தலால் கடவுள் உண்டு என்பதைத்தான் ஆங்கிலேயர்(The Design Argument)என்று சொல்வது. இவ்வுலகமாகிய காரியத்தைப்பார்த்துக் கடவுளாகிய காரணத்தை அநுமானித்தலைப்பற்றித் தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் சொன்ன

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு."

குறளின்கீழ்ப் பரிமேலழகர் "காணப்பட்ட வுலகத்திற் காணப்படாத கடவுட்குஉண்மை கூறவேண்டுதல்" என்று கூறியிருக்கின்றனர்.

இதுவரையில் அனுமானத்தாற் கடவுளுண்மையை யோசித்துவந்தோம். இனி, ஆகம அளவையை ஆலோசிப்போம். ஆகம அளவையாவது முன் குறிப்பிட்டபடி அறிவானிறைந்த பெரியோர் சொற்செயல்களே. இந்தப் பிரமாணத்தை இங்கு நாம் மிக வற்புறுத்தி ஆராய்ந்து பார்த்தல் அனுவசியம். நம் முன்னோர்களெல்லாம், ஆஸ்திகர்களாய் ஓர் கடவுளைத் துதித்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். சைவம், வைஷ்ணவம், க்றைஸ்தவம், மகமதீயம் என்பனபோன்ற மதங்களைத் தழுவிய அநேகரும் உலகத்தையுண்டாக்கிபவராகிய ஓர் முதற்கடவுளது உண்மையை ஏற்றுக்கொள்பவர்களே. கற்றுத்தேர்ந்தவர்களில் நாஸ்திகராயிருப்போர் மிகச்சிலரே. அவர்களும் கஷ்டம்வந்த காலத்துக் கடவுளை நினைத்தல் என்றபடி, நல்லனுபவங்கள் வந்தகாலத்துத் தங்கள் முயற்சியாற் கிடைத்தனவென்று சொல்லியும் தீய அநுபவங்கள் நேர்ந்தவிடத்துப் பாழுந் தெய்வம் பண்ணிவிட்டதென்றும் கூறித்திரிவர். சைவம் முதலிய மதங்களை அநுட்டிப்பவர்களில் பெரியோர்கள் கடவுளுண்மையைப்பற்றிச் சொல்லிய வாக்கியங்கள் அளவிறந்தனவும் யாவரும் அறியப்பெற்றனவுமாகலின் ஈண்டு அவற்றுளொன்றும் எடுத்துக்காட்ட வேண்டுவதில்லை. ஒருவிஷயம் மட்டும் இங்குக்குறிப்பிடுதல் அவசியம் எனத் தோற்றுகின்றது. 'சைவர், வைஷ்ணவர், க்றைஸ்தவர், மகமதியர் முதலிய பலரும் கடவுள் உண்மையை ஏற்றுக்கொள்ளினும் ஒவ்வொருவரும் அவரவர் வணங்கும் கடவுட்கு வெவ்வேறு நாமமிட்டு வழங்கிவருகின்றனர். இதைமுன்னிட்டே ஒருவர்மேலொருவர் அழுக்காறும் வெகுளியும்

கொண்டொழுகுவது சரியன்று. ஒவ்வொருவர் கொள்கையிலும் வேறுபாடு உண்டாயின் அவ்வாறிருப்பது ஒருவாறு சரியென்று சொல்லக்கூடும். கடவுள் பெயருக்குமட்டும் சண்டையிட்டுக்கொள்ளுதல் அறிவிற்கழகன்று. வாதவூரடிகள் "ஒருநாம மோருருவ மொன்றுமில்லார்க் காயிரந், திருநாமம் பாடி" என்று கூறியதை இங்கே உணர்தல் வேண்டும். இனிக்கிறிஸ்தவமுதலிய புறமதத்தரும், நம்மவருள்ளேயே நம் சாத்திரங்களைச் சரிவரக் கல்லாத சிலரும் நம் ஹிந்துமதமானது பல கடவுளை அங்கிகரித்திருக்கிறதென்று ஏசுகின்றனர். அவர்கள் நம் ஹிந்துமதக் கோட்பாடுகளில் கடவுளின் தன்மையையும், அவருக்கும் ஆன்மாவுக்குமுள்ள சம்பந்தத்தையும், ஆன்மலக்ஷணத்தையும் ஆன்மா இவ்வுலகத்தின்கண் வந்து செல்லும் வரலாற்றையும் பின்னும் இவைபோன்றவற்றையுஞ் சமயசம்பிரதாயப்படி சாஸ்திரோக்தமாய்க் கற்றவர்களாயின் அப்படிச் சொல்ல ஒருபோதும் துணியார். அவர்கள் இனியாவது இங்ஙனம் நன்காராயாது அசம்பாவிதமாகச் சொல்லாமல் ஓர் மதகண்டனம் செய்யப் புகுங்கால் அம்மதக் கோட்பாடுகளை நன்குணர்ந்தபின் கண்டனம் செய்யப் புகுவாராக. இது காறும் அனுமானம் ஆகமம் ஆகிய இரண்டையும்பற்றிக் கூறப்பட்டது. இனி பொருசிறு விஷயமுள்ளது. அதைப் பார்ப்போம்.

கடவுள் ஒருவர் உண்டென்று நிரூபித்துக்காட்டப்படாவிட்டாலும் கடவுளில்லை என்னும் நாத்திகரைவிடக் கடவுள் உண்டென்னும் கொள்கையுடையார்க்கு அதனால் அநேக நன்மைகள் உண்டாகின்றன. கடவுள் உண்டென்னும் உண்மையறிவோடுங் கூடியவன் அவர்க்குப் பயந்து தீய செய்கைகள் ஒன்றும் செய்யக் கருதாது உலகில் நல்லனெய்ப் பேறுபெற்றுய்வான். இதனலேயே நாத்திகர்

எல்லாம் தீயவர்கள் என்று நாம் கருதியதாகக் கொள்ளக் கூடாது. பின்னை யென்னையெனின் நாத்திகர்கட்குத் தீய செயல் பல செய்யத் தூண்டுகோல் மிக உண்டு என்பதே. மேலும் உலகத்திற் பிறரால் நன்கு விளக்க முடியாத விஷயங்கள் பல ஆஸ்திகர்களால் அவர்கள் கோட்பாடுகளின் உதவியைக்கொண்டு நாட்டப்படுகின்றன. "கடவுள் உண்டென்பதும் ஆத்மா நித்யமென்பதும் நமக்குப் பிரத்யக்ஷானுபவ ஞானமாகக் கிடைக்கவில்லை. எனினும், நமக்குப் பிரத்தியக்ஷ ஞான சித்தமாக இருக்கிற காரியத்திற்குச் சரியானபடி காரணம் உரைக்கவேண்டியதற்காக ஆத்ம நித்யத்தையும் கடவுளி னுண்மையையும் ஒப்பக் கொள்ளவேண்டுவ தவசியமாயின் நாம் முந்தியவற்றின் உண்மையைக்கொண்டு பிந்தியவற்றி னுண்மையைச் சந்தேகமற ஊகிக்கலாம்." என்றும் ஸர். டபிள்யூ. ஹாமில்டன் என்பவருங் கூறியுள்ளார்.

இனி இவற்றிற்கெல்லாம் மேலாய்க் கடவுள் உண்மையை நாட்டற்குப் பெருத்த சாதனமாயுள்ளது நம்பிக்கையே. இவ்விஷயத்தை நிரூபித்துக் காட்டுவது மிகக் கடினம். அங்ஙனம் காட்டினும் மிகப் பயன்படுவதன்று. இதற்கு முக்கியமாய் வேண்டியது நம்பிக்கையே. ஓர் குழந்தையானது பிறந்தவுடன் பாலை அருந்தவேண்டியது அதன் கடமையேயன்றி, அப்பாலின் நன்மை தீமையை அறிந்தபின் அருந்துவதென்றால் அது பால் குடிக்காது சாகவேண்டியது தவிர வேறில்லை. அதுபோலவே நாமும் நம்பிக் கடவுளைத் தொழுது அதன்பின் வரும் அநுபவங்களால் அதன் பயனை அறியவேண்டுவதல்லது, அறிந்த பின்னர்த் தொழுவோமென்றால் நாத்திகர்களாய்க் கெட்டலையவேண்டுமென்பதற் கையமொன்றுமிலது. இதனை வற்புறுத்தியே இங்கிலீஷில், 'டேன்னிஸன்' என்னும் மகா

கவி தமதருமைக் காவியமாகிய "இன்மெமோரிய"த்தின் முதலிலேயே கூறியுள்ளார்.*

இதுவரையிற் கூறிவந்த கடவுள் உண்மையை நாம் எல்லோரும் அறிந்து அவரை அன்போடு வணங்கி உலகில் நல்லராய்ப் பேறுபெற் றுய்வோமாக. அவர் ஒருவரே நமக்குச் சாசுவத பந்துவாய் நம் கஷ்டங்களை நீக்க வல்லவர். திருநாவுக்கரசும்

"உற்றா ராருளரோ உயிர் கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லானமக்—
குற்றா ராருளரோ."

என் று திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றாரன்றோ?

ம. வீ. மீனாக்ஷிசுந்தர முதலியார், B. A.

*Strong Son of God, Immortal Love
Whom we, that have not seen Thy face
By faith and faith alone embrace
Believing where we cannot prove.

கிறிஸ்து போன்ற ஒழுக்க முறை நூல்.

[அறிவிப்பு:—இந்நூல் லத்தீன் பாஷையில் உள்ளது. இத்தாலியா தேசத்தில் கெம்பிஸ் என்ற கிராமவாசியாகிய தோமஸ் என்ற ஞானியார் இயற்றியது. இற்றைக்கு 510-வருஷங்களுக்கு முன்னர் இவர் இருந்தார். இந்நூலின்கண் உள்ள உண்மைப் பொருள்கள் பெரும்பான்மையாய் ஒரு மதத்திற்கும் விரோதமல்ல. எல்லாச் சமயிகளும் கைக்கொண்டு அனுஷ்டிக்கத்தக்கன. மேல் நாட்டில் உள்ள எல்லாப் பாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பெற்றுள்ளது. ஆங்கிலத்தில் மாத்திரம் மூன்று நான்கு வித்வான்கள் மொழிபெயர்த்துள்ளார். இத்தேசத்தின் பாஷையில் இதுகாறும் மொழிபெயர்க்கப்பட்டதாகத் தோன்றவில்லை. இப்பெரிய அரிய நூலை நம் தேசத்தார் எச்சமயரேனும் படிப்பாராகில், மதத்துவேஷம்குன்றிச் சமாதானமும், ஒப்புநோக்குஞ்சுபாவமும்பெறுவர். இப்புத்தகத்தை உள்ளபடி கிறிஸ்தவர் உணர்வாராகில், பிறமதத்தினின்று சிறுவர்களையும்சிறுமிகளையும் பெயர்த்து, கிறிஸ்துமதத்தில் சேர்க்க நாடார்—

"ஆனசமயம் அது இது நன்றும் எனும்.
மாய மனிதர் மயக்கம் அது ஒழி.
கானங் கடந்த கடவுளை நாடுமின்
ஊனங் கடந்த உருவது ஆமே."

"முத்திக்கு வித்து முதல்வன் ஞானமே
பத்திக்கு வித்துப பணிந்துற்றுப் பற்றலே
சித்திக்கு வித்துச்சிவ பரந்தான் ஆதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே."

என்ற திருமூலர் அருளிய திருமந்திரவாக்குக்களுக்கு அநுசாணை

யாக இந்நூல்முறை செல்லுகின்றது. இத்தமிழ் மொழிபெயர்ப்பு ஆங்கிலத்தினின்று செய்துள்ளது. முதல்நூல் கிரந்த கருத்தாவின் ஹிருதயத்தைக் கூடியவரை தெரிந்து எழுத முயன்றேன். ஞான நூலாகையால், பூர்ணமாக அறிந்தேன் என்று சொல்ல வல்லேன் அல்லேன்.

இதை வாசிக்கின்றவர், கிறிஸ்து, ஏசு, என்ற மொழிகளுக்குப் பதிலாக, அவர்அவர் சமயத்தில்,உயர்வுபெற்ற ஞானியின் பெயரை வைத்து, வாசிப்பரோயாகில், மதசெருக்கும் பகைமையும் கொள்ளார்—]

4-வது அதிகாரம்.

சுத்த மனமும், ஒருமைப்பட்ட சிந்தையும்.

உலகப் பற்றுக்களினின்று ஒருவன் வெளியேறிப் பறக்க இரண்டு இறக்கைகள் வேண்டும். கபடமின்மையும் தூய்மையுமாம். தன் நோக்கமெல்லாய் கபட மின்மையென்ற இசை பற்றியதாக இருக்கவேண்டும். தன் அன்பெல்லாம் தூய்மை யென்ற இசை பற்றியதாக இருக்கவேண்டும். அவன் நோக்கம் இறைவனிடம் செல்லவேண்டும். அவன் அன்பு இறைவனைத் தழுவவேண்டும். அவரையே சுகிக்கவேண்டும். மனச்சஞ்சலமின்றிச் சமாதானம் உள்ளாளுகில் பிறர் நற்கருமங்கள் உனக்குத் தடை செய்யாவாம். உன் நோக்கமும் எண்ணமும் கடவுள் கைங்கர்யத்தினும் அயலான் க்ஷேமத்தினு மிருப்பின் உன்னுள்ளத்தில், ஆத்ம சுகம் அனுபவிப்பாய். ["கெடுக்க வல்லதுங் கெட்டவர் தங்களை—எடுக்க வல்லது மிம்மன மென்றதை—யடக்க வல்லவனைய பவக்கடல்—கடக்க வல்லவ ஞவன் கடிதரோ."—பிரபுலிங்கலீலை.] உன் நெஞ்சம் நேர்மையாக இருப்பின், பார்க்குமிடமெல்லாம் சத்திய தர்சனமும், படிக்கும் சாஸ்திரங்களெல்லாம் நல்ல ஆதேசமுமாகத் தோன்றுவதாகும். எவ்வளவு அற்பமான வஸ்துவா யிருப்பினும், எவ்வளவு கேவலமானதாகவிருப்பினும் அது அது அத்தன்கண் அமைந்துள்ள ஈசன் அருளை அறிவிப்பதாகும். மனத்துக்கண் மாசிலனுக இருக்கப்பெறின் எல்லாம் தெளிவாய் ஸ்படிகம்போலத் தோன்றும் களங்கம் ஒன்றுமிராது. ஈசனை மெய்யாய் உணர்வாய். சுத்த மனத்துக்கு வானமும் பாதாளமும் உள்ளபடி வெளியாகும்.

ஒவ்வொருவனும் தன்னுள்ளத்தில் நீதிக்குத் தக்கவாறு தனக்குப் புறம்பாயுள்ளவைகளைப் பற்றி எண்ணுகிறான். சந்தோஷம் உலகில் உண்டானால் நல்ல சிந்தனையுள்ளவன் உடனே யனுபவிக்கிறான். துக்கம் உலகில் நேர்ந்தால் தீய சிந்தையுள்ளவன் உடனே உணருகிறான்.

தீயிற் போகட்ட இருப்பு துரு நீங்கிச் சுத்தமாகிறது. அது போலக் கடவுளை நோக்குகிறவன் தன் மோகங்கள் நீங்கிப் புது மனிதனாக ஆகிறான். கொஞ்சம் சோம்பலாற்சோர்ந்தால் சொற்ப அனுஷ்டானத்துக்கும் பயப்படுகிறான். பிறசகாயம் நாடுகிறான். தம்மை ஜயித்துத் தீரனாகக் கடவுளை வழிபடின், பாரமானதாக முன் எண்ணிய விஷயங்கள் இலகுவாம்.

௫-வது அதிகாரம்.

தன்னுள் நோக்கம்.

அருள் சக்தியும், அறிவு சக்தியும் இல்லார் நாம். அதனால் நம்மையே முற்றும் நம்பவொண்ணாது. நம்மறிவு அற்பமானது. அதுவும் நம்முடைய சோர்வினால் இழக்கிறோம். மனக்கண் குருடரென நாம் அறிகிறோமில்லை; தீயவை புரிகிறோம். அதற்குச் செய்யும் சமாதானமும் அதினும் தீயதாம். கோபத்தால் எவப் பெறுகிறோம். அதை உற்சாகமெனக் கருதுகிறோம். பிறர் சிறு குற்றங்களைக் கடிந்து கொள்ளுகிறோம். நம்முடைய பெருங்குற்றத்தை யறியாதிருக்கிறோம். பிறர் செய்யுந் துன்பத்தை யுணர்ந்து, நினைத்து நினைத்து உருகுகிறோம். நம்மிடம் பிறர்படுந் துன்பத்தைப் பற்றி நினையோம். ஒவ்வொருவரும் தம் தம் கருமங்களை நியாயமாகச் சிந்திப்பாராகில் பிறரைப் பற்றிக் கொடுமையான அபிப்பிராயங் கொள்ள நேராது.

2

அந்தர்முகப் படுகிறவன், தன் ஆத்ம ரக்ஷணத்தையே கவனிப்பான். பிறருடைய விஷயங்களில் கவலைகொள்ளான். சுறுசுறுப்பாய்த் தன் உள்ளே நோக்குகிறவன் உலக விஷயங்களில் மௌனியாயிருப்பான். பிறர் விஷயங்களை யகற்றினாலன்றி, உள் நோக்க இயலாது. தூயனாக முடியாது. உள்ளே நோக்கி இறைவனிடம் மனத்தைப் பூர்த்தியாய் வைப்பாயாகில் வெளிவிஷயங்கள் உன்னைப்

பிடிக்காவாம். உன்னை யசைக்காவாம். உன்னுடன் உன் மனம் இராமல் எங்கேயோ போகின்றதே! உன்னை மறந்து நீ ஊரெல்லாம் அலைந்ததினால் என்ன பயன். நீ சாந்தமும் மனவொருமையும் அடையவேண்டுமோகில் பிறவற்றை யெல்லாம் விரைவில் தவிர்; உலக விஷயங்களினின்றும் பராமுகமாக விரு. நீ எப்பொழுதும் உன்மனக்கண் எதிர்நோக்காயிரு. அதனால் உனக்கு நலமுண்டு. உலக சம்பந்தம் உனக்குக் கொஞ்சமேனு நேர்ந்தால் நீமோசம் போய் விடுவாய்.

3

கடவுள், அவர் பற்றியது, இவைதவிர, மற்றது, மேல், பெரிது, பிரியமானது, ருசியானது என எவ்விதமிருப்பினும் அவை யெல்லாம் அற்பமென நினை. ["ஊருஞ் சதமல்ல உற்றார் சதமல்ல உற்றுப்பெற்ற—பேருஞ் சதமல்ல பெண்டிர் சதமல்ல பிள்ளை களும்—சீருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேயத்திலே—யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சி யேகம்பனே"—பட்டினத்துப் பிள்ளை யார்.] விஷய சுகங்களெல்லாம் வீண் மயக்கமென மதி. கடவுளிடம் அன்பு பாராட்டுவான் அவரைவிட மற்றவைகளை யெல்லாம் வெறுப்பான். கடவுளே யெந்நாளும் உள்ளார்; அளவற்றவர்; உலக வியாபி, ஜீவனுக்கு ஸஹிருதராம். மனத்துக்கு உண்மை யான ஆனந்தம் ஜனிப்பிப்பவராம்.

6-வது அதிகாரம்.

சுத்த மனத்தின் சந்துஷ்டி.

நல்லான் ஒருவன் மகிமையை அவன் சாந்தமனங் காட்டி விடும். அதுவே சான்றாம். மனச்சமாதான மிருந்தால் என்றும் சந்தோஷமாம். சுத்த மனம் எல்லாம் பொறுக்கும். துன்பங் களின் மத்தியில் இன்பமுள்ளதாக விருக்கும். அசுத்த மனமோ எப்போதுஞ் சஞ்சலப்படும். எப்போதும் பயத்துக் குள்ளாகும்.

உன் மனம் உன்னைக் கடிந்து கொள்ளாவிடின் உன் விசிராந்தி யினிதாகும். சத்கர்மம் ஒன்று செய்ய மனம் சந்தோஷமமையும். தீயவருக்கு உண்மையான சந்தோஷமில்லை. உள்ளே, உண்மை யான சாந்தமுமில்லை. "பாபிகளுக்குச் சாந்தமில்லை" என்றது கர்த்தர் வாக்கு. "நாங்கள் உபசாந்தி பெற்றுளோம்; எங்களைத்

துன்பம் அணுகாது. எங்களுக்கு ஒருவராலும் தீமைசெய்ய வொண்ணுது" என ஒருவர் சொல்லின் அதை நம்பவேண்டாம். திடீரென்று அவருக்கு ஈசுவரன் கோபம் சம்பவிக்கும். அவர்கள் கர்மங்களெல்லாம் நசித்துப்போம். அவர் எண்ணங்களெல்லாம் பொய்த்துப் போம். அன்புடையாருக்கு இடுக்கண் வந்த காலத்தும் மனம் கோணுமல் மகிமையுள்ளவராயிருத்தல் சிரமம் அன்றும். அத்தன்மையான மகிமைதான் சிலுவையின்கண் ஏசுநாதர் துன்பத்தைச் சகித்த மகிமைக்கு ஒப்பாம். மனிதரால் பெறப்படும் புகழுங் கீர்த்தியும் நாட்பட இராவாம். அதன் பின் வியசனம் தொடர்வதாகும்.

2

["அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்—செந் தண்மை பூண்டொழுக லான்."—குறள்.] நல்லவர்களின் மகிமை அவர்கள் மனேதர்மம் பற்றியேயாம். பிறர் வசனிக்கும் வார்த்தைகளில் அன்றும். சத்தியமானவர்களின் கீர்த்தி ஈசுவரனினின்று வருகிறது; அவரிடம் உள்ளது. அவர்கள் ஆனந்தம் சத்தியமானது; என்று முள்ளது: நித்தியமானதும் சத்திய மானதுமான கீர்த்தியை விரும்புகிறவன் அழியக்கூடிய அநித்திய உலககீர்த்தியைப் பற்றி நினையான். காலவரம்புக்குள்ளான உலக கீர்த்தியை விரும்புவானும், உண்மையாய் வெறுக்கானும் மேலான லோகத்தின் கீர்த்தியைச் சற்றேனுஞ் சிந்தியான். இது யாருக்கும் விளங்கும்.

புகழையும் இகழையும் சிந்தியான் ஒருவன் சாந்த மனமுடையன் ஆவன். அவன் மனத்தின்கண் குற்றமிலாணுயின் அவன் சாந்தம் பெறுவான்; திர்ப்தியடைவன். பிறர் ஸ்துதி உன்னைத் தூயன் ஆக்காவாம். அவர் இகழ்ச்சியும் உன்னைத் தாழ்த்தாவாம். உனக்கு உள்ளது இருந்தே தீரும். இறைவன் உன்னை யறிவார். உண்மையாய் உனக்கு இருக்கும் யோக்கியதையைவிட அதிகமாக இருக்கிறதுபோல நடைபெற முடியாது.

நீ ஏகாந்தமாக இருக்கும் காலத்தில் உன்னைப் பற்றி உள் நோக்கிப் பார். பிறர் உன்னைப்பற்றிக் கொண்ட அபிப்பிராயத்தை நீ கவனிக்கவேண்டாம். மனிதர் வெளித் தோற்றத்தைப் பார்ப்பார். கடவுள் உன் உள்ளத்தை யுள்ளபடி பார்ப்பார். மனிதர்

கர்மங்களைக் கவனிப்பார். கடவுள், அவைகளின் காரணமான மனோபாவங்களை யறிவார், சீர் தூக்குவார்.

ஒருவன் எப்போதும் நேர்மையாக ஒழுகித் தன்னை உயர்வாக நினையாதிருப்பின் அவனே அடங்கினவனாவான். அவன் உள்ளத்தின் தூய்மைக்கும் உலக வஸ்துக்களின் சுகத்தை விரும்பாது கொண்ட மனச் சந்துஷ்டிக்கும் அது சான்றாம். தனக்கு வெளிச் சாட்சி வேண்டாதானே கடவுளைப்பற்றியவன் என வெளியாகும். "தன்னைப் புகழுகிறவன் இறைவனுக்குப் பிரியனல்லனும். அவர் எவனை அங்கீகரிக்கிறாரோ அவனே அவருக்குப் பிரியன்." எனப் பால் ஞானியார் உபதேசிக்கின்றார். உள்ளே கடவுளுடன் உறவும், வெளியில் உலகப் பற்றின்மையும், என்னு மிதுதான் உள் நோக்கிய மார்க்கம்.

7–வது அதிகாரம்.

எல்லாப் பற்றையும்விட்டுக் கடவுளைப் பற்றுதல்.

கடவுளுக்காகத்தன்னை நொந்துகொண்டும் கடவுளினிடம் அன்பு பாராட்ட உணர்பவனே ஆனந்தமடைந்தவன். நம்முடைய பிரியங்களி லெல்லாம் அவரை நோக்கிப் பற்றுவிடக் கடவோம். ஏனெனில் எல்லாப்பற்றும்விட்டுக் கடவுளையே பக்தி செய்யவேண்டும். சிருஷ்டிப் பொருள்களில் பற்றுவைத்தல் பயனற்றது. அபாயத்திற்குள்ளாக்கும். அவரைப் பற்றுதல் பலவத்தாம்; என்றுமுள்ளதாம்; அழிகிற வஸ்துக்களின்மேல் பிரியம் வைக்கிறவன், அவைகளைப்போலத் தானும் அழிவான். கடவுளின்மேல் அன்பு வைக்கிறவன் மேன்மேலும் விருத்தியடைவான்.

2

அவரை நேசி, அவரை உன் நண்பனாக அன்பு பாராட்டு. உன்னை யெல்லாருங் கைவிட்டாலும் அவர் உன்னைக் கைவிடார். கடைமுறையில் நீ சாக, அவர் இணங்கார். மனத்துடனாவது அல்லது மனவெறுப்பினுலாவது எல்லாவற்றையும் நீ விட்டு ஒருநாள் விலகிப் போகவேண்டியவன் தானே. அதனால் உன் ஜீவதசையிலும் உன் மரணகாலத்திலும் அவர்மேல் பற்றுவை. அவரையே சதமென நம்பு. அவரே உன்னைக் கைதூக்கிவிடுவர். மற்றையர் உன்னைக் கைவிடுவார். உன் அன்பிற் குரிய ரானவர். வேறு ஒரு

வர்மேல் நீ அன்பு வைக்க இணங்கார். உன் மனமுழுமையும் அவரிடமே வைக்கவேண்டும். அவர் உன் சிந்தை யிடங்கொள்ளு வர். அங்கேயே யாளுவர். நீ தூயனுகி உலகவிஷயங்களின் பற்றை விடுவாயாகில் அவர் எப்போதும் உன் உடலிடம் வசிக்கப் பிரியமுள்ளவராவர்.

3

அவரிடமன்றி, மற்றை மனிதரிடம் வைக்கும் நம்பிக்கை பயன ற்றதாகும். காற்றுலலேயும் நாணலே நம்பாதே. "எல்லா ஜீவ னும், புல்லைப் போன்றனவாம்; அவைகளின் மகிமை புல்லின் பூப் போல் அழிவுள்ளதாம்." என்றது ஒரு ஞானியார் உயர்ந்தமொழி.

மனிதனின் வெளித்தோற்றத்தில் பற்றுவைத்து, மயங்கி, விரைவில் மோசம் போவாய். பிறரை நம்பி அவரைப் பற்றுக் கோடாய் நினைத்து நீ கஷ்ட மடைவாய். நீ செய்யுங் கர்மங்களில் எல்லாம் அவரையே நாடினுல் உண்மையாய் அவரைக் காண்பாய். உன்னையே நாடினுல் நீ, நாசமுற, உன்னையே காண்பாய். கடவுளை நாடாதான் துன்பந் தனக்குத் தேடுவான். அத்துன்பம் உலகெலாங் கூடி யவனைப் பகைக்கினும் அதைவிடப் பெரிதாம்.

8—வது அதிகாரம்.

கடவுள் நம்முடைய பழகிய சிநேகிதர்.

கடவுள் சமீபத்திலிருக்க எல்லாம் நன்மையாம். வருத்தமாக ஒன்றுந் தோன்றுது. அவர் இல்லாவிடில் எல்லாம் வருத்தமாம்.

அவர் நம் முள்ளத்தின்கண் பேசாராகில் எந்த ஆறுதலும் பயனற்றதாம். அவர் இருந்து ஒருமொழி வசனிப்பாராகில் அதிக ஆறுதல் உண்டு. "இதோ அந்த மஹாத்மா—உன்னை யழைக்கி ருர்" என மார்தான் என்பவன் சொல்ல, மேரிமாக்டலின் என் பாள், கேட்டவுடனே தான் கண்ணீர் வடித்து அழுதுகொண்டிரு ந்த இடம் பெயர்த்து எழுந்தா ளன்றே?

கண்ணீரினின்று ஆனந்தத்திற்கு கடவுள் அழைக்கும் சமயமே பெரும் பாக்கியம். அது நல்ல காலம். அவரின்றி நெஞ்சு உலர் ந்து ஈரம் வற்றிக் கடினமாக ஆகிறது. அவரின்றி எல்லாம் வெறு மையே; புத்தி ஹீனமே. உலக சம்பத்தை யெல்லாம் இழத்தலினும்

அவரை யிழத்தல் அதிகக் கேடாம். ஏனென்றால், அவரை யிழந்து உலக சம்பத்தெல்லாம் இருந்து என்ன பயன் செய்யும்? அவர் இல்லாமல் உலக வாழ்வு நரகம் போன்றதே; அவரிருந்தால் அது ஆனந்தவனமாம்; அவர் உன்னிடம் இருப்பின் உனக்குத் தன்பஞ்செய்யக் கூடிய பகைவ ரொருவருமிலர். கடவுளைத் தம்மிடங்கொண்டவர் விலையிலா மாணிக்கம் பெற்றவராவர். அவரை யிழக்கின்றவர், அந்தோ! உலகெலா மிழக்கின்றவராவார். அவரை யுடையான் எல்லா முடையான். அவர் இருந்தால் அரசனுவான்; அவரை யிலான் என்னுடையனே னு மிலனும்.

2

அவருடன் வாழும் முறையறிதல் பெரிய வித்தையாம். அவர் தன்னில் உறைவிடமாக இருக்கும்படி செய்யும் முறையின் அறிவே யறிவு. சாந்தமும் பணிவுமுள்ளவனுக இரு; அவர் உன்னை யுறைவிடமாகக் கொள்ளுவார். உலக வியாபாரத்தில் பிரவேசிப்பாயாகில் அவரை யுன்னைவிட்டுத் துறத்திவிடுவாய்; அவர் உன்னிடமிருந்து அகலுவார்; அவர் அருளை யிழப்பாய். அவரை யிழந்த பிறகு உனக்கு உற்றார் யாவர்? உனக்கு நண்பர் யாவர்? நன்பரின்றி உலக வாழ்வு ரஸமன்று.

மற்றையரைவிட அவரை நீ அதிகமாக அன்பு பாராட்டாமல் போனுல், உனக்கு மனவருத்தமும் வியசனமுந்தான் ஏற்படும். அவரை விட்டுப் பிறரை நம்பினுல் அது அறிவின்மைக்குச் சான்றும். உலகமெல்லாம் உனக்கு எதிர்த்துவரினும் அது நலமென விரும்பு. கடவுளின் கோபம் கொடிது! கொடிது, அம்மா! உனக்குப் பிரியமுள்ள வஸ்துக்களில் கடவுளையே அதிகப் பிரியமாக நாடு.

3

கடவுளுக்காகவே எல்லா வஸ்துக்களிலும் பிரியம்வை. ஆனுல் கடவுளின்மேல் பிரியம் அவருக்காகவே என்று அறி; அவரை வரம்பு கடந்த அன்பினுல் நேசி. நல்ல உற்ற சிநேகர் அவரைவிட இல்லையென நினை. அவரைநோக்க எல்லாரும் சிநேகராம். எல்லாப் பகைவரும் உனக்குப் பிரியர் ஆவர். அவர் எல்லாருடைய அன்புக்கும் பாத்திரமானவர்.

அதிக ஸ்துதி, அதிக அன்பு வேண்டற்க. அது ஒப்பு உயர்வு இல்லாக் கடவுளுக்கே தகும். பிறர் உன்மேல் பிரியம் வைக்க வேண்டற்க. அவர் (கடவுள்) உன் நெஞ்சிலும், எல்லா நல்லறி வாளர் நெஞ்சிலும் தங்குக. ["அற்றது பற்றெனில்—உற்றது வீடு யிர்—செற்றது மன்னுறில்—அற்றிறை பற்றே." திருவாய்மொழி.] சிருஷ்டிப் பொருளின்மேற் காதல் கொள்ளாமல் உன் உள்ளத்திற் சுத்தமாயும் மாசு இல்லாமலும் இரு; களங்கமற்ற தூய மனத்தை ஈசனிடம் செலுத்து; மனமொடுங்கிப்பார்த்தாயாயின் ஈசன் அருள் எத்தன்மையது என உணர்வாய்.

உண்மையாய் இவை யெல்லாம் அவர் அருளால் உனக்குக் கிடைக்கவேண்டுமே யல்லாமல் உன்னால் சாதிக்கக்கூடியனவல்ல. அவர் அருள் முன்போகவும் வழிகாட்டவும் உன்னைத் துறப்பாய். உலகப் பற்றை விடுவாய்; அவருடன் ஏகனாகவிருக்கப் பார்ப்பாய்; அவரும் உன்னுடன் ஏகனாக இருப்பாராவர். இறைவன் அருள் ஒருவனுக்குக்கிட்டவே அவன் எதையுஞ்செய்திடுவான். அது தன்னை விட்டு விலகவே, அவன் வறியனும் அசத்தனும் ஆகிவிடுவான் துன்பத்திற்கும் துயரத்துக்கும் ஆளாவான். ஆயினும், இந்தக் கதியில், மனம் தளரப் படாது. நேர்மையான மனம் உடையனாக ஈசுவர கைங்கர்யம் புரியவேண்டும். வந்த வெல்லாம் வருகவெனப் பொறுத்துக் கடவுளின்மேலுள்ள பக்தியால் தைரியம் கொள்ளுக. சீத காலத்துக்குப் பின்னர் வசந்த காலமும், இரவுக்குப் பின்னர்ப் பகலும், புயலுக்குப் பின்னர் சாந்தமும் வந்தே தீரும். அதுபோல முன்கஷ்டத்திற்கெல்லாம் பின்சுகம் உண்டு.

(இன்னும் வரும்.)

ஆத்மநாதன்.

ஆனரபிள் ஜஸ்டிஸ் பட்ருடீன் டயாப்ஜி.

பட்ருடீன் டயாப்ஜி.

‘தோன்றிற் புகழொடு தோன்றுக’ வென்றுரைத்த
சான்ற புலவன் தனிமொழிக்கு—என்றதொரு
பாரார் நிதர்சனமாம் பட்ருடீன் டயாப்ஜியெனுந்
தாரார் புயமுடையான் தான்.

நமது இந்தியா நாட்டின் அபிவிர்த்தியையும் க்ஷேமத்தையும் பற்றிய ஒவ்வொரு காரியங்களிலும் மிக்க அபிமானமுள்ளவர்களாய், மிகுந்த ஊக்கத்தோடும் சிரத்தையோடும் பலபிரகாரமாகவும் பாடுபட்டு, தம் மாலியன்றவளவுக்குப் பெருத்த நன்மைகள் பலவற்றைச் செய்து, என்றும் அழியாப் புகழ்படைத்த பம்பாய் நகரத்துப் பெருந்தகை மக்கள் பலருள்ளும் பட்ருடீன் டயாப்ஜி யென்பவர் “பன்மலர் நடுவிற் பங்கயம்போலவும்,” “பன்மீன்நடுவிற் பான்மதிபோலவும்” என்றுபாராட்டும்படி பிரதான புருஷராக விளங்கிக்கொண்டுவந்தார். மிகுந்த திறமை வாய்ந்த நியாயவாதி (Barrister) யென்பதனால் மட்டுமன்று; மாண்பும் மதிநுட்பமும்பெற்ற நம் தேசத்து இராஜ்ய தந்திர நிபுணர்களில் ஒருவராக விளங்கியதனாலும் இவர் லோகப்பிரசித்தராகி யாவராலும் நன்குமதிக்கப்பட்டு வந்தார். பொதுவிஷயங்களான காரியங்களையெல்லாம் தாமே முன்னின்று சாதித்துவந்ததால் குடிகளும் அரசாங்கத்தாரும இவரை நல்ல அறிவாளியென்று சொல்

லிப் புகழத் தலைப்பட்டார்கள். இவர் நியாயவாதியாகவும் மற்றைப்படி பொதுமனிதராகவும் நடந்துகொண்ட மாதிரியெல்லாம் பிறர் பின்பற்றி யனுஷ்டிக்கத் தக்கவைகளாகவே யிருந்தன. இவரது சிறந்த அனுஷ்டானங்கள் பலவற்றுள்ளும் மிக முக்கியமானதாயும், மற்றையோர்க்கு நல்லறிவு புகட்டக்கூடியதாயுமுள்ள படிப்பினை யாதெனில், மிகுந்த வேலையுள்ள நியாயவாதியுங்கூட விருப்பம் மாத்திர மிருக்குமானால் நம் தேசத்திற்காகப் பாடுபட்டுழைக்கப் போதிய அவகாசம் பெறலாம் என்பதாம். தங்களுக்குப் பணம்வரும்படியான காரியத்தைத்தவிர்த்து இதரவிஷயங்களொன்றையுமே கவனியாமல், யாராவது கேட்பவர்களுக்கு "என்ன செய்யலாம், பொது விஷயங்களுக்காக இயன்றமட்டும் உழைப்போமென்றால் அதற்குச் சாவகாசம் கிடைக்கவில்லை" என்று வீணான சமாதானங்களைச் சாக்காகச் சொல்லிவருகின்ற படிப்பாளிகளானபலரும் இனியும் அவ்வாறு சமாதானத்தைக் கற்பித்துச் சொல்ல முயலாமல் நமது டயாப்ஜியின் அனுஷ்டானத்தை எப்போதும் மறவாமல் ஞாபகத்திற்கொண்டு நடந்துவருவார்களாக.

நமது பட்ரூடீன் டயாப்ஜி யென்பவர், பலவருஷங்களுக்குமுன்னர் காம்பே யென்னுமிடத்திலிருந்து பிறகு பம்பாய் நகரத்திற்குக் குடிபுகுந்தவர்களான நல்ல பிரஸித்தியும் பெருந்தன்மையுந் தங்கிய ஆரப் வமிசத்தைச் சேர்ந்தவர். இவர் 1844-ம் வருஷம் அக்டோபர்மீ 8-ம் தேதியன்று பிறந்தார். இவரது பிதாவாகிய டயாப்ஜி பாய் மியான் ஸாஹிப் என்பவர் இங்கிலாந்து, பிரான்ஸு முதலிய ஐரோப்பிய நாடுகளோடு பெரிதாக வியாபாரஞ் செய்து ஏராளமான திரவியத்தைச்சேர்த்த ஒரு பெயர் போன வியாபாரி. மேல்நாட்டவரோடிவருக் கனுதினமும்

நெருங்கிய பழக்கமேற்பட்டதால் இவர் அவர்களது நடையுடை பாவனைகளையும் ஜாதியாசாரங்களையும் பற்றிச் சிரேஷ்டமான எண்ணங்கொண்டு தமது புதல்வர்களையும் மேல்நாட்டுக்கனுப்பிப் படிப்பிக்கவேண்டுமென்று கருத்துக்கொண்டார். அவ்வண்ணமே தமது புதல்வர்களான ஷுஜாயுடீன், கம்ருடீன், பட்ருடீன் என்னும் மூவரையும் மேல்நாட்டவரது கல்வியையும் நாகரிகத்தையும் நன்கு கற்று வருமாற இங்கிலாந்துக்கு அனுப்பினர். பின்னர், மூத்த குமாரரான ஷுஜாயுடீனென்பவர் பிதாவினது வியாபாரத் தொழிலைக் கைக்கொண்டார்; இரண்டாவது குமாரரான கம்ருடீன் டயாப்ஜியென்டவர் பம்பாயிலேயே ஒரு சிறந்த நியாயவாதி (solicitor) யாக விளங்கி வந்தார்.

பட்ருடீன் டயாப்ஜி யென்பவர் பம்பாயில் தாதா மாக்ரா மாத்ராஸா (Dada Makhra's Madresa) என்னுமிடத்தில் உருடு பாரஸீக பாஷா கல்வியைப் பெற்றுப் பின், எல்பின்ஸ்டோன் கலாசாலையிற் சேர்ந்து அங்கே 1860-ம் வருஷம் வரையிற் கல்விபயின்று வந்தார். அப்போது இவருக்கு வயது பதினாறு; இப்போதுதான் இவர் இங்கிலாந்திற்கனுப்பப்பட்டார். இவர் இங்கிலாந்தில் நியூபரி ஹைபார்க் காலேஜில் பயின்று லண்டன் சர்வகலா சங்கத்தில் மெட்ரிகுலேஷன் என்னும் பிரவேச பரீக்ஷையில் தேர்ச்சியடைந்தார். இவர் அதே சர்வகலா சங்கத்தில் உயர்ந்த பட்ட பரீக்ஷைகளுக்குப் படித்துவந்தார். ஆனால், 1864-ம் ௵ அக்டோபர் ௴ தேகாரோக்கியமின்மைபற்றி இந்தியாவுக்குத் திரும்பிவரும்படி யாயிற்று. இந்தியாவிற் சிலகாலம் தங்கியிருந்து மீளவும் இங்கிலாந்துக்குச் சென்று மிடில்டேம்பிள் என்னும் சட்டகலாசாலையிற் சேர்ந்து பயின்று, 1867-ம் ௵ எப்ரல் ௴

பாரிஸ்டராகி, இந்தியாவுக்குத் திரும்பியவுடனே பம்பா யில் ஹை கோர்ட்டில் அட்வோகேட்டாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

பம்பாயில் முதன்முதல் பாரிஸ்டர் வேலைக்குவந்த இந்தியர் இவர்தாம். ஆகையால் பம்பாயில் அப்போது பிரஸித்தர்களாக விளங்கின சட்ட வித்யா பாரங்கதர்க ளான பலரும் இவரை மிகுந்த ஆதரத்தோடு கவனித்துக் கொண்டுவந்தார்கள்.

நமது இந்தியாவிலுள்ள ஹை கோர்ட்டுக்கள் ஒன் றில் பாரிஸ்டராக வரும் ஒரு இந்தியர் முதலெடுப்பில் எவ் வளவு கஷ்ட நிஷ்டூரங்களுக்கு உட்படவேண்டி வரும் என்பது அநேகருக்குத் தெரியாது. நமது பட்ருடீன் என் பவரோ அவ்வாறு கஷ்டப்படவேண்டியவராக இருக்க வில்லை. காலக்ஷேபத்திற்கு வருவாயை யெதிர்பார்த்து நிற்கவேண்டிய நிலைமையிலில்லாமல் தனிகராக விருந்தது ஒரு விதத்தில் இவருக்கு மிக அனுகூலத்தைச் செய்தது. மேலும், இவர் தமயனாராகிய காலம் சென்ற கம்ருடீன் டயாப்ஜி யென்பவர் அக்காலம் பம்பாய் ஹை கோர்ட் டில் பிரதான ஸொலிஸிட்டராக இருந்ததும் இவர் பாரி ஸ்டர் வேலைக்கு ஆரம்பத்தில் நல்ல உதவியாக இருந்தது. இயல்பிலேயே தனிகராவிருப்பதும், தமயனார் சிறந்த ஸொலிஸிட்டராக ஏற்பட்டதுமான ஆரம்பகாலத்தில் இன்றியமையாது வேண்டப்படுவனவாகிய இவ்வுதவிகள் தமது பாரிஸ்டர் வேலையைப் புதிதாகச் செய்யத்தொடங் கிய பட்ருடீன் டயாப்ஜிக்கு மிக்க ஊக்கத்தைத் தருவதா யிருந்தன. எனினும், நமது புதிய பாரிஸ்டர் இவ்வுதவிகளை மாத்திரம் நம்பிக்கொண்டிருக்கவில்லை; தமது வல்லமையா லும், பரிசிரமத்தாலும், திறமையாலும் ஸ்வயமாகவே கூடிய சீக்கிரத்தில் ஒரு சிறந்த பாரிஸ்டராக விளங்கலானார்.

இவர் தமது பாரிஸ்டர் வேலையில் மிகுந்த கவலையுள்ளவராய் அதுவே முழுநோக்கமுமாகக் கொண்டு எல்லா விதத்தாலும் உழைத்து வந்தபடியால், அதிசீக்கிரகாலத்தில் மற்றுள்ள பாரிஸ்டரெல்லாரும் கண்டு பொறாமை கொள்ளும்படி நல்ல பிரஸித்தியை யடைந்து, ஒப்புயர் வற்ற திறமையுடைய பாரிஸ்டராக மேம்பாடு பெற்றுப், பல வருஷகாலம் பம்பாய் ஹைகோர்ட்டில் எல்லாருடைய புகழ்ச்சிக்கும், நன்குமதிப்புக்கும் விஷயமாகிச் சிறப்புற்றோங்கி வந்தார்.

1895-ம்வரு பம்பாய் ராஜாங்கத்தார், ஹைகோர்ட்டுக்கு, அக்காலம் இந்திய ஜட்ஜாக வேலைபார்த்து வந்த காலஞ்சென்ற ஜஸ்டிஸ் ராணடே என்பவரைத்தவிர, மற்றுமொரு இந்திய ஜட்ஜை நியமிக்க வேண்டுவது அவசியமானதாகக் கண்டு, நமது பட்ருடீன் டயாப்ஜியே அந்த ஸ்தானத்திற்கு மற்றையோர் எல்லாரினும் தகுதியுள்ளவராக இருந்தமையால் இவரையே ஜட்ஜாகத் தேர்ந்து நியமித்தார்கள். பாரிஸ்டரிலிருந்து ஐகோர்ட்டு நியாயாதிபதியாக முதன் முதல் உயர்த்தப்பெற்ற இந்தியரும் இவர்தாம். இவர் மேற்கூறிய நியாயாதிபதி ஸ்தானத்தை வகித்து அரசாங்கத்தாரும் குடிகளும் சந்தோஷிக்கும்படித் திர்ப்திகரமாகவே வேலைபார்த்து வந்தார்.

1903-ம்வரு, நெடுங்காலம், இவர் பிரதான நீதியதிபதியின் ஸ்தானத்தையும் பெற்றுப் பெருமையோடு விளங்கினர்.

அறிவும் ஆண்மையும் படைத்த நியாயவாதியாகவும், தலைமையும் செல்வாக்கும் வாய்ந்த பொதுமனிதராகவும் இவரை மேன்மையுறச் செய்ததெதுவோ, அந்த விசாலமான நுண்ணறிவுடைய இவர் மனோபலமே இவரைச் சிறந்த நியாயாதிபதியெனவும் கொண்டாடும்படி செய்

தது. இங்கிலீஷ் நியாயசாஸ்திரத்தில் இவருக்குள்ள தேர்ச்சி யபாரமாகவும் தெளிவாகவு மிருந்தது. இவ் விஷயம் இவர் நியாய ஸ்தானத்திலிருந்து கூறிய தீர்ப்புக் கள் பலவற்றாலும் நாம் நன்கு தெரியலாம். நமது ஜஸ் டிஸ் பட்ருடீன் அவர்களைப்போல நியாயவாதிகளைப் பக்ஷ மாகவும் மரியாதையாகவும் நடத்திய நியாயாதிபதிகள் வேறு எவருமிலர் என்பதும் நாம் துணிந்து சொல்லக் கூடிய விஷயமே. மேலும், அறிவுடைய நன்மக்களெல் லாம் இவரை "உறுதியான" நியாயாதிபதி யென்று சொல் லித் துதிப்பது வழக்கம். இங்ஙனம் ஒரு நியாயாதி பதியை "உறுதியான" என்னும் அடைமொழியைக் கொடு த்துக் கூறுவதினும் விசேஷமாக வேறு எதைத்தான் சேர் த்துச் சொல்லக் கூடும்? "தீர்மானமின்மை", "சஞ்சல முடைமை" என்னும் இவ்விரண்டுமே ஒரு நியாயாதிபதி க்குப் பொருந்தலாகாத் துர்க்குணங்களாம். இவ்விரண்டு மிலனாகில் அவன் சிறந்த நியாயாதிபதியேயாவான். மேலே, விசேஷணபதமாகச் சொல்லிய "உறுதியான" என்பது பிற்கூறிய துர்க்குணங்கள் இரண்டுமிலான் என்பதைத் தெரிவிப்பதோடு தெளிவு முதலிய பின்னும் சில நற்குண ங்களையும் உடையான் எனவும் வெளிப்படுத்திக் காட்டுவ தால்தான் நமது டயாப்ஜியை யாரும் "உறுதியான" நியா யாதிபதி யென்று சொல்லிப் புகழ்ந்து வந்தார்கள். இத னினும் ஒருவன் அடையவேண்டிய புகழ்தான் வேறு யாது?

மாட்சிமை தங்கிய உயர்ந்த நீதியதிபதியின் ஸ்தா னத்தை வகித்தவரான காலஞ்சென்ற நம் பட்ருடீன் டயாப்ஜியானவர் மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமலும், பக்ஷபாதமில்லாமலும் ஸாமர்த்தியமாய்த் தம்மிடம் வரும் வழக்குக்களையெல்லாம் தீர விசாரித்து முடிவு செய்து வந்

தார். இதனால் கக்ஷிக்காரர்களும் நியாயவாதிகளும் இவரைப் பெரிதும் பாராட்டி வந்தார்கள். வழக்குக்களின் உண்மையைக் கண்டுபிடிக்க வல்ல மதிநுட்பமும், மிகச் சிக்கலான பலதிறப்பட்ட சட்டங்களின் கருத்தை யின்னதென வரையறுத்து நொடிப் பொழுதில் நிஷ்கர்ஷிக்கும் புத்தி சாதுர்யமும் சொல்லுந் தரத்தனவல்ல.

நியாய வாதியாக விருந்தகாலத்தில், குறுக்கு விசாரணை (Cross Examination) செய்வதில் இவர் மிகவும் பெயர் போனவர். விஷயங்களை இதற்குப்பின் இன்னது என வரிசையாய்க் கோவை செய்துகொண்டு, நல்ல வார்த்தைகளால் மிக அமரிக்கையாயும், அழகாயும், இனிமையாயும் சொல்லித் தம் அபிப்பிராயத்தை எவ்வளவு படபடப்புள்ள நியாயாதிபதியும் அசைக்க முடியாதபடி நாட்டுவதில் இவர் மிகவும் வல்லவரா யிருந்தார்.

நியாயாதிபதியான நிலைமையிலும் இவர் மிகத் திறமையும், எதையும் எளிதாக விரைவில் அறியும் தீவிர புத்தியும் வாய்ந்தவராகவே விளங்கினர். பிற்காலம், சரீரபலம் குன்றிய காலத்தும், இவர் உயிரைக் கைப்பிடித்துக் கொண்டு நீதி சிறிதுங் குன்றாதபடி தமது வேலையைப் பார்த்துவந்த அழகு யாரும் வியக்கக் கூடியதே. "தோல் வற்றிச்சாயினும் சான்றாண்மை குன்றாமல்" ஒழுகவேண்டுமென்னும் பிடிவாத குணம் இவருக்குக் கடைநாள்வரையிலும் நீங்காமலிருந்தது.

நியாய வாதிகள்மாட்டு அதிக ஆதரமுடையவர் என்பது மெய்யே; எனினும் நமது டயாப்ஜி எவ்வளவு பெரிய நியாயவாதி வந்து வாதிக்கினும் அவர்களுக்காக வென்று தம் கொள்கையை நழுவவிடுமவ ரல்லர்; முடிவாக இவர் கொள்ளும் தீர்மானமும், தாம் தீர்மானிக்கப்புகுந்த

விஷயத்தைத் தாமாக நன்ருகப் படித்துப் பரியாலோசித் துக்கொண்ட தீர்மானமாகத்தான் இருக்குமே யன்றி வேருக இராது.

எவரானுலும் இவர்க்குமுன் வாதிக்க வருகிற நியாய வாதிகள், எவ்வளவு பெரிதானுலும் ஒரு ஆதாரத்தைக் காட்டிச் சமாதானப்படுத்த இயலாது. அவ்வாதாரத் தின் மூலகாரணம் இன்னதென்பதைத் தாம் முதலில் விசாரித்து அவ்வாறே யாராய்ச்சி செய்யும்படி நியாய வாதியையும் நிர்ப்பந்தப் படுத்துவார். இவ்வழக்கம் ஸர். டி. முத்துஸாமி ஐயர் அவர்களிடத்திலு மிருந்ததென்று சொல்வது வழக்கம். யாரோ சிலர் இவ்விதம் நியாய ஸபையிலிருந்துகொண்டு சட்டத்தின் மூலகாரணத்தை விவரிக்கச் சொல்வதேன் என்று ஐயரவர்களைக் கேட்ட பொழுது அவர்கள், "சட்டமென்பது சாஸ்திரத்தைத் தவிர வேறென்ன! ஆகையால் சட்டசம்பந்தமான ஒவ் வொரு விஷயத்தையும் ஒரு சாஸ்திரஞ்ஞனுகவே யிருந்து கொண்டு தர்க்கிக்கவேண்டும்." என்று சொன்னதாகக் கேள்வி.

இவர் நியாய ஸபையில் சிங்கம்போலக் கம்பீரமாக வீற்றிருந்ததனுல் பம்பாய் ஹைகோர்ட்டுக்கு எவ்வளவோ பலமுண்டாகக் காரணமாயிருந்தது; சமீபகாலத்தில் இப் புருஷசிரேஷ்டர் இங்கிலாந்தில் காலஞ்சென்றதனுலாகிய துக்கம் இவரது நண்பர்களாலும், சட்டவித்யாபாரங்க தர்களாலும், முக்கியமாய் நம் நாட்டிலுள்ள நல்ல குடி களாலும் ஒருபோதும் மறக்கக் கூடியதன்று.

இந்தப் பெருந்தன்மை வாய்ந்த புருஷர் நியாயாதி பதியாக இருந்து இறையும் நீதி தவருமல் ஆஞ்ஞை செலுத்தினுர் என்பதனுல்தான் பிரஸித்தராக விளங்கினு ரென்று சொல்லவொண்ணுது. இளமை முதற்கொண்டே

இவர் நம் தேசத்தவரது நன்மையை நாடிய ஒவ்வொரு விஷயங்களிலும் மிகுந்த கவலேயும் கவனமுமுடையவராக இருந்து வந்தார். அரசாங்கத்தாரும், பொது ஜனங்களும் இவரை இணையிலா மதியூகி யென்றே மதித்து வந்தார்கள். மேலும், இவர், இத்தேசத்துப் பற்பல இடங்களிலுமுள்ள தம் மதத்தினர்களால் பெரிதும் மரியாதையுடன் பாராட்டப்பெற்று வந்ததோடு, பம்பாயிலுள்ள கோஜா வகுப்பினர்களுக்கு இவர் தலைவராகவு மிருந்து வந்தார். இவர் கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தராக இருந்தும், இவர் தமது வாழ்நாள் இறுதிவரையிலும் தம் ஜாதியாரது கல்வி யபிவிர்த்தி விஷயமாகவும், ஆசாரச் சீர்திருத்த விஷயமாகவும் மிகுந்த சிரத்தையுடையவராய் வேண்டிய முயற்சிகளையெல்லாம் காலமறிந்து செய்து கொண்டே வந்தார். பம்பாயில் அஞ்சுமான் இஸ்லாம் நிலைபெற முதன்முதலாய் ஸ்தாபித்தவர் இவரே. இவர் மேற்சொன்ன அஞ்சுமான் இஸ்லாத்தின் காரியதரிசியாகப் பலநாளிருந்து பின் அக்கிராசனாதிபதியாகவு மிருந்து விளைவித்த நன்மைகள் அளவிடற்கரியவாம். இவருடைய ஆதரவும், அபிமானமும், ஊக்கத்தோடுகூடிய உழைப்பும், இவர் ஜாதியாருக்காக இவர் புரிந்த நன்மையும் என்றைக்குமே மறக்கத்தக்கனவல்ல.

மேல்நாட்டவரது அறிவு விளக்கத்தை இவர் தம் மதத்தினர் சமூகத்தில் பெரிதும் பரவச் செய்ததுமன்றி, முக்கியமாய்த் தம் குடும்பத்தார்களையெல்லாம் மேல்நாட்டவரது மாதிரியை யனுசரித்துப் படிக்கும்படி செய்து, படித்துள்ள மகம்மதியர்களு ளெல்லாரையும்விட வெகு தூரம் முன்னுக்கு வரும்படியாகவும் ஏற்பாடு செய்தார்.

ஸ்ரீமான்களாகிய ஜஸ்டிஸ் டிலாங்க், பி. எம். மேதா என்னும் இவ்விரண்டு மேதாவிகளோடும் இளமை முதற்

கொண்டே இவர்க்கு நெருங்கிய நேசம் ஏற்பட்டதானது இவரை இராஜ்ய தந்திரங்களில் ஆராய்ச்சி செய்யும்படி திருப்புதற்குக் காரணமாயிருந்தது. பம்பாய் ராஜதானியில் இவர் செய்த நற்காரியங்களையெல்லாம் சிந்தித்து, இவரது திறமையை வெகுவாகக்கொண்டாடி, அப்போது கவர்னராயிருந்த மாட்சிமை தங்கிய ஸர். ஜேம்ஸ் வெர்கஸ்ஸன் என்பவர் டயாப்ஜியை பம்பாய் சட்ட நிரூபண சபையில் அங்கத்தினராக நியமித்தார். பட்ருடீன் டயாப்ஜியும் அச்சபையின் அங்கத்தினராகவிருந்து வேண்டிய உபகாரங்களை யெல்லாம் செய்யலானார். முக்கியமாய் முனிஸிபல் விஷயங்களில், தாம் அவ்விஷயங்களின்மர்மங்களை நன்றுணர்ந்தவராகையால், பலவிதமான உதவிகளைச் செய்தார். இவர் சட்ட நிரூபண சபையிற் செய்த பிரசங்கங்களெல்லாம் "கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்-வேட்ப மொழிவதாம் சொல்" என்றபடி பிறரெவரும் முன்மாதிரியாகக் கொண்டு கற்கும்படியாகச் சிறந்து ஆழ்ந்த கருத்துள்ளவையாய், அழகிய இனிய பாஷா நடையில் அமைந்துள்ளவையாயிருந்தன. இவர் சொல்வன்மைக்கு ஈடுபட்ட அச்சபையின் அக்கிராசனாதிபதியாகிய ஸர் ஜேம்ஸ் வெர்கஸ்ஸன் என்பவரும் பட்ருடீனை யுள்ளன்போடு சிலாகித்து "ஹவுஸ் ஆப் காமன்ஸ் மகா சபையில் இவர் பிரசங்கம் புரிவாராயின் யாரும் மிகக் கவனமாய் இவர் வாயைப்பார்த்து நிற்பார்கள்" என்று ஒரு சமயம் பாராட்டி யுரைத்தார்கள்.

இந்தியன் நாஷனல் காங்கிரஸ் ஏற்பட்ட 1885-ம் வருஷ முதற்கொண்டே நம் பட்ருடீன் டயாப்ஜியும் அம்மகாசபையின் கார்யங்களில் முக்கியமானவராய் நிர்வாகஞ் செய்துவந்தார். 1887-ம௵ சென்னைமாநகரிற் கூடிய மூன்றாது காங்கிரஸுக்கு இவர்தாம் அக்கிராசனத்தை

வகித்துக்கொண்டார். அக்காலே யிவர் சபாநாயகராக விருந்து செய்த பிரசங்கத்திற்கு மற்றெந்தப் பிரசங்கமும் நிகரில்லே. சொல்வன்மையும் விழுமிய பொருளுமுள்ள தாய்க் கடன்மடை திறந்ததுபோலக் கம்பீரமாக இவர் புரிந்த மஹாபிரஸங்கம் காங்கிரஸ் சரித்திரத்தில் ஒரு பகுதியாம்படி யாவரும் கொண்டாடிக் குதூகலிக்கத் தக்க தாயிருந்தது. இருபது வருஷத்திற்குமுன் உபந்நியசிக் கப்பட்டதாயினும் அம்மகோபந்நியாசம் தற்காலம் கேட் பதற்கும் தகுதியாயிருக்கின்றது. இவர், தாம் பொன் றுந்துணையும் காங்கிரஸில் மிக்க ஊற்றமுள்ளவராகவே யிருந்துவந்தார்.

ஜஸ்டிஸ் பட்ருடீன் உண்மையான மகமதியராய் மிக அடக்கமாகவே தம் வாழ்நாளைச் செலுத்தி வந்தார். தினப்பிரதி யிவர் கடவுளை யைந்துமுறை தொழுவதில் சிறிதும் தவறினவரல்லர். மேலும், இவர் தங்கள் ஜாதி யாருக்கு உரித்தான அரபியர் உடையையல்லாமல் வேறு விதமான உடையை யணிந்தறியார். நீண்டு தொங்கு கின்ற சட்டையும் தலைப்பாகையுந்தான் இவருக்கு உடை. வீட்டிலிருக்கும் போதும், வெளியே போகும்போதும், நியாயஸ்தலம், விருந்து முதலியவற்றிற்குப் போகும் போதும் இதேமாதிரியான உடையோடுதான் இருப்பார். இவர் பம்பாயிலுள்ள எல்லா ஜாதியார்களாலும் கண் போலப் பாவிக்கப்பட்டு வந்தார். இவர் செய்த தர்மங் களோவெனில் அவை யெல்லையற்றனவாகும். ஜனங்க ளோடு இவரவ்வளவு பக்ஷமாயும் மரியாதையாயும் பழகி வந்தவர்கள் வேறு எவருமிலர் என்னலாம்.

பெண் கல்வியை யபிவிர்த்தியடையச் செய்யவேண்டு மென்ற நன்னோக்கம் இவருக்குப் பெரிதுமுண்டு. ஆனது பற்றிப் பெண்பாலிகா பாடசாலே பலவற்றை ஸ்தாபிக்க

இவர் பெருந்துணையாயிருந்து கைகொடுத்து வந்தார். பெண் கல்வி சம்பந்தமான விஷயங்களில், மேன்மை பொருந்திய ஜஸ்டிஸ் பட்ருடீன் டயாப்ஜி யாரது குடும்பத்தைப்போலப் பம்பாயிலுள்ள மற்றெந்த மகமதிய குடும்பமும் அவ்வளவு அதிகமாக அபிவிர்த்தி யடையவில்லை. ஜாதி யாசார விஷயமாக இவர் பேசிய உபந்நியாசங்களொன்றிலாவது மகம்மதியர்களுக்குள் வழங்கும் கோஷா வழக்கத்தைப்பற்றிக் கண்டித்துப் பேசாமலிருந்ததில்லை. "கற்றுப் பிறர்க்குரைத்துத் தாம் நில்லார் வாய்படூஉம்-வெற்றுரை" யாக இவர் வார்த்தை யொருபோது மிராது. பேசுவதெதுவோ அதுவே இவரனுஷ்டானமாகவு மிருக்கும். சிலரைப்போலச் சொல்லொன்று செயலொன்றாக வேறுபடமாட்டார். தாம் முதலில் அனுஷ்டித்துக் காட்டித் தம் குடும்பத்தாரையும் யனுஷ்டிக்கச்செய்து, பிறகு தான் அவ்விதம் பிறரையும் அனுஷ்டிக்க வேண்டுமென மன்றாடுவார்.

கீழ்த்தரமான வாழ்க்கைக்கே தகுதியானவர்களும், ஜாதி மத பேதங்களை யதிகமாகப் பாராட்டி யுயிர்வாழ்க்கையைப்பற்றிப் புல்லிய அபிப்பிராயமே கொண்டவர்களுமான நமக்கு, இத்தகைய விவேகிகளையில்லாமல் ஒரு காரியமும் கைகூடாது; எத்தகையர்?—தாம் பிறந்ததும் தழுவியதுமான மதத்தில் பூர்ணமான விசுவாசமுடையவராயிருந்துகொண்டே அற்பமான வீண் தப்பபிப்பிராயங்களையெல்லாம் சாராமல் விலக்கி, விசாலமான நோக்கமும் தாராளமானமனமுமுடையராய், மெய்யன்புடைய மகமதியபக்தராகவே யாவரும் வியக்க நடந்து, தமது சிரேஷ்டமான கொள்கையாலும், அனுஷ்டானத்தாலும் நம்மைச் சீர்திருந்தக் கற்பித்துவந்த — இத்தகைய — பட்ருடீன் டயாப்ஜியைப் போன்றவர்களே. உறுதியான கொள்

கையும், யாரையும் ஒப்ப நோக்கும் நடுவுநிலைமையும், தக்கன இவை, தகாதன இவையெனப் பகுத்தறிந்து கொள்ளும் மதியுடைமையும், நமது தேசம் நாளுக்குநாள் பலவிதத்தாலும் மாறுபட்டு க்ஷீணித்து வருகின்ற இக்காலத்தில் இந்நிலைமைக்குத் தக்கவாறு எப்படியெப்படி என்னென்ன செய்யக் கடமைபூண்டுள்ளோ மென்பதை யறிந்து தம் கடமையைச் செலுத்தும் பெருந்திறலாண்மையும் வாய்ந்த நமது பட்ருடீன் டயாப்ஜியை நாம் இச்சமயத்திலிழக்க நேர்ந்தது நமது இந்தியாவுக்கே ஒரு பெரிய தெளர்ப்பாக்கியமாம்.

எல்லாவிதத்தாலும் ஏற்கனவே மெலிந்திருக்கும் நமக்கு இத்தகைய தெளர்ப்பாக்கியம் தோன்றுமலிருக்கும் வண்ணம் நமது தலைவர்களுள் முதன்மையரான ஸர் பேரோஸ்ஷா மேதா போன்ற சிறந்த தேசாபிமானிகளாவது எப்போதும் நம்மைவிட்டு நீங்காம லிருந்துகொண்டு நமக்கு வேண்டிய நன்மைகளைச் செய்துவரும்படி சர்வேசுவரனை பரம்பொருள் அருள்புரிவாராக.

பி. ஆர். கிருஷ்ணமாசாரியர்.



பழிக்குப்பழி.

முன்னமேயே குருநாதன் என்ற ஒரு சேவகன் என்னிடம் இருந்ததாகச் சொல்லவில்லையா. அவன் நான் வீட்டையின்று அடைந்ததும் என் முகத்தை யுற்றுப் பார்த்தான். என்ன எண்ணினனே தெரியவில்லை. இக்காலத்தில் யோக்கியனான சேவகன் கிடைப்பது மிகவும் அருமையல்லவா. இக்குருநாதனே யோக்கியதையே உருவெடுத்து வந்தவன். மேலும் அயலாருடைய விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ள இச்சைப்படாத மனிதன் கிடையாது. எந்தச் சேவகனயினும் அவன் சம்பளத்திற்குமேல் இரண்டு பங்கு லஞ்சமாக அடிக்கடி இனும் என்ற பெயருடன் கொடுத்தால் மிகுந்த யோக்கியனாக இருப்பான். சூடுள்ள 'காபி' கொணர்ந்து குருநாதன் எனக்குக் கொடுத்தான். எனக்கு அக்காலத்தில் வேண்டியதை ஆராய்ந்து கொண்டு வந்து கொடுத்த அவன் புத்திசாலித்தனத்தை மெய்ச்சினேன். என் படுக்கையிற் படுத்துச்சிறிது புரண்டேன். தூக்கம் வரவில்லை.

நான் ஒரு மணமகன். ஆம். என் மனைவியையே மணக்கப் போகும் மணமகன். இரண்டாம் விசை அதே பெண்ணை மணக்க நிச்சயம் செய்திருக்கிறேன். முன்னிருந்த காதலுக்கும் இப்பொழுதுள்ள காதலுக்கும் எவ்வளவு வித்தியாசம்? என்னிலும் மூடர்கள் யார் இருக்கிறார்கள்? என்னுடைய பழிக்குப்பழி வாங்க ஏற்பாடுகளனைத்தும் செய்து முடிவாயிற்று. கப்பல் துறையை

நோக்கி வருவதைத் தூரதிருஷ்டி கண்ணாடியில் பார்ப்பவரை யொப்ப என் எற்பாட்டின் கடைசியை என் எண்ணத்தால் பார்த்தேன். முடிவையடைய யாதொரு இடையூறும் வராது என்பது திண்ணம். இயற்கையே என் செயலுக்கு உபகாரம் செய்வது போலத் தோன்றியது. ஒரு காரியத்தைச் செய்து முடிப்பதாக உறுதியாகத் தீர்மானம் செய்துகொண்டால் எவ்வித இடையூறும் தானாகவே நீங்கிக்கொள்ளும். முதலில் யான் மனைவியாலும் சினேகனாலும் எமாற்றப்பட்டேன். இப்பொழுது அவர்களிருவரையும் என் அகங்கையில் வைத்திருக்கிறேன். இனிச் சேர்த்து நொறுக்கி எறியவேண்டியது தான். சீக்கிரத்தில் செய்து முடித்துவிடுகிறேன்.

அத்தியாயம் XII.

மறுநாட்காலையில் எழுந்ததும் குருநாதன் மதுரையினின்றும் வந்த ஒரு கடிதத்தை என்னிடம் கொணர்ந்து கொடுத்தான். உடனே அதனைப் பிரித்துப் பார்த்தேன்.

என் பிரியமுள்ள சினேக,

இக்கடிதத்தின் வெளியேயிருக்கும் சிறிய கரிக்கோட்டினால் நான் சொல்லப்போகும் நல்ல சமாசாரத்தை நீரே ஊகித்துக் கொள்வீர். கடைசியாக என் சிறிய தகப்பனார் இறந்தார். சனி ஒழிந்தது. நான் அவர் சொத்துக்கள் முழுமைக்கும் உடையவனாயினேன். யான் எதேச்சையாக இருக்கலாம். இப்பொழுது ஸ்ரீரங்கத்தை நோக்கி வரலாம். நாளைக்கு அல்லது நாளன்றைக்குப் புறப்பட்டு வருகிறேன். இன்றைக்கு வருவேன் என்பதை மாத்திரம் ஹேமாங்கினிக்குத் தெரிவிக்காதேயும். அவள் தனிமையை எவ்வாறு கழிக்கின்றாளோ ? என்னைத் திடீரென்று காண்பதனால் அவள் முகத்திலுண்டாகும் அழகிய ஆச்சரியப்பார்வையை யான் காணவேண்டும். அவள் அடிக்கடி எனக்கு எழுதிய கடிதங்களில் மிகுந்த காதலுள்ளவளாகத் தெரிவித்திருக்கிறாள். இப்பொழுது நான் செல்வவந்தனாக இருப்பதனால் யாதொரு தடையுமின்றி என்னை மணந்துகொள்வாள். நான் திரும்பி வந்ததும் தங்களிடம் யான் கடமைப்பட்டதைத் தீர்த்துக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு
சந்திரவதனன்.

இது தான் அவன் கடிதம். மறுபடியும் மறுபடியும் அதை வாசித்தேன். அதிற்கண்ட சில வார்த்தைகள் என்னை எரியிலிட்டன. "அவள் அடிக்கடி எனக்கு எழுதிய கடிதங்களில் மிகுந்த காதலுள்ளவளாகத் தெரிவித்திருக்கிறாள்." ஏ! புத்தியற்றமோசக்காரி! இப்பொழுது என்னை ஏமாற்ற நினைத்து நீயே ஏமாந்தாய். தன் செய்கைகளைப்பற்றிச் சிறிதேனும் சந்தேகிக்காத வண்ணம் அவனுக்கு அடிக்கடி கடிதம் எழுதினாய்! ஆம். இனிய கடிதங்கள். உன்னிடம் உண்மையாக இருப்பதாகவா இனிய வார்த்தைகளால் எழுதியிருக்கின்றாள். என்னை மணப்பதாகச் சொல்லிக்கொண்டே அவனுக்குக் கடிதம் எழுதினாள்.

"நான் திரும்பிவந்ததும் தங்களிடம் யான் கடமைப்பட்டதைத் தீர்த்துக்கொள்ளுகிறேன்." ஆம்-அப்படியே தீர்த்துக்கொள்ளலாம். யானே தீர்த்துவிடுகிறேன். சீக்கிரத்திலேயே ஒழித்துவிடுகிறேன். கடைசியாகப் பின்வரும் கடிதத்தை எழுதினேன்.

பிரிய நண்பா!

உன்னுடைய நல்லதிர்ஷ்டத்தைக் கேட்டுச் சந்தோஷமடைகிறேன். இவ்விடம் சீக்கிரம்வந்து எல்லோரையும் சந்தோஷிப்பிப்பாய் என்பதைப்பற்றி மிகுதியும் இன்பமடைகிறேன். ஹேமாங்கினியைச் சந்தோஷமடைவிக்கும்படி செய்யும் உபாயம் மிகவும் நல்லது. ஆனால் உண்மையான நேசம் என்னிடம் இருக்குமானால் நேராக யான் செய்யும் விருந்திற்கு வரவேண்டும். என் வண்டியை 'ரெயிலுக்கு' அனுப்புகிறேன். விருந்துண்டபிறகு ஹேமாங்கினியைப் பார்க்கலாம். இது என்விருப்பம். இந்தவிருப்பத்திற்கு நீ இணங்கவேண்டும். உடனே ஒரு தந்திகொடு.

இப்படிக்கு
புருஷோத்தமன்.

அவன் வருவதற்கு மூன்றுதினங்கள்தாமிருக்கின்றன. என் மனைவியை யான் பார்க்கவேண்டும். பிறகு அவள் காதல் என்மீது எம்மட்டிலிருக்கிறது என்று யோசித்தேன். அடிக்கடி அவளைப் பார்த்தேன். சில சமயங்களில் பிரியமும், சில சமயங்களில் வெட்கமும், வேறு சில சமயங்களில் என்மீது காமமுங்கொண்டவள்

போலவும் தோன்றினுள். சில சமயங்களில் விஷங்கொண்ட பாம்பின் தலையை நசுக்குவதுபோல இவளைக் கொலைசெய்ய எண்ணுவேன்—உடனே அப்படிக் கொன்றால் இரக்கமுள்ள கொலையாய் விடும் என்னும் எண்ணத்தினால் சும்மாவிருப்பேன். அடிக்கடி மிகவும் விலையுயர்ந்த வஸ்துக்களைக் கொடுத்து அவளை மயக்கிவந்தேன். அவள் அவைகளைத் தான் அடையவேண்டியது மிகவும் நேர்மையென்று எண்ணிக்கொள்வாள்.

அதனால் எனக்கென்ன? இந்தப் பொருள்களினால் நான் என்ன அடையப் போகிறேன்? என் முக்கியமான கருத்தை நிறைவேற்றிக்கொள்ள இவைகளை எல்லாம் உபயோகப்படுத்தவேண்டியது. அவள் தீய குணம்-கெட்ட நடவடிக்கை நல்ல எண்ணத்தினால் மூடப்பட்டிருக்கிறது—நாளுக்கு நாள் அவளிடம் எனக்கு அவமரியாதை யுண்டாயிற்று. நான் முன் எப்படி இத்தீய பாம்பை நேசித்தேன் என்பது எனக்கு ஆச்சரியமாக விருந்தது. ஆம். உண்மையாக அவள் அழகாகவிருக்கிறாள்—அனேக விலைமாதர்களைப்போல அழகாகவிருக்கிறாள். ஆனால் அவர்களும் இவளைப் போலத் தீய எண்ணத்தினரல்லர். வெறும் அழகு பணங்கொண்டு புஷ்பத்தைப்போல வாங்கலாம்—ஆனால் உண்மையான எண்ணமும், புத்திசாலித்தனமும் தெய்வத்தன்மையுமுள்ள பெண்ணை—விலையில்லாத மாணிக்கத்துக்குச் சமானமானவரை—அடைவது மிகவும் அசாத்தியம். அழகு அழியும்படியானதேயாயினும் நம்மைப்போன்றவரை வலையிற்படுக்கின்றது. நானும் இப்பொழுது வெறுக்கும் அவளை—முகத்தைக் கண்டதும் ஒருவகைக் காமங்கொள்கின்றேன். ஒரு அழகிய ஸ்திரீ தன் கையால் நம் கன்னத்தைத் தட்டினதும் என்ன பாடு படுகிறோம்—அவளை ஒரு முத்தங்கொள்ள நம் உயிரையே கொடுக்கிறோம்.

அன்றையதினம் ஹேமாங்கினியைப் பார்க்கப்போனேன். வழக்கப்படி அனேக விலையுயர்ந்த நகைகளைக் கொண்டுபோய்க் கொடுத்தேன். பட்டு மெத்தை தைக்கப்பட்ட நாற்காலியின் மீது உட்கார்ந்து ஸ்ரீ வாணீ விலாஸினீயை வாசித்துக் கொண்டிருந்தாள். நான் சென்றதும் மிகுந்த மரியாதையுடன் என்னை எதிர்கொண்டழைத்தாள்.

"உன்னுடன் இரகசியமான சில சங்கதிகள் பேசவேண்டும். பேசலாமோ?" என்றேன்.

அவள் மெல்லென நகைத்து என் கரங்களைப்பற்றி நாற்காலி யின் மீது உட்காரச் செய்து "என்ன விசேஷம்? சொல்லுங்கள்." என்றாள்.

"சந்திரவதனனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது."

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் அவள் சிறிது திகைத்து நின்றாள். பிறகு "அதைப்பற்றி எனக்கென்ன?" என்று அலக்ஷிய மாய்ச் சொன்னாள். "அவன் இரண்டு மூன்று தினத்தில் வரப் போகிறானாம். அவன் வந்ததும் நீ மிகவும் சந்தோஷப்படுவையாம்."

ஹேமாங்கினியின் முகம் வெளுத்தது. வருத்தமுடையவள் போலத் தோன்றினாள். அதையுணர்ந்த யான் "பெண்மணி! அவ னால் ஏதேனும் உனக்குத் துன்பம் நேரிடுமென்று எதிர் பார்ப்பா யானால் உன் சினேகிதர் வீட்டிற் சிலகாலம் தங்கியிருக்கும்படி யான் வேண்டுகிறேன். அவன் தாபமும் கோபமும் நீங்கியபின் இவ்விடம் வரலாம்" என்று சொன்னேன்.

"ஆயின் நீங்கள் சொல்லியவண்ணம் செய்கிறேன். சந்திர வதனன் மிகவும் துஷ்டன்; வாய்க்கு வந்தனவற்றை வரையறை யின்றிச் சொல்லுவான். நம்மிருவர் நட்பின் விஷயத்தை யுணர்ந் தானாயின் தங்களையும் அவமரியாதையாகப் பேசுவான் என்று தோன்றுகிறது."

"என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாம். அவன் கோபத்தை யான் பாராட்டமாட்டேன். உன்னைப் போன்ற பெண்மணியின் காதலை யிழப்பதென்றால் மனவருத்த மிருக்குமல்லவா. ஐயோ பாவம். மேலும் உன்னிடத்திலிருந்தும் அவனுக்குக் கடிதங்கள் கிடைத்ததாகத் தெரிவித்திருக்கிறான்."

"ஆம் என் சொத்தின் விஷயமாக இரண்டு மூன்று தரம் கடி தம் எழுதவேண்டியிருந்தது. அதைப்பற்றி ஏதேனும் தங்களிடம் தெரிவித்திருப்பான்."

அவள் சொல்வதைக் கவனியாதவன்போல "ஆயின் இங்கு இருக்கிறாயா? பின்னர் எங்கேனும் போய்த் தங்கியிருக்கிறாயா?"

"நான் அருகிலுள்ள ஒரு கிராமத்தில் இருந்து சில தினங்க ளைக் கழிக்கிறேன். இறைவனைத் துதிசெய்து காலத்தைக் கழிக் கிறேன்."

"அப்படிச் செய்வதுதான் நல்லது. இன்னும் சிலதினத்தில் நாம் என்ன ஸ்திதியிலிருப்போமோ? இருப்போமோ? இறப்போமோ? சந்திரவதனனைப்பற்றி நீ ஒரு சிறிதும் இனிக்கவலைப்படவேண்டாம்."

"அப்படியல்ல, அவன் மிகவும் தொந்தரைசெய்வான்; வெகு துஷ்டன்."

"அவன் வாயை மூடச்செய்ய எனக்குத் தெரியும். நீ அவன் காதலுக்கு இடங்கொடுக்காமலிருந்தாயே யாமானல் அவன் வருத்தப்படவேண்டியதற்கு இடமேயில்லை."

"ஆம் உண்மைதான். என்னவோ அவனிடம் எனக்குப் பயமாயிருக்கிறது."

"ஆயின் உடனே இவ்விடத்தைவிட்டுச் செல்."

"அப்படியே யான் முசிரிக்குப்போகிறேன்."

"இறந்த உன் கணவன் ஆத்மா சுகமடையும்வண்ணம் இறைவனைத் துதிசெய்துகொண்டு காலத்தைக்கழி. இன்னும் ஐந்து அல்லது ஆறுதினங்களில் உன்னைக்காண வந்துசேருகிறேன். அப்படியே போய்வா."

"பிரியும் சமயத்தில் ஒரு முத்தம் கிடையாதா?"

ஒரு க்ஷணகாலம் ஒன்றும் செய்யத்தோன்ருமல் நின்றேன். இன்னது செய்தேன் என்று எனக்குத்தெரியாது. அவளை மிகவும் ஆவலுடன் (கோபத்துடன்) கட்டினேன். அவள் அதரத்திலும் கன்னத்திலும் நெற்றியிலும் முத்தங்கொண்டேன். உடனே தீய ஜந்துவைக் கட்டிக்கொண்டதாகத் தோன்றியது. கைகளினுல் சிறிது அவசரமாகத் தள்ளினேன். சிறிது வருத்தத்துடன் கீழே விழாமல் நாற்காலியின்மீது உட்கார்ந்தாள். என்னை யானே நொந்துகொண்டேன். என் புத்தியற்றதன்மையை யிகழ்ந்துகொண்டேன்.

"என்னை மன்னிக்கவேண்டும்."

"நீங்கள் ஒன்றும் சொல்லவேண்டாம்?" என்று சிரித்தாள். அச்சிரிப்பு என் கழுத்தைச் சுற்றிக்கொண்டு அறுப்பதுபோலத் தோன்றியது. சந்திரவதனனுடன் அன்று சாயந்திரம் கொஞ்சிக்

குலாவுகையில் சிரித்த சிரிப்பைப்போல என் உயிரையறுத்தது. இத்தகைய சிரிப்பைக் கேட்டதும் யான் பைத்தியக்காரனுகிறேன்.

"இனி அம்மாதிரி சிரிக்காதே. அது என்னால் சகிக்கமுடிய வில்லை. ஏனென்றால் யான் சிறுவனுயிருக்கையில் ஒரு பெண்ணைக் காதலித்திருந்தேன். அவள் உன்னைப்போன்றவளல்லள். அவள் எனக்கு உண்மையாகவில்லை. பொய்யே உருவெடுத்தவள். ஒரு விஷயத்திலும் உண்மையான உன்னைப்போன்றவளல்லள். ஆனால் என்னைக்கண்டு அவள் சிரிப்பது வழக்கம். என் உயிரையே மிதித் துப் பாழாக்கினுள்—என் மனத்தைப் பிளந்துவிட்டாள். அவைக ளெல்லாம் இப்பொழுது ஒழிந்தன. அவளைப்பற்றி யான் நினைப் பதேயில்லை. உன் சிரிப்பு அந்த ஞாபகத்தை யுண்டுபண்ணுகிறது என்னவோ சொன்னேன், என்னை மன்னிக்கவேண்டும். நீ புறப் படுவதற்கு நாழியாகிறது. உடனே சேர்ந்ததும் கடிதம் எழுது."

என் கைகளை அவள் தோள்களில் வைத்தேன். அவளை யாழ்த்துகிறதாக எண்ணுகின்றீர்களோ? என் சாபங்களையெல்லாம் அவளைத் தொடரும்படி வரங்கொடுத்தேன். இனி அவள் முன் இருந்தால் ஏதேனும் தீங்கியற்றுவேன் என்று நினைத்து உடனே என் வீட்டை நோக்கிச் சென்றேன்

வீட்டையடைந்ததும் எனக்குத் தூக்கம் வரவில்லை. ஒரு பெட்டியைத்திறந்து அங்கு வைத்திருந்த ஒரு கைத்துப்பாக்கியை எடுத்தேன். குருநாதனிடம் கொடுத்து அதைச் சீர்ப்படுத்தச் சொன்னேன். என்னத்திற்கென்று கேட்காமலே அவன் அதைத் துடைத்து மருந்துபோட்டுக் கெட்டனம் செய்து உபயோகிக்க ஆயத்தப்படுத்தி வைத்தான்.

மறுநாள் காலையில் ஹேமாங்கினியிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது, சவுக்கியமாய்ப்போய்ச் சேர்ந்ததாக எழுதினுள். அக் கடிதத்தைப் பார்த்தபிறகு சுருட்டி எறிந்தேன். அன்றைய தினம் சாயந்திரம் ஒரு தந்தி கிடைத்தது; சந்திரவதனனிடமிருந்து வந்தது.

"நாளைச்சாயங்காலம் ஆறுமணிக்கு வருகிறேன். நீங்கள் விரும்பியவண்ணம் நேரே உங்கள் விருந்திற்கு வருகிறேன்." என்று எழுதியிருந்தது. இன்னும்வரும்.

சருக்கை: இராமசாமி ஐயங்கார்.



சென்றமாதத்தில் W. C. பானர்ஜி காலஞ்சென்றதால் இந்தியாவுக் குண்டான துர்ப்பாக்கியத்திற்குச் சமமாக வேறொன்றையும் சொல்வது பொருந்தாது. சில காலமாகவே இவருக்கு உடம்பு அஸௌக்கியமாக இருந்து வந்தது எல்லோருக்கும் தெரிந்திருந்தபோதிலும் இவருடைய முடிவுச் செய்தியானது ஏதோ இடி விழுந்தாற்போல் முன்னெச்சரிக்கையின்றித் திடீரென வந்ததாகவே தோன்றுகிறது. நமக்கெல்லாம் மேலாக இந்தியாவுக்கே சிரோரத்னம்போல விளங்கிய இந்த மஹா புருஷன் நம்முடன் இனி இல்லை என்பதை நினைக்கும்பொழுது மனத்தில் உண்டாகும் ஏக்கத்தையும், துக்காதிக்யத்தையும், எடுத்துரைப்பது ஸாத்தியமில்லை. இத்தகைய மகாநுபாவன் இவ்வுலகில் எந்தப்பாகத்திலிருந்தாலும் சரி, எந்தக் காலத்திலிருந்தாலும் சரி, இவரது மரணம் அப்பொழுதும் உலகத்திற்கே ஒரு பெருத்த நஷ்டமாயிருந்திருக்குமென்றால், நமது இந்தியாவிற்கு, அதுவும் இந்தி

யாவின் தற்காலத்திய ஸ்திதியை நோக்குமிடத்து இவர் காலஞ் சென்றதை என்னென்று சொல்வோம். எவ்வாறு இது விஷயத்தில் நாம் ஸமாதானம் செய்துகொள்வோம். இவரது மாதிருபக்தியையும் ஔதார்யத்தையும், பெருந் தன்மையையும், ஸாரள்யத்தையும், காம்பீர்யத்தையும், வாக் சாதுர்யத்தையும், தேசாபிமானத்தையும், விடா முயற்சியையும் விவரித்தோமே யானுல் ஒவ்வொன்றி ஞலுமே இவர் மஹான் என்பது நன்கு விளங்கும். இவர் வக்கீல் வேலையிலேயே மிகப் பிரஸித்தி பெற்று ஏராளமான திரவியம் ஸம்பாதித்தார். இவரது வரு வாய்க்கு ஓர் எல்லையில்லை. நமது தேசத்து வைஸ்ராய்க் குக் கூட இவரவ்வளவு வருமானம் கிடையாது. இத்தனை செல்வவந்தராயிருந்தும் இவருடைய ஔதார்ய குணத் தின் மகிமையானது இவர் இறக்கும் காலத்தில் இவ ருக்குச் சற்றேறக்குறைய $1\frac{1}{2}$-லக்ஷம் ரூபாய் ஆஸ்தி தான் மிஞ்சும்படியாகச் செய்தது. இவரிடம் வந்து யாசித்துவிட்டுத் தமது மனேபீஷ்டம் நிறைவேருமல் திரும்பினவர்க ளில்லை. "இலனென்னு மெவ்வ முரையா மை யீதல் குலனுடையான் கண்ணே யுள." என்னும் அருமைத் திருக்குறளுக்கு இவர்தாம் நல்ல நிதர்சனமாக விளங்கி வந்தார்.

வக்கீலாகமட்டும் இருந்திருந்தாலுமே இவர் அழி யாப் புகழ் அடைந்திருப்பர். எவ்விதத்திலாவது நமது இந்தியாவுக்குக் கீர்த்தியை யுண்டாக்குகின்றவர் தேசா பிமானி யென்றே நம்மால் கொண்டாடத் தக்கவரா வர். இவரோ சிறந்த வக்கீலாக இருந்ததோடுமட்டு மல்லாமல் மிகவும் ஊக்கத்தோடுகூடிய தேசாபிமானியாக வும், முன்னுலோசனையும் புத்தி வன்மையுமுள்ள தலைவ ராகவும், விடாமுயற்சியுள்ள உழைப்பாளியாகவும், தாம்

பேசும் ஒவ்வொரு பேச்சிலும், செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் தமது மனோ காம்பீர்யத்தையும் தமக்கு ஸ்வபாவமாகவுள்ள பெருந்தகைமையையும் எடுத்துக்காண்பிப்பவராகவும் இருந்தார். இவரது புத்தி சோசரத்தை யித்தகையதென வர்ணிக்க ஒண்ணாது. இவரது அபாரமான ஞாபக சக்தியையும், தெளிவுறக் கர்பிக்கும் போதனாசக்தியையும், கேட்பவர்களை வசீகரிக்கும் சொல்வன்மையையும் இன்னும் இவைபோன்ற இவரது பற்பல ஸாமர்த்தியங்களையும் என்னென்று சொல்வோம். இத்தகைய மகாபுருஷன் எத்துறையி லிறங்கியிருந்தபோதிலும் அவ்வத்துறையில் ஒப்புயர்வற்றவராகவே விளங்கியிருப்பாரென்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? இவ்வளவு வைபவத்தோடு கூடியவராயும், இனிய தோற்றமுடையவராயும், பிறர் மனத்தைக் கொள்ளை கொள்ளும்படியான தன்மையுடையவராயும் இருந்த இந்த மகானுபாவன் இத்தேசத்திலுள்ள எல்லோரினும் மேலாக விளங்கியது ஓர் ஆச்சரியமன்று. இவர் சுய அரசாட்சியுள்ள ஓர் நாட்டில் இருந்திருந்தால் அந்நாட்டுக்குப்பிரதான மந்திரிஸ்தானத்தை வகித்திருப்பார் என்பதில் தடையில்லை. இத்தேசத்திலோ நாம் இவருக்குச் செய்த வெகுமானமெல்லாங்கூடியிவரை நமது இந்தியன் நாஷனல் காங்கிரஸுக்கு இருமுறை அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்தெடுத்ததேயாம். காங்கிரஸை நடத்தும்படி முதன்முதல் ஏற்பாடு செய்தவரும் இவரே. முதன்முதல் பம்பாயில் நடந்த காங்கிரஸில் கூடியிருந்த பிரதிநிதிகளெல்லோராலும் ஒரே மனத்துடன் அக்கிராசனாதிபதி யாக்கப்பட்டவரும் இவரே. இவரும் இன்னும் இரண்டு மூன்று பேர்களுமேதாம் நமது காங்கிரஸுக்கு ஜீவாதாரம். சற்றேனும் சலிக்காமல் தமது காலத்தையும் செல்வத்தையும் காங்கிரஸுக்காகத் தத்தஞ்செய்த மகா புருஷரும் இவரே. வெளிப்படையாக எல்லோருக்குந் தெரிந்ததைக் காட்டிலும்

இவர் காங்கிரஸுக்கு உள்ளுறச் செய்த நன்மைகள் உரைக்கற்பாலனவல்ல. காங்கிரஸ் விஷயத்தைக் கிரேட் பிரிட்டனிலுள்ள ஆங்கிலேயர்களுக் கெல்லாம் தெரியச் செய்வதற்காகவே நாம் அங்கு ஏற்படுத்தி யிருக்கும் இந்தியா வென்னும் பத்திரிகைக்குக் கஷ்டம் நேர்ந்த பல சமயங்களில் லக்ஷக் கணக்காகப் பிறரறியாமல் பொருளுதவி செய்தவரும் இவரே. ஸ்வாதந்தர்யத்திற்சாகச் சண்டையிடும் பெருந்திறல்வீரனன ப்ராட்லா என்பவரை நமது தேச விஷயத்தில் சிரத்தையுடன் உழைக்கும்படி செய்து அவரைப் பம்பாயில் நடந்த நமது காங்கிரஸுக்கு அழைத்து வந்தவரும் இவரே. காங்கிரஸில் பற்பல சமயங்களில் உட்கலகம் நேரிட்டபோது அவைகளை வெளியில் ஒருவருக்குந் தெரியாம லிருக்கும்படி உள்ளேயே யடக்கிக் காரியத்தைச் சோர்வில்லாமல் நடத்தியவரும் இவரே. ஜனங்களின் அபிப்பிராயத்துக்கு விரோதமாகப் பங்காளத்தை கர்ஸன் பிரபு இரண்டாகப் பிரிவினைசெய்த போது அப்பிரிவினையை யங்கீகரியாமல் தாங்கள் ஒருவராகத்தாம் இருப்போம் என்பதைக் காட்டுவதற்காகவே அவ்வாறு பிரிக்கப்பட்ட இடத்தில் ஜனங்களால் கட்டப்படும் ஐக்கிய மந்திரத்துக்கு வேண்டிய லக்ஷக்கணக்காகப் பெறுமானமுள்ள நிலத்தைத் தானஞ்செய்த தயாநிதியும் இவரே. இவர் எப்பொழுதும் ஜனங்களுக்கு உற்சாகமும், ஊக்கமும், ஆவேசமும் உண்டாகும்படி பேச வல்லவர்; என்றாலும், இது ஸாத்தியம் இது ஸாத்தியமில்லையெனப் பகுத்தறிந்து அதற்குத் தக்கபடி நிதானித்துப் பேசி யாவரையும் அடக்கி நடத்தி வந்தவரும் இவரே. காங்கிரஸில் முக்கியமான விஷயங்களைப் பற்றியெல்லாம் தர்க்கிக்கப்படும் ஸப்ஜெக்ட்ஸ் கமிட்டி என்று சொல்லப்படும் விஷயாலோசனை சபையில் அநேக ஸமயங்களில் தாறுமாருக வாதாடிய பல முரடர்களை யடக்கி, இனி யிங்கே சண்டைதான், ஸமாதானமாவது அஸாத்தியம் என்று

தோன்றின ஸமயங்களிற்கூட ஸமாதானத்தையுண்டாக்கி காங்கிரஸ் கப்பலை ஓர் பாறையிலும் மோதாது ஓட்டிய மாலுமியும் இவரே. இத்தகைய மகாபுருஷனது மரணத்தால் இந்தியாவுக்கு நேர்ந்திருக்கும் மகத்தான நஷ்டத்தை நமது அற்பமான சொல்லால் எவ்வாறு அளவிடக்கூடும்? அதிலும் இப்பொழுது காங்கிரஸ் கப்பலானது புயலிலடிபட்டு அல்லாடித் தத்தளித்துத் தவிக்கும் தருணத்தில் இந்த மாலுமியும் கைவிட்டுவிட்டுப் போனதில் நமக்கிருக்கும் துக்கம் வாசாமகோசரமே.

❦ ❦ ❦

தந்திக் கம்பிகள் இந்த வருஷம் இந்தியா விஷயத்தில் சற்றேனும் தயாதாக்ஷிணிய மில்லாமலிருக்க வேண்டுமென்று தீர்மானஞ் செய்துகொண்டிருப்பதாகத்தோன்றுகிறது. மேலே கண்ட W. C. பானர்ஜியைப்பற்றி யெழுதிய விஷயத்தின் மை கூட இன்னும் காயவில்லை. அதற்குள்ளாக இந்தியாவின் மற்றோர் அருமைப் புதல்வராகிய பட்ருடீன் டயாப்ஜி காலஞ்சென்று விட்டதாகத் தந்தி சமாசாரங் கிடைத்திருக்கிறது. இவர் ஜாதியில் மகமதியரென்றாலும் இந்துக்களிடத்து ஸகோதரநேசம் பாராட்டிக்கொண்டு தேச நன்மைக்காக இந்துக்களும் மகமதியர்களும் எப்பொழுதும் ஒருங்கு சேர்ந்தேயுழைக்கவேண்டுமென்னும் நோக்கமுடையவர். சமயம் வாய்த்தபொழுதெல்லாம் தாமே யவ்வாறு சேர்ந்து உழைத்துக் காட்டினர். நமது காங்கிரஸ் ஸபை யேற்பட்டபொழுது அதில் இந்துக்கள் பார்ஸிகள் மகமதியர்கள் முதலிய எல்லா ஜா ஜாதியாருமே சேர்ந்து உழைக்க வேண்டுமென்று வற்புறுத்திய மகான்களுள் இவர் ஒருவர். அவ்வண்ணமே முதல் காங்கிரஸுக்கு இந்துவாகிய W. C. பானர்ஜியும், இரண்டாவது காங்கிரஸுக்கு பார்ஸியாகிய தாதாபாய் நௌரோஜியும், மூன்றாவது காங்கிரஸுக்கு மகமதியராகிய பட்ருடீன் டயாப்ஜியும் அக்கிராசனாதிபதியாகத்

தெரிந்தெடுக்கப்பட்டார்கள். சர்க்கார் உத்தியோகத்தில் உயர்ந்த பதவியாகிய பம்பாய் ஹைகோர்ட்டு ஜட்ஜாக இருந்தபோதிலும் இவர் எப்பொழுதும் காங்கிரஸுக்கு உதவி புரிந்தே வந்தார். ஒரு ஸமயத்தில் ஆனரபிள் மிஸ்டர் ஸிடல்வட் என்பவர் இவரிடம் சென்று நமது தேச விஷயமாகச் சில பொது ஸமாசாரங்களைப்பற்றி வெகு நேரம் தர்க்கித்துக் கொண்டிருந்தபொழுது இவர் திடீரென்று எழுந்திருந்து மிகவும் ஆவேசத்துடன் "எப்பொழுது இந்த உத்தியோகமாகிய சிருங்கலையைத் தொலைத் தெறிந்துவிட்டு, உங்களுடன் எல்லாம் மறுபடியும் சேர்ந்து எனது தாய் தேசத்திற்கு உழைப்பேனே. இந்த அவா என்னை மிகவும் தபிக்கிறது" என்றாராம். இவ்வெண்ணம் நிறைவேறுவதற்கு ஈசுவர ஸம்மதமில்லை. நாம் என்னசெய்யலாம். இவருடைய உருவப்படத்துடன் இவரது சரித்திரத்தை இச்சஞ்சிகையில் மற்றோரிடத்தில் பதிப்பித்திருக்கிறோம்.

❦ ❦ ❦

இன்னுமொரு தந்தி! இதென்ன விபரீதம்! இந்தியா விஷயமாக உழைக்கும் பெரியவர்களுக் கெல்லாம் இவ்வருஷம் என்ன விநாச காலமா? ஆனந்த மோகன போஸும இறந்துவிட்டா ரென்பதைக் கேட்க நமது மனம் மிகவும் தளர்கின்றது. சென்னையில் நடந்த காங்கிரஸில் அக்கிராஸனாதிபதியாக இவர் செய்த உபந்யாஸம் இன்னும் நமது செவியில் ஒலித்துக்கொண்டேயிருக்கின்றது. இவர் வெகு நாளாக உடம்பு அஸௌக்கியமாக இருந்த போதிலும் அந்த ஸ்திதியி லிருந்துகொண்டே இவர் நமது தேசத்துக்குச் செய்த நன்மைகள் பல. மிகப் பெருமை வாய்ந்த இவரது குணாதிசயங்களைக் குறித்து அடுத்த ஸஞ்சிகையில் விவரித் தெழுதுவோம். இதில் இவரது உருவப்படத்தைமட்டும் முதலிற்பதிப்பித் துள்ளோம்.

பெண்மணி.

இவ்வாறு விவாகம் நிறைவேறியதும் பெண்மணியின் புருஷன் வாஸுதேவ ஐயங்கார் தம் தகப்பனரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு நல்வேளையில் கோயன்புத்தூருக்குப் பிரயாணமானர். நெடுந்தூரமாகையால் ஒரு சட்டைவண்டி பேசி அதில் அவரும் அவரது பரிசாரகனுமாகப் புறப்பட்டுத் திருச்சிராப்பள்ளி கரூர் மார்க்கமாகப் போய் ஒன்பதாவது நாள் கோயன்புத்தூர் சேர்ந்தார்கள். ஐயங்கார் தம் வேலையை ஒப்புக்கொண்டு முன்போல் வேலைபார்த்து வந்தார். வண்டிக்காரன் திரும்புகையில் தம் தகப்பனருக்கு ஒரு கடிதமும் ஒரு பெட்டியில் சில சாமான்கள்வைத்து நன்ருகக்கட்டி முத்திரையிட்டுஅதையும் அவன்வசம் ஒப்புவித்துச் சாக்கிரதையாகத் தகப்பனரிடம் கொண்டுபோய்ச் சேர்க்கும்படிசொல்லியனுப்பினர்.அப்பெட்டிக்குள் தம் மாமனருக்குச் சேரவேண்டியதென்று விலாசம் எழுதி ஒரு சிறுபெட்டி வைத்திருந்தார். அதற்குள் மட்டுப்பால் குழாய்களிரண்டும், மஞ்சள் 4, 5 படி ஆனைமலைச் சந்தனக்சட்டை ஒன்றும், களிப்பாக்குப்பை சிறியது ஒன்றும், ஆனைமலை ஏலக்காய்ப்பை சிறியது ஒன்றும் வைத்து அப்பெட்டியை நாடாவால் நாலுபக்கமும் இறுக்கிக்கட்டி அரக்குமுத்திரை வைக்கப்பட்டிருந்தது. இவைகள் பெண்மணியின் உபயோகத்திற்கென்று அவர் உததேசித்தார். தகப்பனர் பிள்ளை எதனுப்பிவிட்டானே என்று சந்தேகப்படாமலிருக்க அனுப்பின சாமான் விவரத்தைக் கடிதத்திலெழுதியதுமல்லாமல் அதே சாமான்களையும் 5, 6 மரக்கால் சீயக்காயையும் தகப்பனருக்குப் பெரிய பெட்டியில் அதிகமாகவே போட்டு நிரப்பியிருந்தார். அந்த வண்டிக்காரனும் பெட்டியையும் கடிதத்தையும் பெண்மணியின் மாமனரிடம் திருக்குடந்தையில் சேர்ப்பித்தான்.

பெண்மணியின் மாமனர் மறுநாட் காலையில் ஒரு ஓலை எழுதி அதைச் சின்னப் பெட்டியோடு தம் சம்பந்திராயரிடம் கொடுத்து வரும்படி ஒரு ஆளைக் கிராமத்திற்கு அனுப்பினர். ராயர் பெட்டி

யிலிருந்த சாமான்களை எடுத்துவைத்துக்கொண்டார். பெண் மணி ஒன்றும் அறியாதவள் போல் வாய் திறவாமல் பக்கத்திலிருந் தாள். ராயர் அவளைப்பார்த்து அம்மா உன் ஆத்துக்காரர் உனக்குச் சாமான் அனுப்பியிருக்கிறரென்ருர். பெண்மணி பதில் பேசாமல் சிரித்தாள். அப்போது அவளுக்குண்டான ஸந்தோஷத்திற் களவில்லை. தன் புருஷன் தன்பேரில் ஞாபகம் வைத்து இப்படி அனுப்பினரே என்பது அவளுக்கு அடங்காத ஆனந்தம் விளைத்தும் அதை அவள் வெளியாக்கவில்லை. அவள் தாயாரும் தகப்பனரும் மாப்பிளை நல்ல ஸாமான்களை அனுப்பியதற்கு ஸந்தோஷப்பட் டார்கள். மட்டுப்பால் வாஸனை அவர்களுக்கு முன்னே தெரியா தாகையால் மூங்கிற் குழாயிலுறைந்திருந்த அந்தப் பாலின் இறுகிய சிறு கட்டியை எடுத்துத் தணலில் போடவே வாஸனை அக்கம்பக் கம் ஊரெங்கும் வீசியது. வாசனையால் எல்லோரும் வந்து கூடி மோந்து பார்த்துக் களித்தார்கள். அக்காலத்தில் ரயில் வண்டி யில்லை. இந்த வாஸனைப் பண்டம் ஆனை மலையிலிருந்து விசேஷ மாய்க் கும்பகோணத்திற் கனுப்பப்படுவதுமில்லை. பிறகு 5, 6 நாள் கழித்து மாப்பிளை மாமனருக்கும் தபால் மார்க்கமாய்த் தாம் போய்ச்சேர்ந்து வேலை பார்த்து வருவதையும் வண்டிக்காரன் மூலமாகத் திருக்குடந்தைக்குச் சாமான் அனுப்பியிருப்பதையும் எழுதியிருந்தார். அந்த நாளில் கும்பகோணத்திற்கு வருந் தபால்கள் கிராமத்திற்கு ஒரு தரந்தான் அனுப்பப்படும். தபால் கடிதம் விசேஷமாய்க் கிராமாந்தரங்களுக்கு வருவதேயில்லை. ஆறு மாஸத்திற்கு ஒரு கடிதமும் வராது. ஊருக்கு ஒரு தபால் கடிதம் வந்தால் எல்லாரும், ஆவலாய் அதை வந்து கேட்டுப் போவார்கள். பனை ஓலைச் சுருள்கள் தாம் ஆள்கள் கொண்டு வருகிற வழக்கம். கடிதாசு எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் கிரா மத்தில் இரண்டொருவர்தா மிருப்பார்கள். மாமனர் மாப்பிளை க்குப் பதில் கடிதம் எழுதிக் கும்பகோணத்திற்கு அனுப்பித் தபால் பெட்டியில் போடும்படி செய்தார்.

இப்படிக் கோயன்புத்தூர் திருக்குடந்தையிலும் பெண்மணி யின் ஊரிலும் எல்லோரும் ஸவுக்கியமாயிருந்து வருகையில் மூன்று வருஷகாலமாய்விட்டது. பெண்மணிக்குப் பெரியவளா கும் பருவம் வந்தது. ஒருநாள் தாயாரும் பெண்ணுமாகப் புறக்க

டையிலிருக்கும் ஏய்க்காலண்டைபோய்க் கை கால் கழுவிக் கொண்டுவரும்போது தாயார் முன்னடி வந்துவிட்டாள். பெண் மணிமட்டும் நீர்க்கரையில் சற்றுத்தாமதித்தாள். அடுத்தகத்துக் கோமளம் அங்கே வந்து பெண்மணியைப் பார்த்து இங்கிதம் தெரிந்தவளானதால் பெண்மணி புஷ்பவதியாயிருக்கிறளென்று கண்டு கொண்டாள். அப்பொழுது சூரியன் உதித்து இரண்டுநாழிகையிருக்கும். புதன்கிழமை. உடனே கோமளி பெண்மணியை அழைத்துக்கொண்டு அவள்தாயாரிடம்போய் இச்சுபச்செய்தியைச்சொன்னள். உடனே அங்கிருந்த பெண்மணியின் தோழி ரங்கநாயகி தெருவிற்போய் மற்றைத் தோழிகளேயும் அழைத்து வந்தாள். தோழிப்பெண்கள் 7, 8 பேர் ஒன்று சேர்ந்தார்கள். ஊரிலுள்ள பெண்டுகளும் வந்து பார்த்துக் களித்தார்கள். பெண்மணியை மணைப்பலகையில் முற்றத்தில் உட்காருவித்துப் பெண்கள் பாடினர்கள். ஆடினர்கள். ராயரும் உடனே திருக்குடந்தைக்குச் சோபனஞ்சொல்லிவர அம்மாஞ்சி சீனுவை அனுப்பினர். சர்க்கரை வெற்றிலை பாக்கு புஷ்பம் பழம் எல்லாம் வாங்கிக்கொண்டு ராகுகாலத்திற்கு முன் திருக்குடந்தைக்குப்போய்ச் சோபனஞ் சொல்லிவரும்படி சொன்னர். கடைச் செலவிற்கு ஒரு வராகன் கொடுத்தனுப்பினர் ஜோஸ்யர்களெல்லாரும் பெண்மணி புஷ்பவதியான முகூர்த்தம் மிகவும் நேர்த்தியானதென்றும் அவளுக்குச் செல்வம் அமோகமாய்ப் பொங்குமென்றும் புருஷனுக்கு ஆறுமாசத்தில் வேலையுயருமென்றும், புருஷனும்பெண்சாதியும் ஒரு மனதாய்த் தானதருமங்கள் பண்ணுவார்களென்றும் நல்ல கீர்த்தியடைவார்களென்றும் சுபவாக்களித்தார்கள். பெண்மணியைப்பார்க்கவந்த பெண்டுகளில் எதிர்ச்சிறகிலிருக்கும் சுமங்கலி சானு பின்வருமாறு சொல்லலானள்:—

பெண்மணியின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம், நீர்க்கரையில் தெருண்டாள். வெறும் வயிருயிருக்கவுமில்லை. உடுத்தியிருந்தது செவப்புப்புடவை. முதலில் சுமங்கலி பார்த்திருக்கிருள், நல்லவேளையாய்க் கூட இருந்த தாயாரும் ஆத்துக்கு முன்னே போய்விட்டாள், இப்படி எல்லாம் ஆருக்குத் தான் நேரும். ஜோஸியமும் பார்க்கவேணுமோ, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் எல்லாம் நல்லதாகவே இருக்கிறது என்ருள்.

ஊரெங்கும் தோழிப் பெண்களின் கொண்டாட்டமும் ஆட்டமும் குதிப்பும் பாட்டுமாயிருந்தது. மூன்று நாள் பாலும் பழமும் மூன்றுதரம் கொடுத்துப் பெண்மணியின் மடியில் அப்பமும் குணுக்கும் கட்டப்பட்டன. ஊரில் தினந்தோறும் பெண்டுகள் கூடிக் குதித்துப் பாடி வந்தார்கள். ராயரின் பந்தக்கள் சிநேகிதர்களிடம்போய்த் தோழிப்பெண்கள் வேடிக்கைப்பாட்டுப் பாடித் தங்கள் வரும்படிக்கு யாதும் குறைவில்லாமற் செய்து கொண்டார்கள். சோழநாட்டில் இந்த நான்கு நாள்களிலும் பெண்கள் பாடும் பாட்டுப் புருடர் காதில் கேட்கத்தக்கதாகா.

இராயர் கிராமாதிகாரி யாதலால் நான்காவது நாளில் பெண்மணி, நீராடினவுடனே நதியின்றுறையிலிருந்து கிரகத்திற்கு வரப் பல்லக்கும் வாத்தியமும் காலை ஜாம நேரத்தில் நதிக்கரையில் ஆலமரத்தடியில் சித்தமாயிருந்தன, பெண்மணி தோழிகளுடன் வீட்டிலிருந்து நதிக்கு ஸ்நாநம்செய்யப் புறப்பட்டாள். தோழிகள் தங்கள் மடியில் செங்கற்பொடி உமி புளியிலை இவைகளை வைத்துக் கொண்டு இருபுறத்திலும் நின்றுகொண்டே பெண்மணியின்மேல் வாரி இறைத்துக்கொண்டு வந்தார்கள். இது பழய வழக்கம். இதன் கருத்து, பெண்ணைப்பார்ப்பவர்களின் திருஷ்டி தோஷம் அவளை அணுகாதபடி செய்வதற்காகத்தான். நதியிலிருந்து பல்லக்கில் வீதியில் வீட்டிற்கு வரும்போது ஒவ்வொரு வீட்டின் வாசல்களிலும் மஞ்சள்நீர் சுற்றுவதால் திருஷ்டிதோஷம் நீங்குகின்றது. இது கிராம்ய வழக்கம்.

(இன்னும்வரும்.)

தி. வேங்கடராம ஐயங்கார்.



கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

என் சிறு நேயர்களே! வாருங்கள். இந்த நாற்காலியைச் சுற்றி உட்கார்ந்து நான் சொல்லுங் கதையைக் கவனமாய்க்கேளுங்கள். காஞ்சி என்னும் ஊரில் ராமநாதஐயர் என்று ஒரு பிராமணர் இருந்தார். அவருக்கு எல்லாச் செல்வமும் இருந்தும் புத்திரச் செல்வம் இல்லாதிருந்தது. அவருங் கோயில் கட்டி, குளங்கள் வெட்டி, தரை மெழுகிப்பூசித்து அரசும் வேம்பும் பயிராக்கி முப்பத்திரண்டு அறங்களும் செய்துவந்தார். என்ன செய்தும் பலனைக் காணவில்லை. இப்படிப் பல காலஞ் சென்றது. "அடுத்து முயன்றாலு மாகநா ளன்றி-யெடுத்த கருமங்க ளாகா." என்றபடி எதற்கும் பிராப்தகாலம் வரவேண்டாமா? கடைசியில் வெகுகாலத்துக்குப் பிறகு ஈச்வரனுடைய கிருபையால் ஒரு ஆண்குழந்தை பிறந்தது. உடனே ராமநாதையர் மிகுந்த சந்தோஷசாகரத்தி லழுந்தினவராய்ப் பிராமணர், யாசகர் முதலிய சகலருக்கும் வேண்டியதைக் கொடுத்து, ஒரு மாதம் வரையில் எல்லார்க்கும் சர்க்கரை கற்கண்டு வழங்கி அந்தக் குழந்தையை நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்துவந்தார்.

"தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்-பூந்தாமரை யோன் பொறிவழியே—வேந்தே!—யொறுத்தாரை யென்செயலா

மூரெல்லா மொன்ருய்-வெறுத்தாலும் போமோ விதி."—என்றபடி தெய்வ கதியாய்ச் சிலநாளைக்கெல்லாம் அக்குழந்தை இறந்து விட்டது. உடனே ராமநாதையருக்கும் அவர் மனைவிக்கும் இருந்த துக்கத்தை நான் இங்கே சொல்லிமுடியாது. "கண் புதைந்த-மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்—சாந் தனையுஞ் சஞ்சலமே தான்."—என்றதையெண்ணி யொருவாறு தேறி அக்குழந்தையை யெடுத்துக்கொண்டு அவர்க ளிருவரும் சுடு காட்டிற்குச் சென்று மறுபடியுங் குழந்தையைப்பார்த்துப் புதைக்க மனம் வாராமல் அந்தக் குமாரன் மேல் படுத்துக்கொண்டு துக்கப் பட்டுச் சவத்தைப் புதைக்காமல் "கொண்டதோர் மகவி னுசை யாவியைக் கொள்ளை கொள்ள—முண்டகக் கரத்தா லேந்தி முரு கனை மடிமேல் வைத்தே-யண்டரு மறுகி யேங்க யலமலந் தரற்ற லுற்று" தாமதமாவதைப் பாராமல் அங்கேயே யிருந்தார்கள்.

அந்தவேளையில் நெருப்புப்போ லெரியப்பட்ட பசியையுடைய அவ்விடத்திலிருந்த ஒரு கழுகானது இந்தப் புத்திரசோக முடைய வர்களைப் பார்த்து, "ஓ மனிதர்களே! நீங்கள் ஆறறிவுடையவர்க ளாய்ப் பிறந்தும் சவத்தைக் கொணர்ந்து இந்த மயானத்தில் வைத்துக்கொண்டு வீண்காலம் போக்குகிறீர்கள். இது பொல் லாத பூத கணங்களும், பிர்ம்மராக்ஷஸும், பேய்களும் வாசம்பண்ணு கிற இடம். ஒருவேளை உங்களுக்கே அபாயம் நேரிட்டாலும் நேரிடும். சூரியன் மலைவாயில் விழப்போகிருன். பாசமான இருள் சூழ்ந்து மோசம் வருவதற்கு முன்னே செத்த பிணத்தைப் போட்டுவிட்டுச் சீக்கிரம் போய் விடுங்கள். "ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலு—மாண்டார் வருவரோ மாநிலத்தீர்!" என்ற வாக்கியத்தை மறந்து போனீர்களோ? நீங்களும் இந்த மண்ணுக்கு இரையாகப் போகிறவர்கள் தாமே. இப்போது இருக்கிறவர்களும் இனி இருப்பவர்களும் பிழைத்திருப்பார்க ளென்பது மெய்யோ? ஆச்சு, இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் மஹேசமுனி வந்து விடுவார். ஆனபடியால் உங்க ளுயிரைக் காப்பாற்றிக் கொண்டு ஓடுங்கள்" என்றது. அவர்களும் அந்தக் கழுகின் வார்த்தையில் மதிமயங்கிப் பிராண பயங்கொண்டு மைந்தனைப் புதைக்காமல் போட்டுவிட்டு ஓடினர்கள். கொஞ்ச தூரம் போகும்பொழுது குகைக்குள்ளிருந்து அங்கு நடந்ததையெல்லாம் பார்த்திருந்த ஒரு

நரியானது மெள்ள வெளிப்பட்டு இவர்களைப் பார்த்து, "ஐயோ! மனிதர்களே! நீங்கள் எவ்வளவோ அருமையான தவமியற்றிப் புத் என்னும் நரக வாயிலைக் கடக்கவேண்டிப் பெற்ற மைந்தனைப் போட்டுவிட்டு உங்கள் உயிரின் ஆசையால் ஒரு கழுகின் சொல்லைக் கேட்டு ஓடுகிறீர்களே. அப்படியே போயும் நீங்கள் என்ன நெடு நாளும் சாசுவதமா யிருக்கப் போகிறீர்கள்? பிள்ளையில்லாமல் நீங்கள் இருந்தும் இறந்தும் பிரயோஜனமென்ன? ஒரு வேளை பிராணவாயு கபாலத்தி லடங்கிச் சற்று நேரத்துக்கெல்லாம் பிராணன் திரும்பும். உயிர் போனபிறகு தொண்ணூறு நாழிகை வைத்துப் பார்க்கும்படி ஒரு விதிதாந்தமுண்டு. நூற்றிருபது நாழிகை வைத்துப் பார்க்கும்படி மற்றொரு விதிதாந்தமுண்டு. இந்தத் தவணையிற் பிழைக்காமற்போனால் அப்பால் நீங்கள் போய் விடலாம். அஸ்தமிக்க இன்னும் ஒருநாழிகைதான் இருக்கின்றது. அதுவரை யெவ்வளவோ தவமியற்றிப் பெற்ற புத்திரனைக் கண்ணு லாயினும் பார்த்துக்கொண்டிருங்கள். போங்களையா." என்று நரி வெகுவாய்ப் பரிதபித்துச் சொல்லிற்று. அதைக் கேட்டு அவர்களும் பிணம் பிடுங்கித் தின்னும் நரிக்கே இவ்வளவு இருக்கும்பொழுது நமக்கில்லாமற்போன தென்னவென்று திரும்பிப்போய்க் குழந்தை யைப்பார்த்துச் சிந்தை நையும்போது, கழுகு கண்டு, "நீங்கள் போனவர்கள் மறுபடி வந்ததென்ன?" என்று கேட்க, அவர்கள் நரி சொல்லியதெல்லாம் சொன்னார்கள்.

அதைக் கேட்டுக் கழுகு, ஹா! ஹா! வென்று கூவி "ஓ அறி யாதவர்களே! காலஞ்சென்று கழன்ற பிராணன் திரும்பி வருமா? "வினைபோக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தாற் றினைப்போ தளவுநில் லாதுகண் டாய்"—என்ற ஆன்றோர் வாக் கியம் உங்கள் காதில் விழவில்லையோ? எங்காவது செத்தவர் திரும்புவாரா? நீங்கள் எங்காவது பார்த்துங்கேட்டு மிருப்பீர்களா? நான் இந்தச் சுடுகாட்டில் ஆயிரம் வருஷமாய் இருக்கிறேன் இந்த மண்ணில் மாண்டவர்கள் கணக்கில்லை; மீண்டும் பிழைத்துப் பார்த்ததில்லை. மனுஷ்யர்களுக்குப் பாசபந்தம் அதிகமாகையால் அவர்கள் நற்கதியடைய வழிதேடிக் கொள்வதில்லை. இறைவன் கட்டளையின்படி எல்லாம் நடக்கும். அதற்கு நீங்கள் என்ன துக்கப்பட்டாலும் முடியாது. ஆசைபற்றி யாடும் பம்பரம்போ

லாகிய உங்கள் மனத்தைத் திடப்படுத்திக்கொண்டு, இனி நீங்கள் போகும் வழிக்காவது கொஞ்சத்துக்குள் கொஞ்சம் நற்கதி கிடைக்கும்படி வீட்டுக்குப்போய்ச் சுவாமியைத் தியானித்துக்கொண்டிருங்கள். வீணைசப் பேய் கையா லறைபட்டுத் துர்மரணமாய்ச் சாகவேண்டாம். மேலும் இருட்ட இன்னும் கொஞ்சநேரந்தானிருப்பதால் அப்புறம் உங்களுக்கு ஓட வழியும் தெரியாது" என்றது. அதை அவர்கள் மெய்யென்று ஒத்துக்கொண்டு ஓட்டமெடுத்தார்கள்.

போகும்பொழுது மறுபடி நரி கண்டு, "ஐயோ, மனிதர்களே! மறுபடி யேன் ஓடுகிறீர்கள்?" என்றது. அவர்களும் கழுகு சொன்னதைச் சொல்ல, நரி கேட்டு நகைத்து, "எல்லாப் படியாலுமெண்ணி னுவிவ்வுடம்பு—பொல்லாப்புழுமலிநோய் புன்குரம்பை" என்றிருக்கும் இந்தத் தேகத்தின்மீது அபிமானம் வைத்து உங்கள் கண்மணியைக் காட்டில் போட்டு ஓடுகிறீர்களே. உங்கள் மனந்தான் என்ன கல்லோ! எல்லாந் துறந்த ஞானிகளுக்கும் புத்ர வாஞ்சை போகாதே. இன்னும் சற்றுநேரமாவது உங்கள் குழந்தையைப்போய்ப் பாருங்கள். நாளைக்குப் பார்க்கப் போகிறீர்களா? செத்தவர் பிழைப்பதில்லையா? ஜகதீசனுக்கு அருள் வருமாகில் ஒரு நிமிஷத்தில் ஆகாதா? இந்தப் பூமியில் இறந்தபேர்களில் வெகுபேர் பிழைத்திருக்கிறார்கள். இவையெல்லாம் கூடும் கூடாதென்று நிர்ணய முண்டா? பரமேச்வரனுடைய திருவருள் எப்படியோ? யாரா லறியமுடியும்? உங்களிடத்திலும் ஈசனுக்கு அருள்வந்து பிழைப்பூட்டிக் கொடுத்தா லாகாதா? இதென்ன, உங்களுக்குக் கொஞ்சமும் புத்தியில்லை! இத்தனை ஆதுரமாகுமா? எத்தனையோ தவம்பண்ணி நீங்கள் பெற்றதும், அது இறந்து நீங்கள் எறிந்துவிட்டுப் போகிறதும் எனக்கு விந்தையாய் இருக்கிறது. எங்கள் மிருக ஜாதியிற்கூட இப்படி மனந் துணியாது. இப்பொழுது என்ன முழுகிப்போய் விட்டது? சாயங்காலம் வரையிலிருந்து, சர்வேசுவரனிடம் மனம் வைத்து அவரைத் தியானித்து, அழுது சலித்து மனம் வெறுத்துப்போய் விட்டால் ஒருவாறு தேறுத லுண்டாகும். 'சட்டி சுட்டதும் கை விட்டதும்' என்று இப்போது போய்விடுவீர்களாகில், அப்புறம் இதுவே நினைவாயிருக்கும். வீண்பொழுது போக்காமல் சரேலென்று உங்கள்

குழந்தையைப் போய்ப் பாருங்கள்" என்றது. அவர்களும் திற மான அறிவில்லாதவர்க ளாகையால் ஒன்றும் தோன்ருமல் அனலிலிட்ட மெழுகுபோன்ற உருகிய மனத்தையுடையவராய் இங்கும் அங்கும் அலேயும்போது கழுகு கண்டு, "இவர்கள் போய் விட்டால் பொழுதிருக்கும் பொழுதே அக் குழந்தையைத் தின்று வயிற்றை நிரப்பிக்கொள்ளலாம் என்ருல் இவர்கள் தொலேயும் வழியைக் காணும். மோசக்கார நரியும் அஸ்தமித்தால் நான் வெளிவரமாட்டே ஞதலால் தான் பிடுங்கித் தின்னலாமென்று பக்கபலங் கட்டிப்பேசி இவர்களே யனுப்புகிறது" என்று எண்ணி, உடனே, "அப்பா எனக்குப் பயமாயிருக்கிறது! பிர்ம ரக்ஷஸும் மகேசமுனியும் அதோ வருகிருர்கள்" என்று பறந்து ஓடிக் காட்டி யது.

இவ்விரண்டி னெண்ணத்தையும் இன்னதென்று அறிந்து கொள்ளமாட்டாத ராமநாதையரும் அவர் மனேவியும் இன்னது செய்வதென்று தோன்ருமல் மயங்கி நின்ருர்கள். சூரியனும் மேற்றிசைக் கடலுள் மூழ்கினுன். பாவியின் ஹிருதயம்போல் இருளும் சூழ்ந்துகொண்டது. இவைகளேயெல்லாம் ஸர்வாந்தர் யாமியாய்ப் பார்த்துக்கொண்டிருந்த உமாபதியானவர் நகைத்தார். உமையவளும் "திடீரென்று இது சமயம் நகைக்கக்காரணமென்ன?" என்று ஸ்வாமியைக்கேட்க, அவர் மயானபூமியில் நடந்தவைகளேச் சவிஸ்தாரமாகச் சொல்லி 'இது காரணமாய்த்தான் நான் நகைத் தேன்' என்ருர். உடனே, ஜகன்மாதா வானபடியால் உமைய வளுக்கு அப்பிராமணன் படும் பாடுகளேக் கேட்டவுடன் மனம் ஸகிக்காமல், "ஸ்வாமீ! இதுகாறும் வேடிக்கையாய் இருந்தது போதும். இனி, இருட்டிவிட்டபடியால் தாங்கள் இன்னமும் கிருபை செய்யாம லிருந்தால் தங்களுக்கிருக்கும் ஆபத்பந்து, அநாதரக்ஷகன், கிருபாசமுத்திரம் முதலிய பெயர்களுக்கு மஹி மையில்லாமற் போய்விடும். தவிர, எனக்கும் அவர்களே நேரிற் காண அவாவிருப்பதால் நாம் மாறுவேடம் பூண்டு சுடலேக்குச் சென்று பிராமணன் மனம் களிக்க அருள் செய்துவிட்டு வருவோம். வாருங்கள்." என்று சொன்னுள். தயாபரராகிய ஸ்வாமியும் 'அப்படியே செய்வோம்' என்று தான் சுடலே காக்கும் பறையன் போலவும், அம்பாள் பறைச்சி போலவும் வேடந்தரித்து ஹரிபிர்ம

மேந்திராதி தேவர்கள் ஆகாய வீதியில் வேடிக்கை பார்க்க இருவரும் சுடலைக்கு வந்து, "ஐயா பிராமணோத்தமரே! நகரும், நான் இச் சுடலை காப்போன். நீரும் காலைமுதல் இப் பிணத்தைக் கொணர்ந்து இன்னமும் புதைக்காமல் அல்லாடிக்கொண்டிருந்து விட்டபடியால், இனி, இதை நான் புதைக்கிறேன். நீர் வீடு போய்ச் சேரும்" என்று சொல்லி அப்பிணத்தை யெடுப்பவர்போல் தொடவும், தேவர்கள் புஷ்பவருஷம் வருஷிக்கவும், தம்பதிகள் வயிறு குளிரவும், கழுகு நரியின் மனம் பதைக்கவும் குழந்தையானது தூங்கி யெழுந்திருப்பதுபோல் எழுந்துவிட்டது. உடனே கருணாமூர்த்தியும், கழுகும் நரியும் சாம்பலாம்படி சபித்துவிட்டு அந்தர்த்தானமாய் விட்டார். இவையெல்லாம் ஈசன் செயலென்றுணர்ந்த ராமநாதையரும் ஓடி அக்குழந்தையை வாரி அணைத்து எடுத்துவரும் பொழுது இருந்த சந்தோஷத்தைச் சொல்லத் தரமன்று. பெற்றவர்களுக்கே அவ்வானந்தம் தெரியும்.

இப்படி இவர்கள் குழந்தையை யெடுத்துக்கொண்டு ஊருக்குள் வந்தபொழுது ஊரார்கள் ஒருங்கு கூடிச் "சுடுகாட்டிற்குப் போன பிணத்தைத் திரும்ப உயிருடன் தூக்கி வந்திருக்கிறபடியால் நீங்கள் ஊருக்குள் வந்தால் ஊர் நசித்துவிடும். ஆகையால் வரக்கூடாது" என்று ஒரு கட்டுப்பாடாய்ச் சொன்னார்கள். சந்தோஷசாகரத்தில் மூழ்கி வந்த ராமநாதையர் மனம் இவைகளைக் கேட்டவுடன் அலைகடல் துரும்புபோலாகி, "ஓ, ஊரார்களே! இக் குழந்தையை ஸர்வேசுவரனாகிய பகவானே நேரில் வந்து உயிர்ப்பித்துக் கொடுத்தார். அவருக்கே இது ஸம்மதமானால் உங்களுக்கென்ன ஆக்ஷேபம்?" என்றார். ஊரார்களோ "எட்டுத் திசையும் பதினாறு கோணமு மெங்குமொன்றாய்—முட்டித் ததும்பி மூளைத் தோங்கு ஜோதியை மூடரெல்லாங்—கட்டிச் சுருட்டிக் கக்கத்தில் வைப்பார் கருத்தில்வையார்—பட்டப் பகலை யிரவென்று சொல்லுமப் பாதகரே."—என்றபடியிருக்கும் அஞ்ஞானிக ளானபடியால் ராமநாதையரைப் பார்த்து, "உமக்கு ஈசுவர ஸாந்நித்யம் ஆனது உண்மையாயிருந்தால் நீங்கள் சுடலையிலிருந்து வந்த பாவம் போவதற்கு ஈசனருளால் மகிமையையுடைய கங்காநதியை இவ்விடமே யெல்லாருங்காண வரவழைத்து அதில் ஸ்நானம் செய்தபிறகு ஊருக்குள் வாருங்கள்" என்று ஒரே பிடியாகச் சொன்னார்கள்.

"மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்-வலியோர்தம் மைத்தா மருவில்-பலியேல்-கடவுளவிர்சடைமேற்கட்செவியஞ் சாதே-படர் சிறைய புள்ளரசைப் பார்த்து."—என்றபடி பகவானைப் பக்கத் துணையாய் நம்பியிருக்கும் ராமநாதையர் அம்பாளையும் ஸ்வாமியை யும் பலவாறு ஸ்தோத்திரம் புரிந்து, "ஆபத் பந்துவே! அந்த ஆபத்தில் வந்து ரக்ஷித்தருளியதுபோல் இப்போதும் வந்து அடியேனைப் பொய்யனுக்காமலும், மூடபக்தியுடனிருக்கும் பாமர ஜனங்களுக்குத் தங்கள் மகிமை வெளிப்படவும், இவ்விடம் கங்கை யுண்டாம்படி செய்து ரக்ஷித்தருளவேண்டும்" என்று சிலத்தில் கையால் ஒரு கோடிழுத்தார்.

உடனே, கருமணி, பிச்சோலை, எலுமிச்சம்பழம் முதலிய சின்னங்களுடன் நொப்பும் நுரையுமாய் கங்காதேவியானவள் மகாதேவனது ஆஞ்ஞையின்படியே பிரவாகமாய் வந்துவிட்டாள். உடனே ராமநாதையரும், அவர் மனைவி குழந்தை முதலியவர் களும் அதில் ஸ்நாநம் பண்ணி நிற்கவே, ஊரார்களும் இப்படிப் பட்ட பக்திமான்கள் மகிமையை யறியாமல் மனம் நோவப் பேசி விட்டோமே என்று திகிலடைந்தவர்களாய் நமக்கும் அந்தப் பாபம் தொலையட்டுமென்று அம்மகாநதியில் "பூவோடு சேர்ந்து நாரும் மணம் பெறும்."—என்பதுபோல், ஸ்நானம் பண்ணி பாபரகிதர் களாகி அவர்களைச சகல வாத்ய கோஷங்களுடன் அழைத்துப் போய் அவர்கள் கிருகத்தில் விட்டுவிட்டுத் தங்கள் தங்கள் இருப் பிடம் போய்ச் சேர்ந்தார்கள்.

பிறகு ராமநாதையரும் தம் குமாரனுக்கு ஈசுவரனின் ஸ்பரி சத்தால் பிழைத்தெழுந்தகாரணத்தால் ஹஸ்தாமலகன் என்று பெயரிட்டு வளர்த்துவந்தார். ஹஸ்தாமலகரும் பகவான் அனுக் கிரகத்தால் ஸகல சாஸ்திரங்களிலும் இவருக்கிணை யொருவரு மில்லை யென்னும்படி தேர்ச்சியடைந்து சகல நற்குணங்களும் பொருந்தியிருந்தார். இபபடியிருக்க; காசி மகாராஜாவிடம் மந்திரியாயிருக்கும் பத்மநாப ஐயருக்கு நெடுநாள் பிள்ளையில்லாம லிருந்து பின் அருமையாய்ப் பிறந்த மிக ரூபவதியான சுலோசனை யென்றொரு புத்திரிகா ரத்னம் இருந்தாள். அவள் கல்வியில் வாணியின் அவதாரமென்றே சொல்லலாம். அவளுக்கு விவாக காலம் நெருங்கியதால் பத்மநாபையரும் அவர் மனைவியும் நெடுகே

விசாரித்துக் கவலையுடன் யோஜித்துக்கொண்டிருக்குங் காலத்தில் இந்த ஹஸ்தாமலகரைப்போல் ஈசுவர கிருபையும், அழகும், கல்வியும், அறிவும் ஒருங்கமையப் பெற்றவர்களில்லை யென்று தெரிய வந்தது. உடனே பத்மநாபையர் புறப்பட்டு ராமநாதையரிடம் வந்து தம் எண்ணத்தைத் தெரிவித்தார். அவரும் மிக்க சந்தோஷத்துடன் சம்மதிக்க, எல்லாரும் பந்துக்களுடன் காசிமாநகருக்குச் சென்று வெகு வைபவமாய் ஹஸ்தாமலகருக்கும் சுலோசனைக்கும் விவாகத்தை நடத்தினார்கள்.

பின்பு, பத்மநாபையர், ராஜ்யத்திலிருந்து அலுத்து விட்ட படியால் தமது திரண்ட செல்வத்தையும் மந்திரி உத்தியோகத்தையும் ஹஸ்தாமலகருக்கு எழுதிக்கொடுத்து விட்டுத் தாமும் மனைவியும் வானப்பிரஸ்தாச்ரமத்தை மேற்கொண்டு வனம்போய்விட்டார்கள். பிறகு ஹஸ்தாமலகரும் "சகடக் கால் போல வரும்" செல்வத்தைக் கண்டு களிக்காமலும், கரையிலாக் கடல்போன்ற கல்வியிற் செருக்கடையாமலும், எல்லாம் ஈசன் செயல் என்று உணர்ந்து தாய்தந்தையரையும் தம் மனைவியையும் வைத்துக்கொண்டு அன்பு நிறைந்தவராய், ராஜனையும் ராஜ்யத்தையும் மிகவும் சீர்திருத்திப் பேரும் புகழும் பெற்றுச் சுகமாய் இருந்தார்.

ஆதலால், சிறுவர்களே! "கடவுளை நம்பினோர் கைவிடப் படார்."—என்பதை உங்கள் மனத்தில் திண்ணமாய் எண்ணித் தான் என்ற அகந்தையைத் தள்ளி இடைவிடாமல் ஈசன் சரணாரவிந்தங்களை ஸ்மரித்துக்கொண்டிருங்கள்.

பார்வதி.